# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

மே-2016
பருவம் 2 புனல் -20

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20




# சுதேச வணிகமும், பரதேச வணிகமும்



ராயல் சேலஞ்ச்

....அது உண்மை என்றால் இளைய ராஜாவும் கடும் கண்டனத்துக்கு உரியவராவார்.

# மதம் கொண்டு வந்தது சாதி-இன்றும் மனுசனத் தொரத்துது 'மனு'சொன்ன நீதி...

இந்த வரிகள் ஏதோ ஒரு பெரியார் இயக்கம் தமது கொள்கைப் பிரச்சாரத்திற்காக எழுதிய பாடல் வரிகள் அல்ல. மிகப்பெரும் பொருட்செலவில் தயாரிக்கப்பட உள்ள 'மருதநாயகம்' படத்தின் பாடல் தான். கமலஹாசன் தயாரித்து, மருதநாயகமாக நடிக்கப்போகும் இந்தப் படத்தின் இசை அமைப்பாளர் இளையராஜா. மேற்கண்ட பாடல் வரிகளை மிரட்டலான பின்னணி இசையோடு தனது குரலிலேயே பாடியுள்ளார் இளையராஜா.

இவ்வளவு தீர்க்கமான வரிகளை எழுதி, வெளியிடும் கமலஹாசன் தேவர்மகன், விருமாண்டி, சபாஷ் நாயுடு என்று படங்களுக்குப் பெயர் வைப்பது நேர்மையற்ற செயல். ஏற்கனவே, ஜாதிவெறியில் ஊறிக்கிடக்கும் மக்களை மேலும் உசுப்பிவிடுவதற்கே இதுபோன்ற ஜாதிப் பெயர்கள் பயன்படும். இது தொடர்பாக செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு, பெயர் வைத்ததைவிட அயோக்கியத்தனமாக, ஒரு பதிலைக் கூறியிருக்கிறார் கமல்.

"சாதிப்பெயர், சாதிப் பெயர்னு சொல்றீங்களே, முதல் தெருவிலிருந்து ஜாதிப்பெயரை எடுங்க. உங்க பேர்ல இருந்து ஜாதிப் பெயர எடுங்க" என்று கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் தன் பெயருக்குப் பின்னால் ஜாதிப் பெயரைப் போடும் வழக்கம் தோழர் பெரியாரின் நடவடிக்கைகளால் அழிந்தே போய்விட்டது. அதைத் தெரிந்தே, இல்லாத வழக்கத்தை விட்டு விடுங்கள் என்று கூறுவது தவறு. ஒருவேளை இந்தப் படம் ஜாதி ஒழிப்பைப் பேசும் படமாகக்கூட இருக்கலாம். அதற்காக ஜாதிப் பெயரை வைத்து அதை நியாயப்படுத்துவது தவறு.

தெருப்பெயரிலும், கடைப்பெயரிலும் உள்ள ஜாதிப்பெயர்களை நீக்க வேண்டும் என்று நீதிமன்றத் திற்கே போனால்கூட, அவை எல்லாம் எங்களது பழக்க வழக்கம், பண்பாடு, சாஸ்திர சம்பிரதாயம் என்று இந்துலாவைத் தூக்கிக்கொண்டு வருகிறார்கள். மருதநாயகம் படப்பாடல் போல, மனுசாஸ்திரம் தான் நீதிமன்றத்திலும் நம்மைத் துரத்திக்கொண்டு வருகிறது.

ஜாதிக்குப் பெயர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் இந்திய அரசியல் சட்டப்பிரிவுகளை உடைத்தெறியத்தான் 1957 ல் பெரியார், பல்லாயிரக்கணக்கான தோழர்களோடு, இந்திய அரசியல் சட்டத்தையே எரிக்கும் போராட்டத்தை நடத்திக்காட்டினார். தெருப்பெயரிலும், தன் பெயரிலும், வேறு எந்த இடத்திலும் ஜாதியின் அடையாளம் இருக்கக்கூடாது என்று போராடி, அந்த இலக்கு நோக்கிப் பல சாதனைகளைச் செய்து காட்டியுள்ள தமிழ்நாட்டில், "அவன நிறுத்தச் சொல்... நான் நிறுத்துறேன்" என்று நாயகன் வசனம் போலப் பேசுவது மிகவும் அயோக்கியத்தனமாகும்.




தெருவில் இருக்கும் ஜாதிப் பெயரை நீக்க வேண்டும் என்று யாரிடமாவது கோரினால், "கமலஹாசன் ஜாதிப்பேருல படம் எடுப்பான்... அவனையெல்லாம் கேக்காதீங்க...எங்கக்கிட்ட வந்துருங்க.." என்றுதான் மக்களிடம் இருந்து பதில் வரும்.

- இதன் தொடர்ச்சி பின் அட்டை உள்பக்கம்

அரசூர் அ.ப.சிவா

# நாலு பேரு நாலு விதமாப் பேசியது 4

## கருப்புச் சட்டைகள் கைகளில் தான் உள்ளது

தொலைபேசியைக் கண்டுபிடித்த கிரஹாம் பெல்லும் .மின்சாரத்தைக் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசனும், ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்களும் .சைக்கிளைக் கண்டுபிடித்த பெட்ரிக் மெக்மில்லனும் ,டீசல் எஞ்சினைக் கண்டுபிடித்த ரூடால் டிசலும்

இந்த வரிசையில் இன்னும் பிற நம் அன்றாட வாழ்வில் தவிர்க்க முடியாத அனைத்துக் கண்டுபிடிப்பு களையும் உலகுக்கு அறிமுகப்படுத்திய அந்த விஞ்ஞானிகள், தங்கள் கண்டுபிடிப்புகளான குறிப்புகளை எழுதி வைத்திருக்கும் மொழி எது என்பதை ஒருவர் கண்டுபிடித்து விட்டார். அத்தோடு நில்லாமல் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடு முழுதும் உள்ள IIT கல்வி நிறுவனங்களில் அந்த அறிவியல் மொழியை பயிற்றுவிக்கத் தனிப்பிரிவு துவக்கப்பட வேண்டுமென எனச் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்

வரும் காலங்களில் இந்தியா முழுதும் கிரஹாம் பெல்லும், தாமஸ் ஆல்வா எடிசனுமாக நிறைய பேர் வலம் வருவது உறுதி. அந்த அறிவிப்பைக் கொடுத்தவர் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்சுமிருதி இராணி.. அந்த அவியல் அடச்சே அறிவியல் மொழி சமஸ்கிருதம் ..

தம்பி விஜயன் கிட்ட இருந்தும், கலைக்குழு நாராயண மூர்த்திகிட்ட இருந்தும் வெள்ளிக் கிழமை போன் வந்தாப் போதும். மாலை தியேட்டரில் தான் சந்திப்பு. எப்பவுமே காட்சிக்குப் பத்து நிமிடம் முன்னாடி போறதுதான் எங்க வழக்கம். பொதுக்கூட்டத்துக்குப் போகிற பழக்கத்தில் போன பத்து நிமிடத்தில் இடைவேளை விட்டறாங்க .

நான் முகேஸ் அப்படின்னு புகை பிடித்தல் பற்றிய விளம்பரத்தை மாற்றி மோடி அரசு பதவியேற்றதிலிருந்து புதிதாக வருகிறது ஒரு விளம்பரம். இந்தியா ஒரு வரலாற்றுச் சிறப்புக்கு தயாராகி வருகிறது என்ற முழக்கத்தோடு .

நம்மூர்ல எல்லா ஜாதிக் கட்சி தலைவனுகளும் நாங்க ஆண்ட பரம்பரை, ஆத்தோரத்தில் ---------- பரம்பரை அப்படின்னு முழங்க, அந்த விளம்பரமோ ஆத்தோரத்தில் எல்லாம் வேண்டாம், கழிவறை கட்டிப் போங்க, அது தான் வரலாற்றுச் சிறப்பு எனச் சொன்னதோடு மட்டுமல்லாமல் சாப்பிடும் முன் கைகளைக் கழுவுங்கள் எனவும் அறிவுரை வேறு. கழுவறதுக்கும் போறதுக்கும் விளம்பரத்தில் இன்னும் அறிவுரை சொல்ல வேண்டி இருக்கிறது இந்த புண்ணிய பூமிக்கு.

இப்படிப் போனா எப்படி வல்லரசு ஆகறது என்றார் கலைக்குழு நாராயண மூர்த்தி. ஓ....வல்லரசு பழைய படமுங்க, அதில் நடிச்சவரு இப்ப வேற லெவலுல நடிக்க போயிட்டாருங்க என்றேன். தம்பி அது அந்த வல்லரசு இல்லீங்க. கலாம் கனவு கண்டாரு அல்லவா அந்த வல்லரசு என விளக்கினார் விஜயன்..

நீங்க வல்லரசு ஆகுங்க ஆகாம போங்க. காலோ, கையோ அகட்டி பாரதம் அமையுங்க அமையா போங்க. ஆனால் அந்த வரலாற்று, அறிவியல் சிறப்பு என்பது கழிவறை கட்டி போறது மட்டுமல்ல அதைச் சுத்தப்படுத்த மனிதனை நேரடியாக ஈடுபடுத்தாமல் இருப்பதிலேயே உள்ளது என்பதை மோடி அரசு புரிந்து கொள்ள வேண்டுமேன்பதே நம் இலக்கு. ஆம் அது கருப்புச் சட்டைகள் கைகளில் தான் உள்ளது.

## உலகம் தலை கீழாத் தொங்குது நியாயமா ?

இந்தத் தேர்தலில் அனைத்து அரசியல் கட்சிகளும் தங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கும் விசயங்களில் மது விலக்கைத் தாண்டி அடுத்த படியாக இருப்பது அனைவருக்கும் இலவசக் கல்வி, இலவச மருத்துவம் என்பதே.

மதுவிலக்கு, மதுவிளக்கு பற்றியெல்லாம் ஆயிரம் முறை அலசி ஆராய்ந்து விட்டதாலும் அடுத்தபடியாக இந்த இலவசக்கல்வி, மருத்துவம் பற்றிப் பார்த்தால் இல்லாத ஒன்றைத் தாங்களே கண்டுபிடித்துக் கொண்டு வந்து அதை நடை முறைப்படுத்த உள்ளது போல இந்த அரசியல் கட்சிகள் பீலா விடுவதைக்காணச் சகிக்க முடிய வில்லை.

நமக்கு இருக்கிற ஒரே சந்தேகம் எல்லாம் தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் இலவச மருத்துவமும், அரசுப் பள்ளிகளில் இலவசக் கல்வியும் ஏற்கனவே கிடைத்துக் கொண்டுதானே உள்ளது? ஆக, இந்த மாதிரி அறிக்கை விடுகிற அரசியல் வாதிகள் அரசுப் பள்ளி, அரசு மருத்துவ மனைப் பக்கமே போனதில்லை போலும்.

இதையெல்லம் பார்த்துக் கொண்டிருக்கிற போதே, எளிய பிள்ளைகள் சிலர் மதிய வெயிலில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த பெரியவரிடம், “தாத்தா நாங்க ஆட்சிக்கு வந்தா, நீங்க அரசு ஊழியர் உங்களுக்கு மாதம் முப்பதாயிரம் சம்பளம்” என்றபடி துண்டறிக்கை கொடுத்தபடி நகர்ந்தனர். அவர்கள் போன பின் தாத்தா என்னிடம் “பாவம் யாரு பெத்த புள்ளைகளோ சட்டை துணியெல்லம் நல்லாத்தான் போட்டுருக்குங்க.. ஆனா பாருங்க வெயில் அதிகம் அதான் இப்படி திரியுதுக..” என்றபடி வேப்ப மர நிழல் தேடி நகர்ந்தார். அவர் செல்பேசி எப்.எம் ல் பாடிக் கொண்டிருந்தது

**என்னம்மா தேவி ஜக்கம்மா**
**உலகம் தலை கீழாத் தொங்குது நியாயமா ?**



விஜய் பாஸ்கர்

# பால் கட்டு

**யாருமே எங்கேயுமே இதுமாதிரியெல்லாம் பிரச்சனை இருக்கிறது என்று சொல்லாமல் இருந்தால் ஆணுக்கு எப்படித் தெரியும்.**

பள்ளிக்காலங்களில் ஒரு பெண் டீச்சரைப் பார்த்து 'பால்பண்ணை' என்று சகமாணவர்கள் கூப்பிடுவார்கள்.

அவருடைய மார்பு பெரிதாக இருப்பதுதான் அதற்குக் காரணம். பெரிய மார்பில் நிறைய பாலிருக்கும். 'நிறைய பால்' பண்ணையில்தான் இருக்கும். அத்தகைய பெரிய மார்பகங்களைக் கொண்டுள்ளதால் அவரைப் 'பால்பண்ணை' என்று அழைப்பார்கள்.

அப்பெயரை நான் உச்சரிக்கவில்லையே தவிர பையன்கள் அப்படிச் சொல்லும் போது கலகலவெனச் சிரித்திருக்கிறேன்.

அதற்கும் முன் சிறுவயதில் 'சம்சாரம் அது மின்சாரம்' திரைப்படத்தில் லட்சுமி நடித்திருக்கும் கேரக்டருக்கு பால்கட்டி கொண்டது என்று துன்பப்படுவதாக ஒரு காட்சி வரும்.

ஒரு விநாடி இப்படின்னா என்ன? என்று தோன்றி பின் மறந்த காட்சி அது.

பொதுவாக பெண்ணின் மார்பு என்பது ஆணுக்கு உச்சமான இன்பத்தைக் கொடுக்கும் விசயம். பார்க்கும் பெண்களின் மார்புகளில் எல்லாம் தன் விழிகளைப் பதிக்காமல் இருக்க அவனால் முடியவில்லை.

ஆனால் அதன் பின்னால் பெண்கள் அடையும் துன்பத்தைப் பற்றி எந்த அளவுக்குத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்று தெரிய வில்லை.

மாதவிலக்கு, போன்ற விசயங்கள் பற்றிக்கூடக் கொஞ்சம் விழிப்புணர்ச்சி வந்தாற் போல இருக்கிறது. ஆனால் இந்த மார்பினால் வரும் துன்பத்தைப் பற்றி மிகக் குறைந்த விழிப்பே இருக்கிறது.

சமீபத்தில் அமரந்தா எழுதிய 'பால்கட்டு' என்றொரு கதையைப் படித்த பிறகுதான் எனக்கு இதன் வலி புரிந்தது. கதைச் சுருக்கத்தைப் பார்க்கலாம்.



மத்தியத்தர வர்க்கத்துப் பெண்ணுக்கு, வேலைக்கு போயே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தில் இருக்கும் பெண்ணுக்கு 'பால்கட்டுதல்' என்ற பிரச்சனை இருக்கிறது.

மார்பகங்களில் பால் அதிகமாகக் கட்டிக் கொண்டு வலியைக் கொடுப்பதுதான் இதன் அம்சம்.

மிக அதிகமாகக் கட்டிக்கொள்ள டாக்டரிடம் போகிறாள். நர்ஸ் பம்ப் வைத்துப் பாலை எடுக்க முயற்சி செய்கிறார். வலியால் துடிக்கிறாள் இவள்.

இவள் வலியால் துடிப்பதைப் பார்த்த நர்ஸ் "யார்கிட்டயும் சொல்லாதம்மா" என்று தன் வாயால் மார்பில் வாயைவைத்து பாலை உறிஞ்சித் துப்புகிறார்.

பின் பெண்ணின் முலைகளை ஆராய்ந்து, அதில் புண் இருப்பதாகவும், அதனால் பால் சரிவர வெளிவராமல் கட்டிக் கொள்வதாகவும் சொல்லி, அதற்கு ஒரு க்ரீம் கொடுக்கிறார்.

அந்த க்ரீமைத் தடவ வேண்டும். பின் குழந்தைக்குப் பாலைக் கொடுக்கும் முன் அதைச் சுத்தம் செய்ய வேண்டும். பின் மறுபடியும் தடவ வேண்டும் என்று நரக வாழ்க்கையை வாழ வேண்டியதாயிருக்கிறது.

காலை அலுவலகத்துக்கு வந்துவிட்டு மதியம் குழந்தைக்குப் பால் கொடுக்கச் செல்வதற்குள் அது மார்பில் கட்டிக் கொண்டு கெட்டுப் போய் விடுகின்றது.

இவளுக்குக் குழந்தை பால் குடித்தால் பாரம் குறையும் என்றிருக்கும் போது, குழந்தையோ கெட்டுப் போன பாலைக் குடிக்காமல் அழுகிறது.

மறுநாளில் இருந்து அலுவலகத்தின் பாத்ரூம் சென்று அவ்வப்போது மார்பைப் பிதுக்கி அவ்வப்போது பாலை எடுக்கிறாள்.

இப்படியாகப் பால்கட்டுதலால் அவள் படும் கஷ்டத்தை ஆசிரியர் கதை நெடுகச் சொல்கிறார்.

ஒருநாள் மாலை வீடு செல்லும் போது கதவு திறந்திருக்கிறது. வழக்கமாக இரவு லேட்டாக வரும் கணவன் அன்று சிக்கிரமே வந்திருக்கிறான். அதைப் பார்த்து மகிழ்ச்சி.அவனிடம் காப்பிக் குடிக்க வேண்டும் என்று கேட்க நினைக்கிறாள்.

ஆனால் மார்பு பாரம் தாங்க முடியாமல் குழந்தையை எடுத்து வராண்டாவிலேயே பால் கொடுக்கிறாள். குழந்தை குடிக்க ஆசுவாசப் படுகிறாள்.

ஆனால் கணவனோ உள்ளே போ உள்ளே போ, போ என்று விரட்டுகிறான். இவள் வேறு வழியில்லாமல் உள்ளே வருகிறாள்.

**நான் அம்மாவிடம் கேட்டேன் "ஏம்மா இத்தன வருஷம் உங்க கிட்ட ஃப்ரெண்டா பேசியிருக்கேன். இந்த விஷயத்த எனக்கு சொல்லவே இல்லை" என்றேன்.**

"வாசல்ல இருந்துதான் இதெல்லாம் செய்வியோ" என்று கணவன் அவள் முகத்துக்கு நேரே கையை நீட்டி கடுத்து வருகிறான்.

அவள் தலை கிறுகிறுத்துப் போகிறது.

இப்படியாகக் கதை முடிகிறது.

இதைப் படித்த பிறகுதான் பால்கட்டுதல் என்பதில் இவ்வளவு பிரச்சனையா என்று எனக்குத் தெரிந்தது. மனைவியிடம் கேட்டேன்.

"ஆமா அது எவ்வளவு பெரிய கொடுமை" என்று நிறையச் சொன்னார். நான் அவளிடம் கேட்டேன் "இது எனக்குத் தெரியாதே" என்றேன்.

"இதெல்லாம் சொல்லிட்டா இருப்பாங்க" என்ற பதில் கிடைத்தது.

அம்மாவுக்கு போன் போட்டுக் கேட்டேன்.

அம்மா இந்தக் கதையை ஆமோதித்து, பால் கட்டுதல் என்பது சில பெண்களுக்கு கொடுமையான விசயம் என்று விளக்கினார்.

நான் அம்மாவிடம் கேட்டேன் "ஏம்மா இத்தன வருஷம் உங்க கிட்ட ஃப்ரெண்டா பேசியிருக்கேன். இந்த விஷயத்த எனக்கு சொல்லவே இல்லை" என்றேன்.

யாருமே எங்கேயுமே இதுமாதிரியெல்லாம் பிரச்சனை இருக்கிறது என்று சொல்லாமல் இருந்தால் ஆணுக்கு எப்படித் தெரியும்.

அப்படி ஆணுக்குப் பெண்ணின் வலிதெரிவது இப்போதைய வன்புணர்வுக் கலாச்சாரத்தில் முக்கியத் தேவையாகும்.

என்னைக் கேட்டால் பிளஸ் டூ தமிழ் சிறுகதைகளில் ஒன்றாக அமரந்தாவில் 'பால் கட்டு' சிறுகதையை வைக்க வேண்டும் என்பேன்.

ஒருவேளை இக்கதையைப் படித்தால்

"பால் பண்ணை, இளநீ, காய், முலை, முயல் குட்டி" என்றெல்லாம் மார்பகங்களை பேசுவதை கொஞ்சம் ஆண்களாவது தவிர்ப்பார்கள்.

அந்தக் கொஞ்ச ஆண்கள் பிற்காலத்தில் நிறைய ஆண்களாக ஆகலாம்.

**பண்பட்ட சமூகத்தை அடைவதுதான் நம் நோக்கம் என்றால் இது போன்ற சிறுகதைகள் நிறைய வரவேண்டும். விவாதிக்கப்பட வேண்டும்.**

# நாங்கள் கல்லாய் இருக்க மாட்டோம்!



பூங்கொடி, தாராபுரம்

பெண்களுக்குத்தான் கற்பு; ஆண்களுக்கு வலியுறுத்தக் கூடாது என்கின்ற தத்துவமே தனியுடைமைத் தத்துவத்தைப் பொறுத்தது. ஏன் என்றால், பெண் ஆணுடைய சொத்து என்பது தான் இன்றைய மனைவி என்பவர்களின்நிலைமை

குடிஅரசு 1-3-1936

ஆண்களுக்குக் கற்பிருந்தால் அது தானாகவே பெண்களையும் கற்பாக இருக்கச் செய்யும், பெண்களுக்குக் கற்பிருந்தால் அது ஆண்களை கற்புடன் இருக்கச் செய்யாது. - குடிஅரசு-3-11-1929

பாலியல் வன்கொடுமையால் எந்த வயதுப் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்று எழுத யோசித்தால், 30 வயது, 40 வயதுப் பெண்கள் என்றால் இல்லையில்லை 50, 60, வயதுப் பெண்களும் தான் பாதிக்கின்றார்கள் என்று தோன்றுகிறது. சரி, சராசரியாக 20 முதல் 60 வயது என்று ஒரு முடிவுக்கு வரலாம் என்றால், 2 வயதுப் பெண் குழந்தை ஒன்று பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு இறந்துவிட்டாள் என்ற செய்தியும் இடியாய்க் காதில் வந்து விழுகிறது. பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப் படுவதற்கு வயது முக்கியமல்ல. அவள் பெண்ணாக இருந்தால் போதும் என்று வக்கிரங்கொண்ட ஒரு சமூகம் நினைக்கின்றது.

இதில் ஒரு பெரிய கொடுமை என்னவெனில் சொந்த மகளையும், சகோதரியையும் கூடப் பாலியல் தொல்லைகளுக்கு உட்படுத்தி அதன்மூலம் வீட்டில் கூட ஒரு பாதுகாப்பற்ற சூழலைப் பெண்கள் சந்தித்து வருகிறார்கள். ஆறறிவு பெற்று விலங்குகளிலிருந்து தன்னை மேம்பட்டவனாகக் காட்டிக்கொண்டு இந்த மாதிரியான கேடுகெட்ட செயலை செய்யும் மனித மிருகங்களை என்ன செய்வது?

அளவுகடந்த போதைப் பழக்கம், வக்கிரபுத்தி, அவரவர் வளர்ந்த சூழல், பெண்களைப் போகப் பொருளாக மட்டுமே பயன்படுத்தும் பெரும்பாலான சினிமாக்கள், கேளிக்கை நிகழ்ச்சிகள், போர்னோ கிராபிக் இணையதளங்கள் இவையனைத்தும் பெண்கள் மீதான வன்முறைக்கு, வக்கிரபுத்திகொண்ட ஆண்களால் சொல்லப்படும் காரணங்கள். தங்களுக்கு ஏற்படும் பாலியியல் உந்துதலைக்கூடக் கட்டுபடுத்த முடியாமல் அதனைத் தன் குழந்தைகள் மீதே காட்டும் கேடுகெட்ட வக்கிரபுத்தி கொண்ட ஆண்கள் சமூகம் தான் பெண்களை வீக்கர் செக்ஸ் (பலவீனமானவள்) என்றும், கட்டுப்பாடுடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் பாடம் எடுக்கிறார்கள். ஆண்கள்தான் மனவலிமையற்ற வீக்கர் செக்ஸ் என்பதற்கு அதிகரித்து வரும் பாலியல் கொடுமைகளே ஒரு சாட்சி.

டெல்லி மருத்துவ மாணவி நிர்பயா பாலியல் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் தண்டனை அனுபவித்து வரும் குற்றவாளியைப் பேட்டி கண்ட நிருபர் ‘ஏன் இப்படி செய்தாய்? என்று கேட்டதற்கு, “அந்தப் பெண் இரவு 11 மணியளவில் ஆண் நண்பருடன் இணைந்து அந்த ரோட்டில் நின்று கொண்டிருந்தால் அவள் எப்படி சரியானவளாக இருக்க முடியும்? தவறான நடத்தையுள்ளவளாகத் தானிருப்பாள்” என்று சிறிது கூட குற்றவுணர்வோ, மனவேதனையோ இன்றி கூறினான். அவ்வாறு அவனை சொல்லத் தூண்டியது, செய்யத்தூண்டியது எது?

“ஸ்திரிகளுக்கு மறைவான இடம் கிடைத்தாலும், ஆண்களின் கண்காணிப்பு இல்லாமல் இருந்தாலும் தவறு செய்வார்கள்: - மனுஸ்மிருதி

மனுசாஸ்திரத்தில் சொல்லியிருப்பதற்கும், அந்தப் பாலியல் குற்றவாளி சொன்னதற்கும் வேறுபாடு எதுவுமில்லை.



சமீபத்தில் உ.பி மாநிலத்தில் பசு மாட்டுக்கறி சமைத்தார்கள் என்று சொல்லி பி.ஜே.பி மற்றும் ஆர்.எஸ்.எஸ் குண்டர்களால் தாத்ரி என்ற முதியவர் அடித்தே கொல்லப்பட்டார். பாதிக்கப் பட்டவர் களைப்பார்க்க வந்த பி.ஜே.பி.யின் அமைச்சர் ஒருவர் அந்த இடத்திலேயே "உங்கள் வீட்டுப் பெண்களைக் கற்பழிக்காமல், உங்களைக் காயப்படுத்தியதோடு விட்டார்களே" என்று கூறுகிறார் எனில் பெண்களின் மீதான பார்வை எவ்வளவு வன்மத்துடன் இருக்கிறது என்று பாருங்கள். பசு மாட்டுக் கறிக்கும் பெண்ணுக்கும் என்ன சம்பந்தம்? பெண்களை உடல் ரீதியாகத் தாக்குதல் தொடுத்து அவளை நிலைகுலையச் செய்யும் பொதுப்புத்தி தான் இது.


நாட்டில் எங்காவது பாலியல் வன் கொடுமைகள் நிகழ்ந்து விட்டால் சம்பந்தப் பட்டவர் களைத் தண்டித்தும் பாதிக்கப் பட்டவர்களுக்கு நீதியையும் பெற்றுத்தர எந்தவித முயற்சியும் செய்யாமல், இந்த பலவீனமான ஆண்களெல்லாம் ஒன்று கூடி பாதிக்கப்பட்டப் பெண்ணின் நடை, உடை அவரது தனிப்பட்ட வாழ்க்கை முறையினை விமர்சிக்க ஆரம்பித்து, நீங்கள் இப்படிதான் பொதுவெளியில் நடக்கவேண்டும் என்று ஒரு புத்திமதிப் புத்தகமே எழுதி விடுகிறார்கள். ஒட்டு மொத்தமாக இந்த சமுதாயத்தின் பார்வையை பாதிக்கப்பட்ட பெண்ணுக்கெதிராகத் திருப்பி விடும் ஒரு மோசமான சூழ்நிலையைத்தான் இந்த ஆண் வர்க்கம் காலங்காலமாய் செய்து வருகிறது.

பெண்களுக்கெதிரான பாதுகாப்பற்ற சூழல் அதிகரித்துக் கொண்டே வருகிறது. முன்னாடி யெல்லாம் இரவு நேரங்களில் செல்லும் பெண்கள், பணிக்கு செல்லும் பெண்கள் தான் அதிகம் பாலியல் தொல்லைக்குள்ளானார்கள். ஆனால் இப்பொழுது பள்ளி செல்லும் குழந்தைகள் முதல் வீட்டிலிருக்கும் பாட்டிகள் வரைப் பாதிக்கப்படுகிறார்கள். இதில் பள்ளி செல்லும் பெண் குழந்தைகள் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களால் பாதிக்கப் படுவதுதான் மிகக் கொடுமை.

வீட்டிற்குள்ளே ஆசைக்கு இணங்க மறுக்கும் மனைவியை உடல்ரீதியாக, உள்வியல்ரீதியாக, கொடுமைப்படுத்தும் ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. யுத்தம், கலவரம், உள் நாட்டுச் சண்டை, ஏன் தெருச் சண்டைகளில் கூட முதலில் பாதிக்கப்படுவது பெண்களின் உடல் தான். தனி நபர் தாக்குதலில் முதலில் அவர்கள் செய்வது அவர்கள் வீட்டுப்பெண்களை வார்த்தையாலோ அல்லது உடல்ரீதியாக காயப் படுத்துவது தான். அடுத்த கிரகத்திற்குச் சென்று ஆராய்ச்சி செய்து வரும் இந்த நவீன காலத்தில் அடுத்த வீட்டு ஆண், உறவினர் மற்றும் ஆசிரியர்களிடம் கூட பெண் குழந்தைகளை நம்பி அனுப்ப முடியாத சூழலை எண்ணி ஆண்கள் வெட்கித் தலை குனிய வேண்டும்.

தெற்கு சூடானில் உள் நாட்டுக் கலவரம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த அரசு கலவரக்காரர்களை இராணுவத்தைப் பயன்படுத்தி ஒடுக்குகிறது. இதனால்

பாலின சமத்துவம்
இன்று எந்த
குடும்பங்களிலும்
கடைபிடிக்கப்படுவதாகத்
தெரியவில்லை.
குறிப்பாக நமது
தோழர்களின் வீட்டில் கூட
சமத்துவம் இருப்பதில்லை.
உலக அறிவியல்,
பகுத்தறிவு,
மனித நேயம் பேசும்
பெரியாரியல்வாதிகள்
வீட்டிலிருந்து இதனைத்
தொடங்குவோம்.



அந்த நாட்டின் பொருளாதாரம் மிகவும் பின் தங்கியுள்ளதால் இராணுவ வீரர்களுக்கு சம்பளத்திற்கு பதில் ஒருவர் இரண்டு பெண்களைப் பலாத்காரம் செய்துகொள்ளலாம் என்று ஒரு நாட்டின் அரசே அறிவிக்கின்றது. இப்படி மன்னர் காலம் முதல் இன்று வரை பெண்களின் உடல்மீது தான் பெரும்பான்மை யான அரசாங்கங்கள் நடக்கின்றன.

ஒரு பெண்ணை உடல் ரீதியாக தாக்குவது மட்டும்தான் பாலியல் வன்கொடுமை என்பதல்ல, சமூதாய ரீதியாக, உளவியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக வார்த்தைகள் ரீதியாகவும், சமய, இன, பழங்கால பழக்க வழக்கங்கள் ரீதியாக Face Book, Twitter மூலமாகவும் துன்புறுத்துவது பாலியல் வன்கொடுமை தான். இதற்குத் தீர்வாக, பாலியல் கல்வி, பாலியல் சமத்துவம், பற்றிய அறிவை நம் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் நாமும் கற்றுக் கொள்ள வேண்டும். மக்கள் நலனில் குறிப்பாகப் பெண்கள் நலனில் அக்கறை செலுத்த வேண்டிய நமது அரசு பெருகிவரும் பாலியல் குற்றங்களைத் தடுக்க போதுமான நடவடிக்கை மேற்கொள்ளாமல் தனது கடமையிலிருந்து விலகி நிற்கிறது. பெண்கள் சுதந்திரமாக, மகிழ்ச்சியாக, சமத்துவமாக நடத்தினால் தான் வீடும் நாடும் முன்னேறும்.

பாலின சமத்துவம் இன்று எந்த குடும்பங்களிலும் கடைபிடிக்கப் படுவதாகத் தெரியவில்லை. குறிப்பாக நமது தோழர்களின் வீட்டில் கூட சமத்துவம் இருப்பதில்லை. உலக அறிவியல், பகுத்தறிவு, மனித நேயம் பேசும் பெரியாரியல்வாதிகள் வீட்டிலிருந்து இதனைத் தொடங்குவோம். ஏற்கனவே பாலின சமத்துவம் கடைபிடிக்கும் நமது தோழர்கள் தான் நமக்கான முன் மாதிரி....

**பாலினக் கொடுமைகள் பெருகிவரும் இந்த நாட்டில் தான், பெண்தெய்வத்திற்கான சிலைகளும் அதிகம். அந்த சிலைகளைப் போல் இனி எப்போதும் நாங்கள் கல்லாய் இருக்க மாட்டோம். சாமி சிலைகளைப் போட்டுடைத்த பெரியாரின் பிள்ளைகள் நாங்கள். அத்துமீற நினைப்பவர்களை அடித்து நொறுக்க எங்கள் அய்யாவின் கைத்தடி எப்போதும் எங்கள் கரங்களில்..........**

பல்லடம் நாராயணமூர்த்தி,
வடிவேல்



திராவிடர் பண்பாட்டு வாழ்வு 4

# ஏற்பாடு செய்யப்பட்ட ஜாதி மறுப்புத் திருமணங்கள்

ஜாதிமறுப்புத் திருமணம் என்றாலேயே, எந்த அமைப்புகளிலும், இயக்கங்களிலும் பங்கேற்காதவர்களும் - கல்லூரிக்காலங்களில் காதலிப்பவர்களும் - பொதுவாழ்க்கை - சமூகத்திற்கான வாழ்க்கை என்று திட்டமிட்டு வாழாதவர்களும் நடத்திக் கொள்வதுதான் என்ற நிலை இப்போது நிலவுகிறது. ஜாதி ஒழிப்புதான் எங்களது முதன்மைக் கொள்கை என்று வாய்கிழியப் பேசும் பல அமைப்புகளும், பல தலைமைகளும் தமது அமைப்புகளின் தோழர் களுக்குக்கூட ஜாதி மறுப்பு திருமணத்தை அவசியமாகக் கூறவதில்லை. அதற்கான சூழலை உருவாக்கு வதில்லை.

அதேசமயம் எந்தக் கருத்தியல் பின்புலமும் இல்லாமல் இயல்பாகக் காதலித்து, திருமணம் என்ற நிலைக்கு வரும் பல ஜாதி மறுப்புத்திருமணங்களை பல இயக்கங்களின் தோழர்கள் நடத்தி வைக்கிறார்கள். ஆனால் காதலைக் கடந்து, 'ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படும் ஜாதி மறுப்புத் திருமணங்கள்'(Arranged Inter Caste Marriage) மிக மிக மிகக் குறைவாகவே நடைபெறுகின்றன.

ஆனால் 1970 – 80 களில் திராவிடர் கழகத் தலைவர் மானமிகு தோழர் வீரமணி அவர்கள் நூற்றுக் கணக்கான ஏற்பாடு செய்யப்பட்ட ஜாதி மறுப்புத் திருமணங்களை (Arranged Inter Caste Marriage) நடத்தி வைத்திருக்கிறார். அவரே ஏற்பாடு செய்து நடத்தி வைத்திருக்கிறார் என்பது இக்கால இளைஞர்கள் அவசியம் அறிந்து கொள்ள வேண்டிய செய்தி. அப்படி 1982 ல் காதல் திருமணமாக அல்லாமல், ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்ற – வெற்றி பெற்ற – ஒரு ஜாதி மறுப்புத் திருமண இணையரின் அனுபவங்களை இந்த நேர்காணலில் பார்ப்போம்.



கௌரி

தோழர் கௌரி. சொந்த ஊர் ஈரோடு. இவர் திருச்சி பெரியார் மணியம்மை இல்லத்தில் வளர்ந்தவர். தோழர் ஜோதிவேலு. சொந்த ஊர் நாகப்பட்டினம் மாவட்டம் தில்லையாடி கிராமம் இவர்கள் இருவரும் மயிலாடுதுறை பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டில் 04.04.1982 ல் ஜாதிமறுப்புத் திருமணம் செய்தவர்கள். பொறையாறு கிராமத்தில் 3 மகள்களுடன் வசித்து வந்தனர். தன்னுடைய முதல் மகள் பெரியார் செல்விக்குத் திருமணம் ஆனபிறகு தற்போது பல்லடத்தில் வசித்து வருகிறார்கள். இவர்களுக்கு மூன்று மகள்கள் பெரியார் செல்வி B.N.Y.S. (Natureopathy Doctor) திராவிட ராணி M.Ed Maths, அன்பு மணி MBA.

**கேள்வி : (கௌரி அம்மாவிடம்) உங்க சொந்த ஊர் எது? நீங்க எங்க படிச்சீங்க?**

*பதில் : என்னுடைய சொந்த ஊர் ஈரோடு. நான் 2வது படிக்கிற வரைக்கும் ஈரோட்டில் அப்பா கூட தான் இருந்தேன். அப்பா இறந்ததற்கு பிறகு எங்க சித்தி*

(அப்பாவோட 2-வது மனைவி என்னை திருச்சியில் இருக்கிற பெரியார் மாளிகையில் கொண்டு வந்து சேர்த்தாங்க. நான் 3-ம் வகுப்பு படிக்கிறப்ப இருந்து நான் அங்க தான் இருந்தேன். வளர்ந்தேன். அய்யா, மணியம்மையார் இருவரும் என்னை வளர்த்தார்கள்.

**நீங்க எத்தனை பேர் இருந்தீர்கள்? அய்யா, மணியம்மையார் அங்க இருந்த குழந்தைகளை எப்படி பாத்துகிட்டாங்க?**

எங்களை ரொம்ப நல்லாப் பார்த்துக் கிட்டாங்க. நாங்க மொத்த 300 குழந்தைகள் இருந்தோம். அதில் Hospital -ல இருந்து வந்த, ஆதரவற்ற குழந்தைகள், அம்மா அப்பா இல்லாத குழந்தைகள், கோவில் திருவிழாவில் காணாமல் போன குழந்தைகள் என 300 பேர் இருந்தோம். அப்பா, அம்மா இல்லாத குழந்தைகளுக்கு ஈ.வெ.ரா. அப்படின்னு இன்சியல் வச்சாங்க.

மணியம்மையார் எங்களை நல்லாப் பாத்துக் கிட்டாங்க. நாங்க எப்படி வாழணும் என்கிறதை ரொம்ப நல்லா சொல்லிக் கொடுத்தாங்க. இங்கிருந்து வெளியே போனதுக்கு அப்புறம் எந்தப் பிரச்சனை வந்தாலும் அதை எப்படி எதிர் கொள்ளணும், அப்படியிங்கிறதைச் சொல்லிக் கொடுத்தாங்க. கல்யாணம் முடிச்சதுக்கு அப்பறும் அவங்க நம்மள விட்டுட்டுப் போனாக்கூட எப்படி வாழணும் - நான் இல்லாத காலத்திலும்கூட நீங்க வாழக் கத்துக்கணும். அப்படின்னு சொல்வாங்க. நாங்க எப்படி சாப்பிட ணும்ங்கிறகூடச் சொல்லிக் கொடுத்து இருக்காங்க. இப்ப நான் எப்படி என்னுடைய குழந்தைகளைப் பார்க்கிறனோ, அந்த மாதிரி எங்களைப் பார்த்துக் கிட்டாங்க.

**அய்யா, அம்மா இவங்க 2 பேரும் இறந்ததற்குப் பிறகு உங்களை யார் பார்த்துக்கிட்டாங்க? உங்களுக்கு யார் திருமணம் பண்ணி வச்சாங்க?**

அவங்க ரெண்டு பேரும் இறந்ததற்குப் பிறகு அண்ணன்ஆசிரியர் கீ.வீரமணி, புலவர் இமயவரம்பன் இவங்க தான் எங்களைப் பார்த்துக்கிட்டாங்க. இவங்களை உறவுமுறை சொல்லிக் கூப்பிடச் சொன்னது அம்மாதான். மணியம்மையாரை அம்மா என்றும், பெரியாரை அய்யா என்றும், ஆசிரியர் வீரமணி அவர்களை அண்ணன் என்றும் உறவுமுறை சொல்லிக் கூப்பிடச்சொல்லிக் கொடுத்தாங்க. எனக்குத் திருமணம் அண்ணன் தான் பண்ணி வைச்சாங்க. அதுவும் அரசு வேலையில் இருக்கிற மாப்பிள்ளையை பார்த்து எனக்குத்திருமணம் செஞ்சு வச்சாங்க.

**உங்க திருமணம் உங்க சம்மதத்துடன் நடந்ததா? அது ஜாதி மறுப்பு திருமணமா? இந்த திருமணம் எங்க நடந்தது?**

இந்தத் திருமணம் செய்வதில் முதலில் எனக்கு விருப்பமில்லை. அதுக்கப்புறம் அண்ணன் என்னைக் கூப்பிட்டுப் பேசினாரு. அப்புறம் நான் சம்மதம் தெரிவிச்சுட்டேன். எனக்கு மட்டும் இல்லை. என்னோட திருச்சியில் இருந்தவங்க எல்லாருக்குமே ஜாதி மறுப்புத் திருமணம் தான் செஞ்சு வைச்சாங்க. எல்லா மாப்பிள்ளைகளும் அரசு வேலையில் இருக்கிறவங்களாப் பார்த்துப் பண்ணி வச்சாங்க. இப்ப எல்லாரும் நல்லா இருக்காங்க.

**உங்க திருமணத்துக்கு எதிர்ப்பு ஏதாவது இருந்ததா? உங்க வீட்டுல இருந்து உங்களைப் பார்க்க யாராவது வந்தாங்களா?**

திருமணத்துக்கு எதிர்ப்பு ஏதும் இல்லை. எங்க வீட்டுல இருந்து யாரும் வரல எனக்கு திருமணம் ஆனதும் அவங்களுக்குத் தெரியாது. என்னுடைய பெரிய பொண்ணு திருமணத்துக்குப் பின் தான் என்னோட வீட்டுல இருந்து வந்தாங்க. அப்பதான் நான் எங்கே இருக்கிறங்கிற விசயம் அவங்களுக்குத் தெரிய வந்துச்சு. அவங்க வந்து நீ எங்களோடேயே வந்திடு நீ இப்படி எல்லா ஜாதிகளோடு சமமாப் பழகுவது எங்களுக்குப் பிடிக்கலைன்னு சொன்னாங்க. அதுக்கு என்னோட பெரிய பொண்ணு, “இடையில் வந்தவங்க இடையிலையே போகட்டும். இவங்க ளுடைய உறவு நமக்குத் தேவையில்லை. நம்ம இப்ப வாழற வாழ்க்கை நிலையை மாத்தி அவங்களோட போக வேண்டாம்” னு சொல்லிட்டா, அதுக்கப்புறம் எந்தப் போக்குவரத்தும் எனக்கு இல்லை.

**ஜாதி இல்ல, கடவுள் இல்லன்னு சொல்லி அதன்படி வாழ்க்கை நடத்துனீங்க. அதை உங்கள் துணைவரோட குடும்பமும், அந்தக் கிராமமும் எப்படிப் பார்த்தன?**

என்னோட கணவரோட ஊரான தில்லையாடிக்குப் போனோம். அங்க எல்லாரும் என்னை (அவர் வீட்டிலேயும் சரி, வெளியிலேயும்) இழிவாகத்தான் பார்த்தாங்க. என்ன ஜாதியோ என்னமோன்னு சொன்னாங்க. தி.க.வில் இருந்த பொண்ணு எப்படி இருப்பாளோ என்னமோன்னு எல்லாரும் சொன்னாங்க. கூட்டுக் குடும்பத்தில் 15 பேர் இருக்கிற வீட்டுல தான் கல்யாணம் பண்ணிட்டு போனேன். காலப்போக்கில் என்னைப் புரிந்து கொண்டார்கள்.

என்னுடைய முதல் பொண்ணு வயித்துல இருக்கும் போது, எங்க பக்கத்து வீட்டுல இருந்தவங்க எனக்கு பால் விலைக்குக் கொடுக்கக்கூட மறுத்தாங்க. எங்களோட வயல்காட்டில வேலை செய்யறதுக்குக் கூட யாரும் வரல. ஏன்னா நாங்க கடவுள் இல்ல, ஜாதி இல்லை என்று சொல்றதால. அந்த ஊர்ல இருக்கிற பெரியவங்க, பொதுவுடைமைக் கட்சி சங்கத்துக் காரங்க கூட எங்கள் வயலுக்கு வேலைக்குப் போனா ஊரை விட்டு ஒதுக்கி வச்சிருவோம்னு சொல்லிட் டாங்க. அதனால யாரும் வரல. எங்களக் கூப்பிட்டு இந்த ஊர் கட்டுப்பாடோட இருக்கு. இங்க இருக்கிறவறங்க உங்களப் பாத்து கெட்டுப் போயிடு வாங்க. நீங்க கடவுள் இல்லை, ஜாதியில்லையினு சொல்றீங்க அதனால நீங்க வேனா இந்த ஊரை விட்டுட்டு போங்க. அதுதான் உங்களுக்கு நல்லது அப்படின்னு சொல்லீட்டாங்க. அப்புறம் நம்ம இங்க இருக்க வேண்டாம்னு முடிவு பண்ணி நாங்க பொறையாறுக்குப் போயிட்டோம்.

**ஜாதி, மத அடையளங்கள் இல்லாமல் வாழும் உங்களைப் பொறையாறில் எப்படிப்பார்த்தாங்க?**

*நாங்க போனப்ப எங்ககூட முதல்ல யாருமே சரியா பழகல. எங்க வீட்டுக்குப் பக்கத்துல மைதானம் இருக்குது. அங்க எல்லாக் குழந்தைகளும் விளையாடு வாங்க. அப்ப எங்க பொண்ணு விளையாடப் போனா, என்னோட பொண்ணு கூட சேர்ந்து விளையாடக் கூடாதுன்னு சொல்வாங்க. இல்லைன்னா, அவங்க குழந்தைகளைப் கூட்டிட்டுப் போயிடுவாங்க. எங்க பொண்ணு விளையாடச் சேத்திக்க மாட்டாங்க. எங்க பொண்ணு வெளியவே நின்று வேடிக்கை மட்டும் பார்ப்ப, நான் பொண்ணக் கூட்டிட்டு ஸ்கூல்ல விடப் போகும் போது, அங்க இருக்கிறவங்க என்னை விதவைன்னு நினைச்சு கண்டபடிப் பேசுவாங்க. கோயிலுக்குப் போறப்ப முண்டச்சி முகத்துலயா முழிக்கணும்?, காலையில் இவ முகத்தை பார்த்துட்டா போறதுன்னு கண்டபடி பேசுவாங்க.*

*அறிவில்லையா? நாங்க போறப்ப இப்படித் தான் வருவியான்னு பேசுவாங்க. ஒரு சிலர் நான் வர்றதப் பார்த்து திண்ணையில் கூட ஏறி நின்னுக்குவாங்க. நான் அவங்ககிட்ட சொல்லுல. நான் தி க வில் இருக்கேன். எந்த ஒரு அடையாளமும் இல்லாமத்தான் சுயமரியாதைத் திருமணம் செஞ்சேனு சொல்லுலே. நான் சொன்னாலும் கேட்கிற நிலையிலே அவங்க இல்லை. அப்புறம் குடும்ப நண்பர் ஒரு டாக்டர் சாந்தா அவங்கக் கிட்டச் சொல்லி அழுதேன். நீ இயக்க ரீதியா சரியா இருக்கிற. இந்த ஊருக்காகப் பொட்டு மட்டும் வைச்சுக்கோன்னு சொன்னாங்க. அப்புறம் நான் பொட்டு மட்டும் வைச்சுகிட்டேன். கொஞ்ச நாள் போகப் போக, பக்கத்துல இருக்கிறவங்க நல்லாப் பழக ஆரம்பிச்சாங்க. நான் அவங்ககிட்ட இயக்கத்தை பத்தி எதுவும் பேச மாட்டேன். மற்ற விசயங்களை மட்டும் பேசுவேன். இவங்க கட்சியில இருந்தாலும் நமக்கு எந்தப் பிரச்சனையும் இல்லைன்னு புரிஞ்சிட்டாங்க. நல்லாப் பழக ஆரம்பிச்சாங்க.*

**ஜோதிவேலு அவர்களிடம் சில கேள்விகள்**

**பெரியார் கொள்கை மீது உங்களுக்கு எப்படி ஈடுபாடு வந்தது?**

*பெரியார் கொள்கையில் ஜாதிமத வேறுபாடு இல்லாம இருக்கனும்ம்னு சொல்றது எனக்கு ரொம்பப் புடுச்சுது. பெரியாரை நான் 2 தடவை நேரில் பார்த்து இருக்கேன். அப்ப எனக்கு 10 வயது. அப்ப திருவாரூர்ல ஒரு பெரிய மீட்டிங் நடந்தது. திருவாரூர் தேருக்கு எவ்வளவு கூட்டம் இருந்ததோ. அந்த அளவுக்கு அவருடைய மீட்டிங்கில் கூட்டம் இருந்தது. நான் ITI படிக்கும் போது பெரியாரைப் பற்றி நிறைய செய்திகள் கிடைத்தன.*

*நான் டிரான்ஸ்போர்ட்ல வேலை செய்யறப்ப திருஞானசம்பந்தம் அவங்களோட நட்பு கிடைத்தது. நான் அவங்க வீட்டுக்குப் போனப்ப அங்கிருந்த பெரியாருடைய புத்தகங்களைப் படிச்சு அவரைப் பத்தி நான் அதிகமாக தெரிஞ்சுகிட்டேன்.*

**இயக்கத்துக்கு நீங்க வந்ததுக்கு அப்புறம் எந்த மாதிரியான வேலைகளைச் செஞ்சீங்க? அதுக்கு எந்த மாதிரியான எதிர்ப்புகள் இருந்தது?**

*மூட நம்பிக்கை ஒழிப்புப் பிரச்சாரம். அப்புறம் எங்க ஊர்ல நடக்கிற பெரியார் இயக்கப் பொதுக்கூட்டத்துக்கு ஒத்துழைப்பு குடுத்திருக்கிறேன். பெரியார் கொள்கைகளைப் பரப்புவதற்குப் பொதுவுடைமை கட்சிகளும் எதிர்ப்பு தெரிவிச்சாங்க. ஆனாலும் அதையும் மீறி நாங்க பிரச்சாரம் செய்தோம்.*

**உங்களுடைய திருமணத்தை பத்தி சொல்லுங்க?**

*எங்க ஊர்ல எல்லாம் திருமணம் பண்றதுக்கு ரொம்ப மூட நம்பிக்கை இருந்துச்சு. அப்பா இல்லா வீட்டில் பொண்ணு எடுக்க மாட்டாங்க. அதே மாதிரி அம்மா இல்லாத வீட்டில் பொண்ணு எடுக்க மாட்டாங்க. ஒரு சில வீடுகளில அப்பா அம்மா 2 பேரும் இருக்க மாட்டாங்க. அப்ப நான்," நம்ம ஏன் அப்பா அம்மா 2 பேரும் இல்லாத பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் பண்ணக் கூடாதுன்னு?" நினைச்சேன்.*

*அப்ப வந்த விடுதலை நாளிதழில் பெரியார் மணியம்மை ஆதரவற்ற இல்லம் நடப்பது பற்றித் தெரிஞ்சுகிட்டேன். இதில் இருந்து ஏதாவது ஒரு பெண்ணைத் திருமணம் பண்ணலாம்னு முடிவு பண்ணுனேன். அப்ப தோழர்கள் கிட்டச் சொல்லும் போது, மயிலாடுதுறை ஏட்டு இராஜமாணிக்கம் அய்யா அவர்களும் நெட்டை இராஜமாணிக்கம் அவர்களும் சொன்னாங்க. திருச்சியில இருக்கிற புலவர் இமயவரம்பன் அய்யாவைப் போய்ப் பார்த்தா அவங்க ஆசிரியர் கிட்டக் கூட்டிட்டுப் போனாங்க. அவரது முடிவின்படி எங்கள் திருமணம் நடை பெற்றது.*

**உங்களுடைய திருமணத்திற்கு உங்க வீட்டுல எதிர்ப்பு இருந்ததா?**

*ஆமாம். இருந்துச்சு. என்னோட அண்ணன், தம்பி, அக்கா, தங்கச்சி எல்லோரும் எதிர்ப்புத் தெரிவிச்சாங்க. அப்ப என்னோட தங்கச்சி சொன்னா, "நீ இந்த மாதிரிக் கல்யாணம் பண்ணினா, நான் தூக்குப் போட்டுச் செத்துருவேன்" அப்படின்னு சொன்னா. அதுக்கு நான் சொன்னேன். என்னைக் காப்பத்திக்கிற அளவுக்கு நான் வேளைக்கு போயிட்டு இருக்கேன். எனக்குப் புடிச்ச மாதிரி என் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்துக்கிறேன். நீங்க யாரும் தலையிட வேண்டாம் அப்படின்னு சொல்லிட்டேன்.*

**அந்த வெறுப்பு இன்னும் அப்படியே இருக்கா? இல்லையா?**

*திருமணம் பண்றப்போ இருந்த வெறுப்பு கொஞ்ச நாட்களிலே மாறிடுச்சு. கௌரியோட நடவடிக்கை பழக்க வழக்கம் இது எல்லாமே எங்க வீட்டுல எல்லாருக்கும் புடிச்சு போச்சு. வேறு ஜாதிப் புள்ளையா இருந்தாலும் இந்த மாதிரி இருக்கணும் அப்படின்னு சொல்லுவாங்க. எங்க குடும்பத்தில இருக்கிறவங்க எல்லாத்தையும் ரொம்ப நல்லாப்*

பாத்துக்கும். எங்க பக்கத்து வீட்டுக்காரங்க சொல்லுவாங்க Hostel-ல வளர்ந்த பொண்ணா இருந்தாலும் இந்த மாதிரி நல்ல புள்ளையைப் பாத்துக் கல்யாணம் பண்ணனும். அப்படியின்னு சொல்லுவாங்க.

**கௌரி ஜோதிவேல் இருவரிடமும்**

**உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? நீங்க மொட்டை அடிக்கிறது, சீர், சடங்கு அந்த மாதிரி ஏதாவது செஞ்சீங்களா?**

எங்களுக்கு 3 பெண் குழந்தைகள். 2 பேருக்குத் திருமணம் ஆகிவிட்டது. இன்னொரு பொண்ணு இருக்கா. நாங்க இவங்க 3 பேருக்கும் எந்த ஒரு சடங்கோ, சீர் அந்த மாதிரி எதுவும் செய்யலை. என்னோட கணவர் வீட்டிலிருந்து 3 பேருக்குச் சடங்கு செய்யலையின்னா குடும்பம் நல்லா இருக்காது. ஏதாவது ஒரு புள்ளைக்காவது சீர் செய்யுங்க அப்படின்னு சொன்னாங்க. ஏன்னா அவங்களுக்கு கடவுள் நம்பிக்கை அதிகம். புரட்டாசி மாதம் வீட்டிற்கு வந்தா தண்ணீர் கூட வாங்கிக் குடிக்க மாட்டாங்க.

என்னுடைய பெரிய பொண்ணு ஞாயித்துக் கிழமை பெரிய மனுசி ஆனாதால கண்டிப்பாகச் சீர் செய்யனும் இல்லையின்னா நாய்படாத பாடுபடும் அப்படின்னு பக்கத்துல இருக்கிறவங்க எல்லாரும் சொன்னாங்க. அதை நாங்க பெரிசா எடுத்துக்கல என்னோட புள்ளைகளை நல்லாப் படிக்க வைச்சேன். என் பெரிய பொண்ணை டாக்டருக்குப் படிக்க வைக்கலாம் அப்படின்னு சொன்னோம். அதுக்கு அவங்க வீட்டுல பொண்ணுங்கள எல்லாம் எதுக்கு அதிகமாப் படிக்க வைக்கனும்? எப்படின்னாலும் கல்யாணம் பண்ணி அடுத்த வீட்டுக்குப் போறவதானே அப்படின்னு சொன்னாங்க.

ஆனாலும் நாங்க படிக்க வைச்சோம். ஞாயித்துக்கிழமை வயசுக்கு வந்தா ரொம்ப கஷ்டப்படும் நாய் படாதபாடுபடும் அப்படின்னு சொன்னாங்க. அந்தப் பொண்ணு டாக்டருக்குப் படிச்சு கோவையில் உள்ள கே.ஜி.மருத்துவமனையில் டாக்டராக இருக்கார். அது மட்டுமில்ல சிறந்த டாக்டருக்கான பட்டம் “doctor of excellence” என்ற விருது 25.02.16 அன்னைக்கு ஆளுநர் திரு.ரோசைய்யா அவங்க கையால இந்த விருதை வாங்கியிருக்கு. அந்தப் புள்ளையைப் பத்தி என்னன்னமோ சொன்னாங்க. ஆனா அவ நல்லா இருக்கா, எந்தப் பிரச்சனையும் இல்லை.

**உங்களுக்கு, ஆண் குழந்தை இல்லைன்னு என்னைக்காவது கவலைப்பட்டு இருக்கீங்களா?**

நாங்க அந்த மாதிரி நினைச்சுக் கவலைப் பட்டதே இல்லை. ஆனா இப்ப பொண்ணுகளுக்குக் கல்யாணம் முடிச்சதுக்கு அப்புறம் பசங்களுக்குப் பசங்களாகவும் எங்களுக்கு மருமகன்களாகவும் 2 பேர் இருக்காங்க. அதனால எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை.

**நீங்க ஜாதி மறுப்பு திருமணம் செய்ஞ்சீங்க உங்களுடைய பொண்ணுகளுக்கு எந்த மாதிரி திருமணம் செஞ்சீங்க? இன்னும் ஒரு பொண்ணுக்குத் திருமணம் ஆகலைன்னு சொன்னீங்க அவங்களுக்கு எந்த மாதிரித் திருமணம் செய்வீங்க?**

நாங்க ஜாதி மறுப்பு திருமணம் தான் செஞ்சோம். எங்க பொண்ணுங்க 2 பேரும் அதே மாதிரி ஜாதி மறுப்பு திருமணம் தான். என்னுடைய பெரிய பொண்ணு பெரியார் செல்வி அவங்களோட இணையர் அ.ப.சிவா.

இவர் வேறு சமூகத்தை சார்ந்தவர் தான். இவங்க ரெண்டு பேருக்கும் நாளிதழில் விளம்பரம் கொடுத்து, அறிமுகமாகி, அதுக்கப்புறம் திருமணம் நடந்தது. இவங்களோட திருமணம் பெரியார் திராவிடர் கழகத் தலைவராக இருந்த கொளத்தூர் மணி தலைமையில் நடந்தது.

என்னுடைய 2வது பொண்ணு அன்புமணி, முத்துராஜ் இவங்க இருவரும் KNITTING COMPANY -யில் வேலை செய்யும் இடத்தில் அறிமுகமாகி, முத்துராஜ் அவருடைய விருப்பத்தை என்னோட பொண்ணுகிட்ட சொன்னாரு. எங்க பொண்ணு எங்க வீட்டுல வந்து பேசுங்க என்று சொன்னாங்க. வேறு ஜாதியாக நீங்க இருந்தாலும் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லையின்னு சொல்லிட்டா. அப்புறம் அவர் எங்க வீட்டுல வந்து பேசினார். நாங்களும் ஒத்துக்கிட்டோம். நாங்களே பதிவுத் திருமணமும் செஞ்சு வைச்சோம்.

கருப்புச் சட்டைக்காரர்களின் ஜாதி மறுப்புத் திருமணங்கள் என்பவை, ஆண் – பெண் பேதமற்ற சமத்துவ வாழ்க்கையை, பெண்ணின் விருப்பங்களைப் புரிந்துகொண்ட ஒரு வாழ்க்கையைக் கண்முன் காட்டுகின்றன. அதன் விளைவே இரண்டாம் தலைமுறை ஜாதி மறுப்புத் திருமணங்கள்.

இதோ இரண்டாம் தலைமுறையாகவும் – தமது வாரிசுகளுக்கும் ஜாதிமறுப்புத் திருமணங்களைச் செய்து வைத்து – அவர்களையும் சுதந்திரமாக வாழ வைக்கின்றனர். ஏதோ ஒரு வேகத்தில் – வயதுக்கோளாறாக ஜாதி மறுப்புத் திருமணங்களைச் செய்திருந்தால், எவரும் அதை அடுத்த தலைமுறைக்கும் நீட்டித்திருக்க மாட்டார்கள்.



பெரியார் நம்பி

**கற்பனைக் கதையல்ல; இன்றும் நடக்கும் அவலங்களின் தொகுப்பு**


# பண்டு கிராமத்துப் பண்ணையாள்

ஏனங்க வூர் கவண்ட்ரே! புதுசா அம்பிளிக்கிக்கி வந்திருக்குர டாக்டரு நம்மக்கிட்ட பண்ணக்கிருக்குற சக்கிலி, பறயனயெல்லாம் கூப்பிட்டு அவுரு ஆஸ்பத்தியில வேல கொடுக்குறாரு குட்டபுடுச்ச சீக்காலிகளுக்கு வைத்தியம் பாத்துக் கொணமாக்குறாரு. நம்ம தோட்டங்காட்டுல எரும கண்ணு மேக்கிற காலனியூட்டுப் புள்ளகுட்டிய அவுரு நடத்துற பள்ளிக்கோடத்துல சேத்துறாராம். இப்பிடியே போன குடியானவெ, பொழப்பு என்னாவுறது பத்துக்குழி காட்ட என்னமாதிரி ஒத்தயாளு பண்ணயங் கட்டமுடியுமா? இருக்குற தோட்டங்காட்ட குத்தகக்கி வுட்டுட்டு வேற பொழப்பத் தேடி டவுனுக்குசேவப் போவேண்டியதா என்றார் காளியப்பகவுண்டர்.

எங்களுக்கு மட்டுமென்ன அக்கறையில்லா மலாயிருக்கும்? பண்டு கிராமத்தச் சேந்த பதினெட்டுப்பட்டிவூர் நாட்டாமைங்க, ஊர் கவண்டருகெல்லா சேந்து போயி அந்த டாக்டர கேட்டோமில்ல, அதுக்கு அவுரு சொல்லுறாரு குட்ட வியாதிய முழுசா ஒழிக்கிறது டெல்லி சர்காரோட திட்டமாம், அதுல பாதிச்சவங்களுக்கு வேற பொழப்புக்கு வழிபண்ணச் சொல்லி அவுருக்கு நெலமும் கொடுத்து காசு பணமும் கொடுத்து வேண்டிய பாதுகாப்பு கொடுக்கச்சொல்லி கலக்கெட்டருக்கு உத்தரவு போட்டிருக்காங்களாம், போலீசுக்குவேற நெறய காசு பணங்கொடுக்குறாரு. அதனால போலீசு அவுருக்குச் சப்போட்டாயிருக்கு ஒண்ணுமே பண்ண முடியல என்றார் துரைச்சாமிக் கவுண்டர்.

இணையப்பிரித்துத் தனியாக அடைக்கப்பட்ட சேவல் ஒன்று தன் துணையை எண்ணி துன்பராகம் பாடியது கொக்கரக்கோவென, அதன் குரலோ "இங்கே நான் தனியாக இருக்கிறேன் என் துணையே நீ எங்கே இருக்கிறாய்" என்று தன் பிரிவின் தவிப்பை அடி மனதிலிருந்து வரவழைத்துக் கூவியதுபோல் இருந்தது. பாலியல் கலவியில் ஆண் பெண் இருவரும் ஈடுபட்டாலும் பலி என்னவோ பெண்ணுக்கு மட்டும் வேசி என்றும் தாசி என்றும் போய் சேருவதுபோல், கூவியது சேவல் என்றாலும் பழி என்னவோ கோழிக்குப்போய் சேர்ந்தது கோழி கூவியது என்று. தூங்கிக்கொண்டிருந்த காக்கை குருவிகளெல்லாம் காச்சு மூச்சென கானம் இசைத்தது காலைக் கதிரவனின் வருகையை உறுதி செய்ய

உழைத்துக் கலைத்த அசதியில் உறங்கிக் கொண்டிருந்த முத்தனின் வயிற்றுக்குள் குடல்கள் ஒன்றோடு ஒன்று உரசி உறுமி அடித்ததும் விடிந்தும் விடியாத காலைப்பொழுதில் விழுந்தடித்து எழுந்த முத்தன் அந்துபோன செருப்பைக்கூடத் தேட முடியாமல் விரைவாக தெருவோரக் கழிப்பறையைத் தேடி ஓடினான். பொழுது விடிந்துவிடுமோ என்ற அச்சத்தில் தன் வயிற்றிலிருந்த பொதியை இறக்கி வைக்க ஓடையோரமாக இருந்த புளியமரத்தின் மறைப்பைத்தேடினான்.



இங்குதான் ஆறுகால பூஜை செய்து அசைவம், சைவம் என்று ஆக்கிக்கொட்டினாலும் ஆறுமுகமோ, அய்யனாரோ, மாரியோ, காளியோ மலம் ஜலம் மட்டும் கழிப்பதில்லை. அதனால்தான் எந்தக் கோவிலிலும் கழிவறை இல்லை. சாமிக்கே மலம் ஜலம் கழிக்க மறைவிடம் இல்லாத போது மனிதனுக்கு மட்டும் கழிவறை எப்படி தேவைப்படும் வாஸ்து பார்த்து பூஜை அறை கட்டினாலும் கட்டுவானேத் தவிர, நோய் நொடி வராமல் தடுக்க கழிவறை கட்டுவானா? தோட்டம் காடு வாய்கால் வரப்பு என வசதியாக வாழும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கே கழிவறையின் தேவை புரியாத நிலையில் குடியிருக்கவே 10 க்குப் 10 அளவு குடிசையில் வாழும் சேரிமக்களுக்கு கழிவறையின் தேவை குறித்து கனவுகூடக் காணமுடியாது

புளியமரத்தின் மறைவில் தன் வயிற்றுப் பொதியை இறக்கி வைத்த முத்தன் வீட்டில்போய் கழுவுவதற்குள் தன் அழுக்கு வேட்டி அசிங்கமாகிவிடும் என்ற அச்சத்தில் இருட்டில் முற்புதருக்கு அருகே சிறு கல்லைத்தேட, சங்கம்புதர் முள் பக்கமாக கையை நீட்டினான். சுறுக்கென முள் குத்தியது, இருட்டில் குத்தியது முள் என்று தெரியாமல் வேட்டியை சுருட்டிப்பிடித்துக்கொண்டு விருட்டென வீட்டிற்கு ஓடினான், பொழுதும் விடிந்துவிட்டது சுருக்கெனப்பட்ட இடத்தில் சிறு காயத்தைக் காட்டினான் தன் மனைவி வீராயிடம் அந்த காயத்தினால் பெரிய தொந்தரவு இல்லாததால் இருவரும் அதைக் கண்டுகொள்ளவில்லை.

டேய் முத்தா... கஞ்சி பொழுதாச்சு எட்ர மணிக்குப் போற ரயிலும் போயிருச்சு. எருமைய வரப்புல கயித்த நீட்டிக் கட்டியிட்டு வுங்க வூட்டுக்குப் போயி, கஞ்சி குடுச்சுட்டு வர்றதுக் கெல்லாம் நேரமில்ல... சாளையில எருமைக்குக் காச்சின சோளை அம்பிளி மிச்ச இருக்கு. வுங்க பண்ணயக்காரிச்சி சாளையிலதா இருக்கா.... ஊத்தச்சொல்லி குடுச்சுப்புட்டு, செத்த வேகமா வாடா... மூனு பீசு கரண்டு போறதுக்குள்ள இந்த சோளக்காட்டுக்குத் தண்ணி பாச்சோணும்.

பாப்பாத்தி..., பாப்பாத்தி எங்க போனீங்க

வாடா முத்தா அந்தப் படல்ல மாட்டியிருக்குற வுங்குண்டாவ எடு. அம்பிளி ஊத்துரேன் மத்தி யானமா வூட்டுக்குப் போகும்போது எருமக் கட்டுத் தாரயில கொட்டுனதுபோக மிச்ச காய் இருக்கு எடுத்துப்போயி, வும் பொட்டாட்டிகிட்டக் குடு எதாச்சு கொழம்பு கிழம்பு வைக்கட்டும் என அழுகிப்போனதால் மார்கெட்டில் விலை போகாமல் திரும்பி வந்த கத்திரி, தக்காளிகளைக் காட்டினாள் குப்பாத்தாள்.

சரி சாமீ.. என குப்பாத்தா ஊற்றிய அம்பிளியைக் குடித்துவிட்டுச் சோளக்காட்டிற்குள் நுழைவதற்குள் இரண்டு முறை சிறுநீர் கழித்துவிட்டான் முத்தன். சித்திரை மாதத்து வெயில் காலை ஒன்பது மணிக்கே மண்டையைப் பிளந்தது. அதிலும் சோளக்காட்டின் வேக்காட்டைச் சொல்லவும் வேணுமா? குடித்த சோளக்கூழ் கழித்த சிறுநீர் போக மீதியும் வேர்வையாக வெளியேறியது. முத்தனுக்கு 11 மணிக்கெல்லாம் பசி எடுக்க ஆரம்பித்தது. பசித்தால் முத்தனால் வீட்டிற்குப் போய் விருந்தா சாப்பிட முடியும்? வாய்க்காலில் வந்த தண்ணீரைத்தான் அள்ளிக் குடிக்க முடிந்தது. தொட்டியில் குப்பாத்தா அலசி விடும் துணிமணி அழுக்குடன் வரப்பில் கட்டியிருந்த எருமையின் சிறுநீரும் அந்த தண்ணீரில்தான் கலந்து வந்ததென்பது பசிக்கும் முத்தனின் வயிறுக்குத் தெரியுமா? அள்ளிக் குடித்து பசியைப் போக்கிக் கொண்டான்.

வீராயி...ஏய் வீராயி... இவ எங்க போனவா ஆளக்காணாமே? ஏனம்மா ஏ வீராயப் பாத்தீங்களா எனக்கேட்டுக் கொண்டே தன் மனைவி வீராயியைத் தேடினான் முத்தன். அப்போது தலையில் தண்ணீர்க் குடத்துடன் தெருவில் வீராயி வந்துகொண்டிருந்தாள்

அலைஞ்சு திருஞ்சு வூட்டுக்கு வர்ற ஆம்பள, வெறும் வூட்டய பாக்கறது? நேரங்காலத்துல போய் தண்ணி தவுலு எடுத்தாந்தரக் கூடாதா?

உனக்கென்ன காத்தால அஞ்சு மணிக்கெல்லாம் எந்துருச்சு கண்ணத் தொடச்சுட்டு பண்ணயத்துக்குப் போயி எரும போட்ட, சாணியெல்லா எடுத்துப் போட்டுட்டு, குப்ப கூலத்தக் கூட்டி எருமக் கன்ன மேய்சுக் கட்டியிட்டு வந்துடற.

ஆனா ஏம்பொழப்பு அப்பிடியா இருக்கு? பாரு பத்து பதினோரு மணிக்கி குடியானத் தெருவுக்கு தண்ணிக்கி போனேன். ஒத்தக் கொட தண்ணிக்கி இம்புட்டு நேராமாயிடுச்சு. அடி கொழாயி என்னமோ சும்மாதா இருந்துச்சு ஒத்த சனத்தக் கானாம். அதமீறி வர்ரவுக அவிங்களுக்கே அடிச்சுகிட்டுப் போயிடுறாங்கே. ஏதாவது எளக்கப்பட்ட மகராசி யாருாச்சு வந்தாத்தா ஆச்சு. நம்மளத்தான் தண்ணிக்கொளாயத் தொடக்கூடாது, தண்ணிக் கொடத்த வெக்கக்கூடாதுன்னு கட்டு திட்டம் போட்டிருங்காங்கில்லோ?

கத்திரி வெய்யல்ல தல வாசல்லேயே செருப்பக் கழட்டிப்போட்டுட்டு வெறுங்கால்ல குடியானத் தெருவுல நெருப்புல நின்னமாதிரி இருந்துச்சு. இப்புட்டு நேரமா.. சீச்சீ இது என்ன பொழப்பு தாந்த ஜாதில பொறந்ததுக்கு நாயா பொறந்திருந்தாக் கூட தேவல. இன்னும் அழுக்குத்துணிவேற இருக்கு எந்த கவுண்ரு தோடத்துக்காச்சும் போயி அலசிப் போடலாமன்னா, ஒருத்தரும் வுட மாட்டே கிறாங்க. அதையுமீறித் தண்ணி பாயர வாய்க்காலுக்குப் போனா தண்ணியில சானிய கரச்சு உடுறாங்க. இல்லீன்னா அவிங்க அலசி வுடுர அழுக்குத் தண்ணில நம்ம துணிய அலச வேண்டியிருக்கு. மேலுக்கு தண்ணியூத்தற துன்னா ஏதாச்சு நோம்பு நொடின்னாத்தான் வுடுராங்க. இந்த லச்சனத்துல நம்மள சுத்தபத்த மாயிருக்க மாட்டேங்குறமுன்னு குத்தம் வேற சொல்லிக்கிறாங்க.

சரி... சரி... என்ன புள்ள பண்றது? நம்ம தலயெழுத்து இந்த தாந்த ஜாதியில பொறந்து சீப்படனுமுன்னு இருக்கு. எதாச்சு கஞ்சி கிஞ்சி இருக்கா?

சோளக்கழி இருக்கு கலப்ப கடையில வாங்கியாந்த மோரு இருக்கு இந்தா கெட்டியாக் கரச்சுக் குடி

சோளக்கழியில மோர ஊற்றிக் கரைத்தான் முத்தன். வாயில் வைத்ததும் என்ன புள்ள இம்புட்டு புளிப்பா இருக்கு, வாயில வைக்க முடியல அப்பப்பா பல்லெல்லாம் கடுக்குது.

என்னய்யா பண்றது, காசுக்குதான் வாங்கியாந்தேன். அந்தக் கலப்ப கடையில காப்பித் தண்ணிக்கிக் காச்சர பால்ல கெடக்குர ஆடயெல்லாத்தயும் ரெண்டு மூனாளக்கி ஒண்ணு

சேத்தி சிலுப்புர மோரத்தான் நமக்கு ஊத்துராங்க. இதயும் உட்டுட்டா என்ன பண்றது? நீயோ வருச தானியத்துக்கு பண்ணயத்துல இருக்க. நானும் கெடக்கிற கூலிநாலிக்கிப்போயி, புள்ளகுட்டியக் காப்பத்துறதுக்கே பத்தமாட்டேங்கிது. நாம என்ன பாலு வாங்கியா மோரு சிலுப்ப முடியும்?

பண்ணயத்துத் தோடத்துல காய் கொடுத் திருக்காங்க. வூட்டுல வச்சிருக்கேன் என குப்பாத்தா கொடுத்துவிட்ட கத்திரி தக்காளிகளைக் காட்டினான் முத்தன்.

என்னய்யா அம்புட்டும் அழுகலாயிருக்கு இதுல கொழம்பு வச்சா சீக்கல்ல வந்துரும்?

அழுகனதுபோக மிச்சமிருக்குறதப் பாத்து எடுத்து வையி... சும்மா குடுக்குறவங்ககிட்ட நல்லதாக் குடுங்குன்னு கேக்க முடியுமா? ஏதோ இதயாச்சும் குடுத்தாங்களேன்னு சந்தோசப்படுவோம் என்றான் முத்தன்.

முத்தன் குடும்பத்திற்குச் சத்தான உண வென்றால் மட்டுக்கறியைத் தவிர எதுவும் இல்லை. அது சத்தான உணவு மட்டுமில்லை மலிவாகவும் கிடைக்கும். எதாவது நோம்புநொடி என்றால் பன்னிக்கறியும் கிடைக்கும். அது ஆண்டுக்கு ஒரு முறையோ இரண்டு முறை மட்டுமே சாத்தியம். இதைத்தவிர சத்தான காய்கறிகளோ, கீரைகளுக்கோ வழியில்லை.

பண்ணையத்துத் தோட்டத்தில் அவர்களுக்குச் சமைக்கும் உணவுகள் ஏதேனும் மிச்ச மீதியானால் மட்டும் முத்தனுக்கும் அவன் குடும்பத்திற்கும் கிடைக்கும். சில நாட்களில் சமைத்து இரண்டு மூன்று நாட்களான மிகவும் நொந்து போன உணவுகளைப் போடுவார்கள் கிடைக்காத உணவுதானே என்று அதையும் ஆவலாக உண்டுவிட்டு வாந்தி பேதியால் துன்பப்படுவதும் உண்டு.

இதை உண்டுதான் கொங்கு மண்டலத்தின் விவசாயப் பண்ணைகளில் பண்ணையாட்களாகப் பல தலைமுறைகளாக ஒட்டுமொத்த தலித்துகளின் வாழ்க்கை முத்தனின் வாழ்க்கை போலவே ஓடுகிறது அதனால் நோய் எதிர்ப்பு சக்தி இல்லாமல் எளிதாக தொற்று நோய்கள் இம்மக்களைப் பற்றிக் கொள்கிறது.

நோய்எதிர்ப்புச் சக்தி குறைவாக உள்ளவர்களை எளிதில் பற்றிக் கொள்ளும் நோயான தொழு நோய்க்கு ஆளான ஒரு முதியவரிடமிருந்து வெளியேறிய கோடிக்கணக்கான நோய்பரப்பும் கிருமிகள் போடுவார்பட்டி முத்தனின் சேரியில் பலபேரைத் தாக்கியது. அந்தத் தாக்குதலில் முத்தனும் தப்ப வில்லை நாற்பத்தைந்து வயதில் உடலில் ஆங்காங்கே வெள்ளை வெள்ளையாகத் தேமல் பரவியது. அந்த இடத்தில் உணர்ச்சியற்றுப்போய் அரிப்பை ஏற்படுத்தியது. சொரியச் சொரிய கிருமிகளின் தாக்கம் அதிகமாகி முத்தனுக்கு உடல் முழுவதும் பரவி அழகான கட்டுமஸ்தான முத்தனின் உடல் அருவருப்பாக மாறியது.

ஏ புள்ள ஆராயி நல்லாருக்கியா எப்போ வூருலிருந்து வந்தே வும் புள்ளங்கெல்லாம் நல்லாருக்காங்களா? என்ன வூரு பக்கமே ஆளக்கானோம்? எம்புட்டு நாளாச்சுடி ஒன்னப் பாத்து என்றாள் அருவங்காட்டு அம்மினியம்மா.

சாமி, நம்ம மாரப்பப் பண்ணாடி தோட்டத்துல பண்ணக்கிருந்த எங்கண்ணன் பேரன் எரும தொரத்தியிட்டுப்போனதுல தடுமாறி கேணியில உழுந்து செத்தானில்ல, அந்தப் பெரிய காரியத்துக்கு வந்தேனுங்க என்றாள் ஆராயி.

ஆமாடி ஆராயி, பய பன்னெண்டு வயசுப் பயலா இருந்தாக்கூட செக்கச் செவேல்னு நல்ல அய்யூருட்டுப் பயலாட்டம் அம்புட்டு அழகு. சக்கிலிப்பயன்னே சொல்ல முடியாதுபோ. கேணி அம்புட்டொன்னு ஆழமில்லீயே? அந்தப்பயலுக்கு நீச்ச தெரியாதோ ஒருவேள? நீச்சத் தெரிஞ்சிருந்தா தப்பிச்சிருப்பானோ என்றாள் அம்மினியம்மா.

சாமி...நாங்கதான் தண்ணி பொழங்காத சாதியாட்டோமே! குடிக்கிற தண்ணியே நீங்க தகரக் கொவளயில ஊத்துறீங்க. சுத்துப்பக்குட்டு ஏறிகொளமுன்னு எதுலேயுமே நாங்க தண்ணீயத் தொடக்கூடாதுன்னு கட்டுப்பாடு இருக்குறப்போ, எப்பிடி சாமி நாங்க நீச்ச பழகுறது? இந்தப் பதினெட்டுப்பட்டியிலிருக்குற, பண்டு கிராமத்துல எங்க சாதிசனத்துக்கு ஆணு, பொண்ணு அத்தன பேருக்குமே நீச்ச தெரியாதுங்க சாமி. இப்பிடி ஏதாச்சும் நடந்தா நாங்க சாவுறதத் தவற, வேற என்ன பண்ணமுடியுமுங்க என்றாள் ஆராயி.

சரி அதவுடு, என்னாச்சு ஓ நாத்னா புருஷனுக்கு ரெண்டு மூணுநாளா அந்த வூட்டுல ஒரே கூட்டமாயிருக்கு? எனக்கேட்டாள் அம்மினியம்மா.

அது ஒன்னுமில்லீங்க சாமி, ஏதோ ஒண்ணுக்கு ரெண்டுக்கு ஒதுங்கப்போனெடத்துல மொன்னப் பாம்பு தீண்டியிருச்சாம். கைகால் வெரலெல்லா மொன்னயாய்ட்டு வருதாமாம். அதையும் ஒரெட்டுப் பாத்துட்டுப் போலாமுன்னு இருந்துட்டேனுங்க என்றாள் ஆராயி.

அவங்க அப்பனாத்தா என்ன பாவஞ் செஞ்சாங்களோ, பாவம் முத்தனப் பாதிச்சுருச்சு. சரி வெசனப்பட்டு என்ன செய்ய? என்னமோ அம்பிளிக்கியில புதுசா வந்திருக்க டாக்டரு இதுக் கெல்லாம் வைத்தியம் பாத்துக் கொணமாக்குறாரா மில்ல? கூட்டிப்போயிக் காட்டச்சொல்லு என்றாள் அம்மினியம்மா.

சரிங்க, நீங்க சொன்னீங்கின்னு சொல்றேனுங்க. முடிஞ்சா நானுங் கூடப்போறேனுங்க என்றாள் ஆராயி.

ஏய் மதினி அம்பிளிக்கியில புதுசா ஒரு டாக்டரு வந்திருக்காரா இந்த மாதிரி மொன்ன பாம்பு தீண்டுனவங்களுக்கு வயித்தியம் பாத்துக் கொணமாக்குறாராம். நாமளும் ஒரெட்டுப் போயி அந்த டாக்டருகிட்ட அண்ணனக் காட்டியிட்டு வரலாம் என்றாள் ஆராயி.

வீராயி, ஆராயி இருவரும் முத்தனை அழைத்துக்கொண்டு அம்பிளிக்கை தொழுநோய் மருத்துவமனைக்குப் புறப்பட்டார்கள்.

மருத்துவமனையில் கேட் வாட்ச்மேனிலிருந்து தோட்ட வேலைக்காரர் வரைக்கும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு, குடும்பத்தாராலேயே வெறுத்து ஒதுக்கப்பட்ட - தொழுநோயிலிருந்து சிறிது சிறிதாக குணமாகும் தொழுநோயர்களே பணியில் இருந்தனர். மருத்துவர்களைத் தவிர மற்ற அனைத்துப் பணியாளர்களுமே பெரும்பாலும் தலித் மக்களாகவே இருந்தனர்.

இங்க முத்தன் யாருங்க என செவிலியர் அழைத்தார்.

கண்ணு என்ற வூட்டுக்கார்தான் கண்ணு... என வீராயி கூறினாள்.

வாங்க, இங்க நில்லுங்க, உள்ள இருக்கறவரு வந்ததும் நீங்க போய் டாக்டர பாருங்க என்றார் செவிலியர்.

வாங்க இப்பிடி உக்காருங்க என்றார் மருத்துவர்.

சாமி நான் தாழ்ந்த சாதிக்காரனுங்க... நாக்கலியில ஒக்கரக்கூடாதுங்க என்றான் முத்தன்.

இது ஆஸ்பத்திரி இங்க எல்லாருமே ஒக்கரலாம். உங்களுக்கு எவ்வளவு நாளா இந்தச் சீக்கு இருக்கு சும்மா ஒக்காருங்க என்றார் மருத்துவர்.

சாமி ஒரு நா ஒண்ணுக்கு ரெண்டுக்கு ஒதுங்கப்போன எடத்துல மொன்னப் பாம்பு தீண்டுச்சுங்க அதிலிருந்து ஒடம்பு பூர வெள்ள வெள்ளயாத் தேமல் வந்துச்சுங்க. அரிப்புத் தாங்க முடியலங்க. ஆனா சொரணயே இல்லீங்க. சொருஞ்சா தடிப்புத் தடிப்பா வந்துடுதுங்க. கைகால் வெரல்ல புண்ணு வந்தா ஆற மாட்டேங்குதுங்க. கட்டுன பொண்டாட்டி, பெத்த புள்ளங்ககூடப் பக்கத்துல வர மாட்டேங்குதுங்க. அரளிக்காய அரச்சுக் குடிச்சுட்டுச் செத்துடலாமுன்னுகூட இருக்குதுங்க.

ஒடம்பு நல்ல இருந்தவரைக்கும் பண்ணயத்துல பண்ணைக்கிச் சேத்துனாங்க. இப்போ அவங்களு வேணாமுங்கறாங்க. நா வாங்குன கடனுக்கு என்னோட ஏழுவயசுப் பயல, எரும மேய்க்கப் பண்ணயத்துல சேத்திகிடாங்க. அவனயாச்சும் பள்ளிகோடத்துக்கு அனுப்பலாம்னு இருந்தேன். எங்க தலக்கட்டுல யாரும் படிக்கக்கூடாதுன்னு அந்தப் பழனியாண்டவன் எங்க தலையில எழுதியிட்டானுங்க என்றான் முத்தன்.

அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. உங்களுக்குக் கொணமாகுறவரைக்கும் நீங்க இங்கேயே இருக்கலாம். நல்லா சத்தான ஆகாரம் கொடுப்போம். இங்க உங்களால என்ன வேல செய்ய முடியுமோ அதச் செய்யுங்க. அதுக்குண்டான சம்பளம் கொடுத்துருவோம். மொதல்ல பண்ணயத்துல நீங்க வாங்குன கடனக் கட்டியிருங்க. நாங்க நடத்துற பள்ளிக்கோடத்துல ஒங்க பயலக் கொண்டாந்து சேத்துங்க. அவன நாங்க படிக்க வைக்கிறோம். உங்களக் கர்த்தராகிய ஏசு கிறிஸ்து ஆசீர்வாதிப்பார். உங்கள யாருக்காச்சும் படிக்கத்தெருஞ்சா அவங்கள இதப் படிக்கச்சொல்லிக் கேளுங்க, இன்னியிலிருந்து உங்க பேரு முத்தனில்ல மோசஸ் என பைபிளைக் கையில் கொடுத்தார் மருத்துவர்.

## கேள்விக்கனல்

ஜாதியில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றெண்ணி
மோதிக் கொள்வதில் அர்த்த முண்டோ?
உயர்ந்த ஜாதிஎன்று ஊக்கம் கொண்டு
உயிரைப் பிரித்திட உரிமை யுண்டோ?

ஜாதி யெனம் வியாதி பரவிய
நீதி மறந்த மானிடரே!
மோதி மரித்தாலும் சுயவாழ்வை இழந்தாலும்
ஜாதி ஒழித்திடல் வேண்டும்

ஜாதிக் கொடுமையை ஒழித்து விடு
ஆரியப் பார்ப்பனியத்தை அழித்து விடு
எதற்கிந்தக் கொடுமை நாடகங்கள்?
ஏனிந்த மனிதர்க்குள் பேதங்கள்?

பாசம் இதற்கென்ன ஜாதி?
நேசம் அதற்குண்டோ ஜாதி?
மானிட ஜாதி அது நமதுவழி
மனிதகுலம் அது நமது குலம்.



சித்தூர் சகுந்தலா





# பாலியல் சுரண்டலுக்கெதிரான போர்க்குரல்

எரிதழல்

சுனிதாகிருஷ்னன். இந்தப்பெயரைப் பேச்சளவிலும், எழுத்தளவிலும் மட்டுமே பெண்ணுரிமை பேசும் என்னைப் போன்ற பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. எவ்வித விளம்பரமும், ஆர்ப்பாட்டமும் இன்றி, பாலியல் வியாபாரத்தில் சிக்கித் தவிக்கின்ற பெண் குழந்தைகளையும், பெண்களையும் பெரும் சிக்கல்களைத் தாண்டிமீட்டு, அவர்களுக்கு கவுன்சிலிங் அளித்து, அப்பெண்கள் வாழ நினைத்த அற்புதமான வாழ்வை அவர்களுக்கு அமைத்துத் தரும் அரும்பணியைச் செய்து வருபவர் தான் சுனிதா. இதனை 'TED Talks' என்ற ஓர் நிகழ்ச்சி மூலம் அறிந்தேன். அவரைப்பற்றி நான்அறிந்த, வாசித்த சிலவற்றை உங்களோடு பகிர்கிறேன்.

விபச்சாரி....பெண்பாலுக்குமட்டுமேஉரிய மலடி, விதவை, அமங்கலி போன்ற ட்ரேட் மார்க் பெண்ணடிமை வார்த்தைகளுள் இதுவும் ஒன்று.

"விபச்சாரம் என்பது பெண்கள் அடிமைகள் என்பதைக் காட்டும் ஒரு குறிப்பு வார்த்தை என்றுதான் சொல்லவேண்டுமே ஒழிய வேறல்ல. விபச்சாரம் பெண்களுக்குத் தானேயொழிய ஆண்களுக்கு ஏன்இல்லை என்று பெண்கள் சிந்திக்க வேண்டும். ஆணுக்கு மட்டும் ஏன்விபச்சார தோஷம்இல்லை?" என்று 1930 களில் கேள்வி எழுப்பினார் புரட்சிகரப்பெண்ணியத்தின் தந்தை, பெரியார். அக்கேள்விக்கான பதில்தான் சுனிதாவும் அவருடைய ப்ரஜ்வாலா அமைப்பும்.

**சுனிதா. .ஓர்அறிமுகம்**

பெங்களூரில் 1972-ல் பிறந்த சுனிதாவிற்கு சிறுவயதிலிருந்தே பிறருக்கு உதவவேண்டும் என்ற மனப்பான்மை மிகுந்திருந்தது. 12 வயதில் சேரிகளிலுள்ள குழந்தைகள் கல்வி கற்க ஓர் சிறிய பள்ளியை நடத்தினார். 15 வயதில் தலித் சமூகத்திற்குக் கல்வியின் அவசியத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார். அவரின் பிரச்சாரத்தை வெறுத்தனர் சிலர். அவர்களுள் எட்டு ஆண்கள் மூலம் கடும் பாலியல் வன்முறைக்கு (Gang Sexual Violence) உட்படுத்தப்பட்டார்.

கடும் சிகிச்சைகளுக்குப் பிறகு அதிலிருந்து மீண்ட சுனிதா தனக்கு இப்படி ஒரு துயரம் நிகழ்ந்துவிட்டது என்று எண்ணி முடங்கி விடவில்லை. தனது முதுகலைப் பட்டப்படிப்பை முடித்தார். "பாலியல் வர்த்தகத்தில் சிக்கிய பெண்களின் வாழ்க்கை" என்ற தலைப்பில் முனைவர் பட்டமும் பெற்றார்.

அதன்பின், மிகத் தீவிரமாகக் களப்பணியாற்றத் தொடங்கினார் சுனிதா. பெண்களை அவமதிக்கும் 'மிஸ்வேர்ல்ட்' போட்டி நடத்தக்கூடாது என்று போராட்டம் நடத்திக் கைதானார். போராட்டத்தின் தலைவர் என்பதால் 2 மாதச் சிறைத்தண்டனையை அனுபவித்தார். அவரது போராட்ட வாழ்க்கை முறைக்கு அவரின் பெற்றோர்கள் ஒத்துழைப்பை நல்கவில்லை. எனவே, வீட்டை விட்டு வெளியேறி ஹைதராபாத் சென்றார். சேரிகளில் வாழும் மக்களின் நலனுக்காகப் பல பணிகளை மேற்கொண்டார்.

ப்ரஜ்வாலா அமைப்பு

1996 ஆம்ஆண்டில், மெஹ்பூப் கீ மெஹந்தி என்ற ஹைதராபாத் சிவப்பு விளக்குப் பகுதியில் வாழும் பெண்கள் அங்கிருந்து அகற்றப்பட்டனர். இதன் விளைவாக, விபச்சாரத்தின் பிடியில் அகப்பட்டு வாழ்ந்த ஆயிரக்கணக்கான பெண்கள் தங்கள் வீடுகளையும் இழந்தனர். அப்பெண்களும் அவர்களின் குழந்தைகளும் மீண்டும் வேறொரு பாலியல் வர்த்தகக் கும்பலிடம் சிக்கிவிடக்கூடாது என நினைத்தார் சுனிதா. எனவே தன் நகைகள் அனைத்தையும் விற்று, தன் நண்பருடன் இணைந்து அவர்களுக்கான மறுவாழ்வு மய்யமாக 'ப்ரஜ்வாலா' வைத் தொடங்கினார்.

இன்றுவரை, அவ்வமைப்பு 12,000 பெண்களை இக்கொடிய வர்த்தகத்திலிருந்து மீட்டு மறுவாழ்வு அளித்துள்ளது என்ற செய்தி, நாம் அனைவரும் சுனிதாவைப் பெருமையோடும் பிரமிப்போடும் எண்ணிப் பார்க்கவைக்கிறது. ஏனெனில் உலகத்திலேயே ப்ரஜ்வாலாவிற்கு மட்டுமே இப்பெருமை!!

மீட்கப்படும் பெண்களுக்கு வெல்டிங், கார்ப்பெண்டிங் போன்ற பல வேலைகளைக் கற்றுக் கொடுக்கிறது ப்ரஜ்வாலா அமைப்பு. அப்பெண்களின் உறவினர்களைக் கண்டறிய முயற்சிகள் மேற்கொள்கின்றனர். அவ்வாறு கண்டறிந்தாலும் சிலபெண்களின் பெற்றோர்களும், உறவினர்களும் சமூகத்தைக் கண்டு அஞ்சி அவர்களை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். குடுபத்தால் புறக்கணிக்கப்பட்ட பெண்கள்ப்ரஜ்வாலாவிலேயே நிரந்தரமாக இருப்பர். மீட்கப்படும் பெண்களுள் சிலருக்குத் திருமணம் செய்து வைக்கின்றனர். ஆனால் இச்செயல்கள் அனைத்திற்கும் அதிதீவிர ஆணாதிக்கச் சமூகத்திலிருந்து கடும் பிரச்சனைகளைச் சந்திக்கிறது ப்ரஜ்வாலா.

**தாக்குதல்கள் :**

மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் போது சுனிதாவும் அவ்வமைப்பினரும் பெரும் இன்னல்களைச் சந்திக்கின்றனர். ஒரு விபச்சார விடுதியிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களை மீட்கும் போது கடும் தாக்குதலுக் குள்ளானார் சுனிதா. அத்தாக்குதலினால் அவரது இடதுகாது சிகிச்சை அளிக்க முடியாத அளவிற்குச் சேதமடைந்தது. இதுபோல் 14 முறை தீவிரமாகத் தாக்கப்பட்டுள்ளார். ஓர்கும்பல் ஆசிட்வீச முயன்றபோது அதிலிருந்து தப்பித்தார். மேலும் பலமுறை கொலைமிரட்டல்களையும் சந்தித்துள்ளார். ஆனால் இவை எதையும் பொருட்படுத்தாமல், இன்றுவரை பெண்களுக்காக முழுநேரமாக உழைக்கிறார் சுனிதா.

**சுனிதாவின்கோபம்:**

சுனிதா பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். தனது கணவருடன் இணைந்து ஆவணப் படங்களை இயக்கியுள்ளார். விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம் பல சொற்பொழிகளை வழங்கியுள்ளார். அதில் பெரும்பாலான இடங்களில் கோபம் பொங்க சுனிதா கூறுவதாவது:-

"பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் வன்கொடுமையைவிடப் பெரிய கொடுமை என்னவெனில், சமூகம் அவர்களை நடத்தும் முறைதான். எனக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமையினால் ஏற்பட்ட பாதிப்பைவிட, என்னைச் சுற்றியுள்ளவர்களின் ஒருவிதமான பார்வையும் அவர்களின் பேச்சுமே அதிகபாதிப்பை ஏற்படுத்தியது. என்னை அக்கொடுமைக்கு உட்படுத்திய ஆண்களை நோக்கி ஒருகேள்விகூடக் கேட்கப்படவில்லை.

மாறாக, "நீ ஏன் அங்கு சென்றாய்? ,உனக்கு எதற்கு இவ்வளவு சுதந்திரம்?" என்று என்னை நோக்கியே பல கேள்விகளைத் தொடுத்தது சமூகம் . பாலியல் வன்கொடுமையிலிருந்து தப்பிக்கும் ஒவ்வொரு பெண்ணும் கொலையைவிடக் கொடூரமானமன பாதிப்பிற்கு ஆளாகின்றனர். ஆனால், இவை அனைத்தும் எனக்குள் அச்சஉணர்வை ஏற்படுத்தவில்லை; கடும் கோபத்தையே ஏற்படுத்தியது.

ஓர்ஆணாதிக்கச் சமூகத்தில், பெண்களை ஆளும்வர்க்கமாகவே ஆண்கள் வளர்க்கப் படுகின்றனர். பெண்கள் ஆண்களுக்கான பொருட்களாகவே பாவிக்கப்படுகின்றனர். அதுவே பெண்களுக்கெதிராக நடக்கும் அனைத்து வன்முறைகளுக்கும் ஆணிவேர்" என்கிறார்சுனிதா.

"பாலியல்தொழில்" என்று ஆண் உலகத்தினால் பெயர் சூட்டப்பட்ட இக்கொடூரமான சதை வர்த்தகத்தில் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண் குழந்தைகளும் (3, 4 வயதுக் குழந்தைகள் உட்பட), பெண்களும் கடத்தப்பட்டும் விற்கப்பட்டும் வருகின்றனர். . நம்நாட்டிற்கு இன்னும் ஏராளமான சுனிதாக்களும் ப்ரஜ்வாலாக்களும் தேவை.



தாராபுரம் அ.கிருஷ்ணகுமார், வழக்குரைஞர்

# பறிபோனதா மகளிர் சொத்துரிமை ?

கடந்த சில நாட்களாக நடுவண் அரசு (மத்திய அரசு) 13.05.2015 தேதியில் இயற்றியுள்ள திருத்தம் மற்றும் நீக்கச் சட்டம் (The repealing and Amendment Act 17 of 2015) திருத்தப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டம் 39/2005 ( The Hindu succession (amended) Act 39 of 2005) சட்டத்தின் வழியாக பெண்களுக்கு அளிக்கப்பட்ட சொத்துரிமையை இழக்கச் செய்துவிட்டதாக சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பேசப்பட்டு வந்தது. மத்திய அரசின் மேற்குறிப்பிட்ட சட்டத்தின்படி பெண்கள் சொத்துரிமையை இழந்துவிட்டதாக திராவிடர் விடுதலை கழகத்தின் பொதுச்செயலாளர் தோழர் விடுதலை இராசேந்திரன் அவர்கள் வாட்ஸ்அப்பில் தமது குரலிலேயே Audio ஆகப்பேசி வெளியிட்டார். "குடும்பச்சொத்தில் பெண்களுக்கு உரிமை வழங்கும் சட்டத்தை நீக்கியது மோடி ஆட்சி" என்ற தலைப்பில், தி.வி.க வின் அதிகாரப் பூர்வ ஏடான புரட்சிப் பெரியார் முழக்கம் 07.04.2016 இதழில் செய்தி வெளியானது. தி.வி.க வின் முகநூல் பக்கத்திலும் பதிவு போடப்பட்டது. அதைக் கண்டு காட்டாறு குழு தோழர்கள் மற்றும் பல்வேறு இயக்கங்களின் தோழர்கள் தங்களின் முகநூல் பக்கங்களிலும் அந்தத் தகவலைப் பதிவு செய்தனர்.



உண்மையில் நடுவண் அரசு 2015 இல் இயற்றியுள்ள சட்டத்தின் வழியாக பெண்களின் சொத்துரிமை பாதிக்கப் படுகிறதா என்பதை அச் சட்டத்தின் தலைப்பை மட்டும் கருத்தில் எடுத்துக் கொண்டு விவாதிப்பது சரியான அணுகுமுறை யல்ல. 2015 திருத்தம் மற்றும் நீக்கல் சட்டத்தின் குறிக்கோள் (purpose) பற்றியும் அச்சட்டத்தின் செயல்படும் தன்மை (operation) பற்றியும் சரியான புரிதலை உருவாக்குவதும் - நீக்கச் சட்டத்தையும் அதன் தோற்றம் மற்றும் பயன்பாட்டையும் சட்டப் பகுப்பாய்வு செய்து தெளிவுபடுத்தவுமான முயற்சியே இக்கட்டுரையாகும்.

ஏற்கனவே இயற்றப்பட்ட ஒரு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமானால் திருத்தம் செய்வதற்கென்று ஒரு திருத்தமைவுச் சட்டம் எளிதாக புரிந்து கொள்ள திருத்தல் சட்டம்(Amended Act) நமது சட்ட முறைப்படி இயற்றப்பட வேண்டும். திருத்தல் சட்டம் இயற்றப்பட்ட பிறகு அச்சட்டம் என்னென்ன திருத்தங்களை முன்மொழிகிறதோ அவைகள் முதன்மை சட்டத்தில் (Original act) திருத்தப்பட்டு சேர்க்கப்படும். முதன்மை சட்டத்தை திருத்துவதற்காக இயற்றப்பட்ட திருத்தச் சட்டத்தின் குறிக்கோள் முதன்மை சட்டத்தில் அத்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்ட பின்னர் நிறைவடைந்து விடுகிறது.

**திருத்தல் மற்றும் நீக்கச்சட்டம் எந்த வகையிலும் பாதிக்காது**

திருத்தல் சட்டத்தின் குறிக்கோள் நிறைவடைந்த பிறகு அத்திருத்தல் சட்டம் தேவையற்ற ஒன்றாகி விடுகிறது. இப்படி பல சட்டங்கள் இயற்றப்பட்ட பிறகு அவைகளில் திருத்தங்கள் மேற்கொள்ள பல சட்டங்கள் இயற்றப்பட்டு அத்திருத்தங்கள் முதன்மை சட்டத்தில் சேர்க்கப்பட்ட பிறகும் திருத்தல் சட்டங்களை வைத்துக் கொண்டிருப்பதால் நிர்வாக ரீதியாக பல்வேறு சிக்கல்கள் எழுந்த காரணத்தாலும் சட்டங்களின் அளவுகளை குறைக்க வேண்டியும் திருத்தல் சட்டங்களை நீக்க வேண்டிய தேவை எழுந்தது. இதனால் பல்வேறு காலகட்டங்களில் நீக்கல் சட்டங்கள் இயற்றப்பட்டு தேவையற்ற சட்டங்கள் நீக்கப்பட்டுள்ளன.

முதற்கண் Repeal என்ற சொல்லுக்கான பொருள் பற்றி அறிய வேண்டி தேவை உள்ளது. Repeal என்ற சொல்லுக்கு சட்ட நீக்கம் என்று சுருக்கமாகவும் ஒரு சட்டத்தையோ அதிலொரு பகுதியையோ மற்றொரு சட்டத்தால் நீக்குதல் என்று விரிவாகவும் பொருள் கொள்ளப்படுகிறது. அதாவது சட்டமியற்றும் வழியாக அழித்தல் அல்லது நீக்கும் செயல் (The abrogation or destruction of a law by a legislative act) அல்லது ஒரு சட்டத்தை நீக்குதல் அல்லது மாற்றியமைத்தல் A repeal is the removal or reversal of a law என்றும் பொருள் கொள்ளலாம்.

ஒவ்வொரு சட்டமும் ஒரு குறிக்கோளோடு இயற்றப்படுகிறது. அவ்வகையில் இந்தத் திருத்தல் மற்றும் நீக்கச் சட்டத்தின் தேவை மற்றும் குறிக்கோள் பற்றி அறிந்தால் மட்டுமே அச்சட்டத்தின் முழுப் பொருளையும் அறிந்து கொள்ள முடியும். பொது வகை முறைகள் சட்டம் (General clauses act) பிரிவு 6, 6A, 7 மற்றும் 8 ஆகியவை நீக்கல் சட்டம் பற்றி விவரிக்கிறது.

பொது வகை முறைகள் சட்டம் (General clauses act) பிரிவு 6 மற்றும் 6A, பிரிவுகளில் திருத்தல் மற்றும் நீக்கச் சட்டத்தில் வேறு வகையான உட்கருத்தைத் தோற்றுவிக்கவில்லை (unless a different intention appears) என்றால் ஏற்கனவே அமுலில் உள்ள சட்டத்தைத் திருத்தல் மற்றும் நீக்கச்சட்டம் எந்த வகையிலும் பாதிக்காது என்று வரையறுக்கப் பட்டுள்ளது.

எனவே பொது வகை முறைகள் சட்டத்தின் வரையறையின் அடிப்படையில் நடுவண் அரசு இயற்றியுள்ள திருத்தல் மற்றும் நீக்கல் சட்டம் 17/2015 சட்டத்தை நோக்குங்கால் அச்சட்டத்தில் முதன்மைச் சட்டத்தை நீக்கும் நோக்கம் அல்லது உட்கருத்து (Intention) எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேலும் திருத்தல் மற்றும் நீக்கச் சட்டம் 17/2015 சட்டத்தில் பிரிவு 4-இல் இச்சட்டம் ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்ட, நடைமுறையில் உள்ள சட்டத்தை எந்த வகையிலும் பாதிக்காது எனத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

நீக்கல் மற்றும் திருத்தச் சட்டம் 2015 சட்டம் பிரிவு 4 இல் இந்நீக்கச் சட்டம் ஏற்கனவே இயற்றிய சட்டத்தில் திருத்தங்கள் மூலம் செயல்முறைப் படுத்தப்பட்ட (Applied) ஒன்றிணைக்கப்பட்ட (Incorporated) சட்டங்களை எந்த வகையிலும் பாதிக்காது என்று தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. நீக்கல் மற்றும் திருத்தச் சட்டம் 17/2015, பிரிவு 4 இல் “The repeal by this Act of any enactment shall not affect any Act in which such enactment has been applied, incorporated or refereed to” என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

நீக்கல் சட்டம் பற்றிய விவாதங்களும், வினாக்களும் பல வழக்குகளில் உச்சநீதிமன்றம் மற்றும் பல உயர்நீதி மன்றங்களில் எழுந்துள்ளதில் அவைகளில் நீதிமன்றங்கள் வழங்கியுள்ள தீர்வுகள் சிலவற்றை நாம் ஆய்ந்தால் நீக்கல் சட்டத்தின் குறிக்கோள் மற்றும் செயற்பாட்டை அறிந்துகொள்ள உதவியாக இருக்கும். அவ்வகையில் சில வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்புகள் திருத்தல் மற்றும் நீக்கம் பற்றிய தெளிவுகளை ஏற்படுத்தும்.

**கூதா பக்ஸ் .. எதிர் .. மேலாளர், கலோடோனியன் பிரஸ்**

கொல்கொத்தா உயர்நீதின்றத்தில் நடந்த கூதா பக்ஸ் .. எதிர் .. மேலாளர், கலோடோனியன் பிரஸ் (Khuda Bux ..vs.. Manager, Caledonian – AIR 1954 Cal 484) என்ற வழக்கில் தொழிலாளர் நலச்சட்டம் 1948 அல் பிரிவு 120 திருத்தல் மற்றும் நீக்கச் சட்டம் 1950-ன் மூலம் முற்றாக நீக்கப்பட்டுவிட்டதாக வழக்காடப்பட்டதில் இவ்வழக்கில் கொல்கொத்தா உயர்நீதிமன்றம் மேற்படி கூற்றை நிராகரித் துள்ளதோடு தனது தீர்ப்புரை 9வது பத்தியில் திருத்தல் மற்றும் நீக்கல் சட்டம் பற்றி பின்வரும் சட்ட விளக்கத்தை அளித்துள்ளது

*“This contention was based, in my view, on a mistaken notice of the scope and effect of a repealing and amending Act Such acts have no legislative effect, but are designed for editorial revision, being intended only to excise dead matter from the statue book and to reduce its volume. Mostly, they expurgate amending Acts, because having imparted the amendments to the main Acts, those Acts have served their purpose and have no further reason for existence. At times, inconsistencies are also removed by repealing and amending Acts”.*

இச்சட்டக் கருத்தின் மையக்கரு யாதெனில் திருத்தல் மற்றும் நீக்கல் சட்டம் அதன் குறிக்கோளை எட்டிவிட்டதால் (முதன்மைச் சட்டம் திருத்தப்பட்டு விட்டதால்) பயனற்றது என்பதால் அவைகளை நீக்குவது ஒரு நிர்வாக நடைமுறை என்றும் திருத்தல் மற்றும் நீக்கல் சட்டத்தை நீக்குவதால் ஏற்கனவே திருத்தம் மேற்கொள்ளப்பட்ட முதன்மைச் சட்டம் எந்த வகையிலும் பாதிக்காது என்றும் தீர்ப்பளித்துள்ளது.

**ஜெதானந் பெதாப் ... எதிர்... டெல்லி அரசு**

உச்சநீதிமன்றத்தில் ஜெதானந் பெதாப் ... எதிர்... டெல்லி அரசு ( Jethanand betab ..vs.. State of Delhi : AIR 1960 SC 89) என்ற வழக்கில் இந்திய கம்பியில்லா தொலைதொடர்புச் சட்டம் 1933 (திருத்தச் சட்டம் 1948), பிரிவு 6 (1A) சட்டத்தின்படி தண்டிக்கப்பட்ட ஒருவர் மேல்முறையீடு செய்ததில் அதில் இந்திய கம்பியில்லா தொலைதொடர்புச் திருத்தச் சட்டம் 1948-ன்படி சேர்க்கப்பட்ட பிரிவு 6 (1ஏ) சேர்க்கப்பட்ட பின்னர் 1948 திருத்தச் சட்டம் 1952 ஆம் ஆண்டு திருத்தல் மற்றும் நீக்கல் சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டுவிட்டதால் பிரிவு 6 (1ஏ) முற்றிலும் நீக்கப்பட்டதாக வழக்காடியதில் இக்கூற்றை உச்சநீதிமன்றம் முற்றாக நிராகரித்துள்ளதோடு திருத்தல் சட்டத்தின் மூலம் ஏற்கனவே திருத்தப்பட்ட சட்டம் அத்திருத்தல் சட்டத்தை நீக்குவதால் எந்த வகையிலும் பாதிக்காது என்று முடிவு கண்டு தண்டனையை உறுதி செய்துள்ளது.

### ஜெய்பால் சிங் .. எதிர் ... உத்திரபிரதேச அரசு

அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் ஜெய்பால் சிங் .. எதிர் ... உத்திரபிரதேச அரசு என்ற வழக்கில் *(CrLJ 1990 Page 2504 Allahabad)* இந்திய தண்டனைச் சட்டத்தில் பிரிவு 498 இல் திருத்தல் மற்றும் நீக்கச் சட்டம் 1983 மூலம் 498(A) என்ற உட்பிரிவு சேர்க்கப்பட்டதில் பின்னிட்டு அத்திருத்தல் சட்டம் 1983 ஆனது திருத்தல் மற்றும் நீக்கச் சட்டம் 1988 -ன் மூலம் நீக்கப்பட்டு விட்டது என்றும் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 498(A) என்பதே இந்திய தண்டனைச் சட்டத்தில் இல்லை என்றும் குற்றவாளி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 498(A)-ன் கீழ் வழக்குப் பதிவு செய்ததும், கைது செய்ததும் தவறு என்றும் வாதிடப்பட்டதில் அவ்வழக்கில் அலகாபாத் உயர்நீதிமன்றம் திருத்தல் மற்றும் நீக்கச் சட்டம் பற்றித் தெளிவாக விளக்கியுள்ள தோடு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 498(A) முதன்மைச் சட்டத்தில் திருத்தப்பட்டுள்ள நிலையில் திருத்தச் சட்டத்தை நீக்குவதால் அச்சட்டமே நீக்கப்படவில்லை என்றும் அப்பிரிவின் கீழ் கைது செய்தது சரிதான் என்றும் தீர்ப்பளித்துள்ளது.

### கர்நாடக அரசு .. எதிர் ... சுபாஷ்

கர்நாடக உயர்நீதிமன்றத்தில் கர்நாடக அரசு .. எதிர் ... சுபாஷ் என்ற வழக்கில் *(Kant LJ 1991 Vol.2 Page 132)* என்ற வழக்கில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 167(2)-ன்படி குற்ற வழக்கில் குற்றவாளி கைது செய்யப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்ற பிரிவில் 60 நாட்கள் என்பது 90 நாட்களாக திருத்தச் சட்டம் 1978-ன் வழியாக திருத்தப்பட்டது. இத்திருத்தல் சட்டம் 1978 சட்டமானது பின்னிட்டு 1988 ஆம் ஆண்டு திருத்தல் மற்றும் நீக்கச் சட்டத்தின் படி நீக்கப்பட்டுவிட்டதால் 60 நாட்களுக்குள் குற்றபத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்பதால் குற்றவாளியை விடுவிக்க வேண்டுமென்று வாதிடப் பட்டது.

ஆனால் இவ்வழக்கில் கர்நாடக உயர்நீதி மன்றம் திருத்தச் சட்டம் 1978-ன் திருத்தங்கள் முதன்மைச்சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு விட்டதால் திருத்தச்சட்டம் தேவையற்ற ஒன்று என்றும் அதனை நீக்குவதற்காக இயற்றப்பட்ட திருத்தம் மற்றும் நீக்கச் சட்டம் 1988 எந்த வகையிலும் 1978 திருத்தச் சட்டத்தை பாதிக்காது என்றும் எனவே 90 நாட்களுக்குள் அரசுத் தரப்பு குற்றபத்திரிக்கை சட்டப்படி தாக்கல் செய்யலாம் என்றும் முடிவு கூறியுள்ளது.

மும்பை உயர்நீதிமன்றத்தில் அம்மாநிலத்தைச் சேர்ந்த வழக்குரைஞர் கே.கே.வாசுதேவ குருப் என்பவர் மனுதாரராக இருந்து மத்திய அரசுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட பொதுநல வழக்கில் *(K.K.Vasydeva Kurup ..vs.. union of India – AIR 2003 Bom 64)* அவர் வங்கி, பொது நிதிநிறுவனங்கள் மற்றும் மாற்றுமுறை ஆவண (திருத்தல்) சட்டம் 1988 *(Banking, Public Financial Institutions and Negotiable instruments Laws (Amendment) Act, 1988)* நீக்கல் சட்டம் 30/2001 மூலம் நீக்கப்பட்டுவிட்டதால் கீழமை நீதிமன்றங்கள் வங்கி, பொது நிதிநிறுவனங்கள் மற்றும் மாற்றுமுறை ஆவணச் (திருத்தல்) சட்டம் 1988-ன் கீழ் விசாரணைக்கு ஏற்கக்கூடாதென ஆணையிடக் கோரியிருந்தார்.

மும்பை உயர்நீதிமன்றம் திருத்தச் சட்டம் அதன் குறிக்கோளை எட்டிவிட்டதால் (முதன்மைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுவிட்டதால்) திருத்தச் சட்டம் தேவையற்றது என்றும் அதனைப் பாதுகாத்துக் கொண்டிருப்பதால் எவ்விதப் பயனும் இல்லை என்றும் திருத்தல் சட்டத்தை நீக்குவதால் ஏற்கனவே திருத்தல் சட்டத்தின் நிறைவேற்றுப்பட்டு விட்ட நோக்கம் அல்லது திருத்தம் எந்த வகையிலும் பாதிக்காது என்று சொல்லி பொது நல வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளது. இவ்வழக்கில் கர்நாடக உயர்நீதிமன்றம் திருத்தல் மற்றும் நீக்கச் சட்டத்தின் தேவை பற்றியும் அதன் வீச்செல்லை பற்றியும் தெளிவாக கூறியுள்ளது.

*"It is clear that once an amendment was made in 1881 Act by the Amending Act of 1988 and it had been brought into force, it has served its purpose and amended the Original Act. Its object was to plant necessary amendment in the 1881 Act. Once such planting has been effected, the Amending Act (Planting Act) having achieved its object, lost its efficacy. It was thereafter not necessary to continue the Amending Act in a statute book. There are several such Amending Acts under which amendments have been made in Original Acts. Once the plant takes root in the Original Act, an appropriate step is required to be taken by the legislature. If no action is taken, hundreds and thousands of such Amending Acts continue to remain in statute books. A device is, therefore, adopted by the Legislature to repeal all such Amending Acts, which would repeal only those Acts i. e. Amending Acts. But such repeal does not affect original Acts which already stood amended."*

மேற்கூறியவாறு ஒரு சட்டத்தைத் திருத்த அதற்கென்று திருத்தல் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதோடு திருத்தல் சட்டம் உட்பட எந்த ஒரு சட்டத்தையும் மற்றொரு சட்டத்தால் நீக்க முடியும். இதனடிப் படையில் தான் திருத்தச் சட்டங்களின் குறிக்கோள் முதன்மைச் சட்டம் திருத்தப்பட்டதன் வாயிலாக எட்டப்பட்டு பின்னர் திருத்தல் சட்டங்கள் ஏட்டளவில் இருந்த நிலையில் தேவையற்ற திருத்தல் சட்டங்களை நீக்குவதற்காக திருத்தல் மற்றும் நீக்கச் சட்டம் இயற்றப்படுவது ஒரு நிர்வாக, சட்ட நடைமுறையாகும்.

### 2005 ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டம்

அந்த அடிப்படையில் தான் இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956, பிரிவு 6-ன்படி மகளுக்கு பிறப்பின் அடிப்படையிலான சொத்துரிமை என்பது பூர்வீகச் சொத்துக்களில் இல்லாமல் இருந்ததோடு பிரிவு 23-ன்படி குடியிருப்பு வீடுகளில் பங்குரிமை இல்லை என்ற சட்ட நிலை இருந்தது. பிரிவு 23-ன்படி மகள் குடியிருப்பு வீட்டில் பாகம் கோர வேண்டுமானால்

அவர் கணவரால் கைவிடப்பட்டவராகவோ அல்லது விதவையாகவே இருக்க வேண்டும். இந்த பாலினப் பாகுபாடான சட்ட நிலையை நீக்குவதற்குக் கடந்த 2005 ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956 இல் திருத்தங்கள் செய்ய திருத்தச் சட்டம் 39/2005 இயற்றப்பட்டு 09-09-2005 தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.

2005 ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டம் திருத்தப்பட்ட பிறகு பூர்வீகச் சொத்துக்கள் மற்றும் குடியிருப்பு வீடு ஆகியவைகளில் மகளுக்கு மகனுக்குரிய அதே சமஉரிமை அளிக்கப்பட்டது. 2005 திருத்தச் சட்டத்தின்படி ஒரு பெண் பூர்வீகச் சொத்துக்களில் பாகம் கோர வேண்டுமனால் இரண்டு நிபந்தனைகள் மட்டுமே உள்ளன. ஒன்று 39/2005 திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த 09-09-2005 தேதியில் பாகம் கோருகின்ற மகளும் அவரது தகப்பனாரும் உயிருடன் இருக்க வேண்டும் மற்றும் 20-12-2004 (மக்களவையில் சட்ட முன்வரைவு (மசோதா) தாக்கல் செய்யப்பட்ட நாள்) தேதிக்கு முன்னதாக விருப்புறுதி ஆவணம் (உயில்) வழியாகவோ பதிவு பாகப்பிரிவினை மற்றும் இதர பதிவு ஆவணங்களின் வழியாக உரிமை மாற்றங்கள் ஏற்பட்டிருக்க கூடாது. மேற்குறிப்பிட்ட இரு நிகழ்வுகளும் நிகழாதிருந்தால் பெண் மகள்; பூர்வீகச் சொத்துக்கள் மற்றும் குடியிருப்பு வீட்டில் மகனுக்குரிய அதே சமஉரிமையை கோரலாம். 39/2005 திருத்தச் சட்டம் பிரிவு 6 பெண்ணை பிறப்பின் அடிப் படையில் பங்குரிமை அடையும் ஒரு பங்குரிமையராக (coparcener by birth) அங்கீகரிக்கிறது.

நிற்க. 39/2005 திருத்தச்சட்டம் முன்மொழிந்த திருத்தங்கள் முதன்மைச் சட்டமான இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956-இல் மேற்கொள்ளப்பட்ட பிறகு குறிக்கோளை எட்டிவிட்ட 39/2005 திருத்தச் சட்டத்தைப் பாதுகாத்து வைத்துக் கொண்டிருப் பதால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை. எனவே 2005 திருத்தச் சட்டம் 2015 ஆம் ஆண்டு நீக்கச் சட்டத்தின் வழியாக நீக்கப்பட்டுவிட்டது. இவ்வாறு திருத்தச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டதால் பெண்களின் சொத்துரிமை எந்த வகையிலும் சட்டப்படி பாதிக்காது. இச்சட்ட நிலை குறித்து கர்நாடக உயர்நீதிமன்றம் கடந்த 07.09.2015 தேதியில் நீதிபதிகள் என்.குமார் மற்றும் ஜி.நரேந்தர் அடங்கிய ஈராயம் லோகமணி ..எதிர்.. மகாதேவம்மா என்ற வழக்கில் தெளிவுபடுத்தியுள்ளது.

**லோகமணி ..எதிர்.. மகாதேவம்மா**

மேற்குறிப்பிட்ட லோகமணி ..எதிர்.. மகாதேவம்மா வழக்கில் கர்நாடக உயர்நீதிமன்றம் நீக்கச் சட்டம் 2015-ன் குறிக்கோள், பயன்பாடு அதன் எல்லை ஆகியவற்றை விரிவாக விவாதித்துள்ளதோடு நீக்கச் சட்டம் 17/2015 சட்டமானது இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956 (திருத்தல் சட்டம் 2005) வழியாக பெண்கள் அடையும் சொத்துரிமை எந்த வகையிலும் பாதிக்காது என்று தீர்ப்பளித்துள்ளது. இவ்வழக்கில் கர்நாடக உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் (28 பத்தி) நீக்கச் சட்டத்தின் முக்கியக் குறிக்கோள் பற்றி, "The main object of a Repealing and Amending Act is only to strike out the unnecessary Acts and excise dead matter from the statue book in order to lighten the burden of ever increasing spate of legislation and to remove confusion from the public mind. In other words, the Repealing and Amending Act is enacted not to bring any change in law, but to remove enactments which have become unnecessary. Thus, the Repealing and Amending Act 2015 only expurgates the Hindu Succession Act, 2005 (Act No.39/2005) along with similar acts, **which had served the purpose**"

என்றும் 33 -வது பத்தியில் நீக்கச் சட்டத்தை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்றும் "The amended section 6 has already been substituted in the Hindu Succession Act, 1956 as if it was in the enactment from its inception. When the amending provision takes place of the earlier provision, the object of the Amendment Act is fulfilled and thereafter the Amended Act serves no purpose. Therefore, such an Amendment Act requires to be repealed and that is what has been precisely done by Act No.17/2015"

என்றும் தெளிவாகத் தீர்ப்பளித்துள்ளதோடு நீக்கச் சட்டம் 2015 பெண்களுக்கு இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956 (திருத்தச் சட்டம் 2005) ன்படி ஏற்பட்ட சொத்துரிமையை எந்த வகையிலும் பாதிக்காது என்றும் முடிவு கண்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட கர்நாடக உயர்நீதிமன்றத் தீர்ப்பின் சாரம் யாதெனில் திருத்தச் சட்டத்தின் குறிக்கோள் முதன்மைச் சட்டத்தில் திருத்தம் மேற் கொள்ளப்பட்டதன் வழியாகத் திருத்தச் சட்டத்தின் குறிக்கோள் எட்டப்பட்டுவிட்டது என்ற நிலையில் பயனற்ற திருத்தல் சட்டங்களைச் சட்டப் புத்தகத்தில் நீக்குவது என்பது தான். அந்த அடிப்படையில் இந்து வாரிசுரிமைச் சட்டம் 39/2005 அதன் குறிக்கோளை எட்டிவிட்டதால் (முதன்மைச் சட்டம் திருத்தப்பட்டு விட்டதால்) இனி தேவையற்றது என்ற அடிப் படையில் நீக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கூறியவாறு நீக்கல் மற்றும் திருத்தச் சட்டம் 2015 சட்டம் பிரிவு 4 இல் இச்சட்டம் ஏற்கனவே இயற்றிய சட்டத்தால் செயல் முறை படுத்தப்பட்ட(applied) ஒன்றிணைக்கப்பட்ட (incorporated) சட்டங்களை எந்த வகையிலும் பாதிக்காது என்று தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. ஏற்கனவே இந்து வாரிசுரிமைச் (திருத்தல்) சட்டம் 39/2005 முன்மொழிந்த திருத்தங்கள் முதன்மைச் சட்டத்தில் சேர்க்கப்பட்டு செய்முறை படுத்தப்பட்டும், ஒன்றிணைக்கப்பட்டும் விட்ட நிலையில் நீக்கல் மற்றும் திருத்தச் சட்டம் 2015 எந்த வகையிலும் இந்து வாரிசுரிமைச் (திருத்தல்) சட்டம் 39/2005 சட்டத்தையும் அதன் வழியாக இந்து மகள் அடையும் சொத்துரிமையையும் பாதிக்காது.

டாக்டர் பெரியார்செல்வி

# கசப்பான இனிப்பு வியாதி 3



# வாழ்க கொழுப்புடன்!

கடந்த மாதம் 1950 வரை அதிகாரப்பூர்வ டயட்டாக, பாண்டிங் டயட் இருந்ததைப் பார்த்தோம். அதாவது நீரிழிவு நோய்க்கு அசைவ உணவே சிறந்தது என வில்லியம் பாண்டிங் நிரூபித்து இருந்தார். 50 களுக்கு பின் நடந்த அரசியலை இனி பார்க்கலாம்.

1958 ல் ஆன்சல் கீஸ் ( ANCLE KEYS) என்ற உயிரியல் விஞ்ஞானி 22 நாடுகளின் உணவு முறை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். ஆனால் ஆன்சல் கீஸ் 7 நாடுகளின் புள்ளி விபரங்களை மட்டுமே எடுத்து வைத்தார் அது SEVEN COUNTERIES STUDY என அழைக்கப்பட்டது.

கிரீஸ், இத்தாலி, ஸ்பெயின், தென் ஆப்பிரிக்கா, ஜப்பான், பின்லாந்த் ஆகிய 7 நாடுகளின் புள்ளி விபரங்கள் மட்டுமே கணக்கில் கொள்ளப்பட்டது. இதில் அதிகக் கொழுப்பு உணவுகளைச் சேர்த்துக் கொண்டு, குறைவான இருதய நோயாளிகளைக் கொண்ட ஹாலந்து மற்றும் நார்வே நாடுகளும் மற்றும் குறைவான கொழுப்பு உணவுகளைச் சேர்த்துக் கொண்டு, அதிகமான இருதய நோயாளிகளை கொண்ட சிலி என்ற நாடும் வசதியாக மறைக்கப்பட்டது.

**சைவத்தைப் பரப்பிய பன்னாட்டு வணிக நிறுவனங்கள்**

22 நாடுகளில் எடுக்கப்பட்ட ஆராய்ச்சியில் ஏன் 15 நாடுகளின் புள்ளி விபரங்கள் புறக்கணிக்கப் பட்டது, என்ற கேள்வியை யாரும் எழுப்பவில்லை. ஆன்சல் கீஸ் -ம் இறுதிவரை விளக்கம் அளிக்கவில்லை. ஏனெனில் அவர் அமெரிக்க அரசின் மதிப்புமிக்க விஞ்ஞானி. அவரது ஆய்வு TIMES, READERS DIGEST போன்ற உலகப்புகழ் பெற்ற பத்திரிகைகளில் தலையங்கம் ஆயிற்று. மக்களிடம் இறைச்சியும், முட்டையும் கொழுப்பு என்றும் அது மாரடைப்பை வரவழைப்பது என்ற எண்ணமும் மெதுவாக வளரத் தொடங்கியது.

தொலைக்காட்சி விளம்பரங்களில் கான்பிளக்ஸ்- ம், பாலும் உடலுக்கு நல்லது என விளம்பரம் செய்யப்பட்டது. கொழுப்பு நல்லதா,கெட்டதா என விஞ்ஞானிகளிடையே பெரிய சர்ச்சை ஏற்பட்டது, 1970 களில் அமெரிக்க அரசு ஜார்ஜ் மெக்கவர்ன் ( GEORGE McGOVERN) தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. 1977 ல் அக்குழு டயட்டின் இலக்கான 3 விசயங்களை முன் வைத்தது.

1. EAT LESS FAT AND CHOLESTEROL,
2. LESS REFINED AND PROCESSED SUGAR.
3.MORE COMPLEX CARBOHYDRATES FROM VEGTABLES, FURITS AND GRAINS

அதாவது, கொழுப்பு உணவுகளைக் குறைவாக உண்பது, குறைவாக சக்கரை எடுப்பது, காய்கறி, பழங்கள், தானியங்கள் ஆகியவற்றை அதிகமாக எடுப்பது என அக்குழு முன் வைத்தது. இதை நன்றாகப் பயன்படுத்திக் கொண்ட அமெரிக்க அரசின் விவசாயத்துறை தானிய உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகப்படுத்தியது..

1980 களில் KELLOG"S சகோதரர்களின் மக்காச்சோளத்திலிருந்து கான்பிளக்ஸ் தயாரிக்கும் தொழில் கொடிக்கட்டிப் பறந்தது. காலை உணவாக சிறுதானியம் மற்றும் பாலையும் சேர்த்து சாப்பிடலாம் என அதிக அளவில் விளம்பரம் செய்யப்பட்டது. அதுவரை அவர்களின் காலை உணவாக இருந்த முட்டை மற்றும் பன்றி இறைச்சியின் இடத்தை சிறுதானியமும் பாலும் பிடித்தன.

ஜார்ஜ் மெக்கவர்ன் அறிக்கையை அமெரிக்க அரசு, AMERICAN HEART ASSOCIATION, AMERICAN DIABETES ASSOCIATION மூலமாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. சிறுதானிய, ஓட்ஸ், பிஸ்கட், குக்கீஸ் ஆகிய நிறுவனங்களின் பெரும் பொருளாதார

உதவியுடன் மருத்துவ நூல்கள், மருத்துவக் கல்லூரிப் பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட்டது, டயட் முறை வகுத்ததன் பின்னனியில் பெரும் வணிக நோக்கம் இருந்தது.

கூடுதலாக ஜார்ஜ் மெக்கவர்ன் அமெரிக்காவில் மக்காச் சோளம் அதிகமாக விளையும் SOUTH DAKOTA என்ற மாகாணத்தைச் சார்ந்தவர் என்ற அதிர்ச்சி செய்தியும் நமக்கு கிடைக்கிறது. எதிலும் அமெரிக்காவைப் பின்பற்றும் பொதுப் புத்தி டயட் விசயத்திலும் தொற்றிக் கொண்டதில் ஆச்சரியப் பட ஒன்றுமில்லை.

இன்று நடைமுறையில் இருக்கும் சர்க்கரை, இரத்த அழுத்தம் அதற்கான உணவுமுறை பற்றிய கருத்தாக்கத்துக்கு ஏறக்குறைய 1980 களில் அரிக்காவில் ஏற்பட்ட இம்மாற்றங்களே அடிப்படையான காரணமாக உள்ளது என்பதைப் பல்வேறு தரவுகளிலிருந்து அறியமுடிகிறது.

## பேலியோ டயட்

ஆங்கில மருத்துவ முறையிலும், இந்திய மருத்துவ முறைகள் அனைத்திலும் சர்க்கரை மற்றும் இரத்த அழுத்தம் போன்றவை முழுமையாகக் குணப்படுத்த முடியாது, கட்டுப்படுத்த மட்டுமே முடியும் என்கிறார்கள். இப்போது நமக்கு எழும் கேள்வி குணப்படுத்தவே முடியாத - கட்டுபடுத்த மட்டும் முடியும் ஒன்றை எப்படி நோய் எனச் சொல்லலாம் என்பதே. இவைகள் நோய் இல்லை கோளாறு *(THAT IS NOE DIECISE BUT DISORDERS)*

இன்று நடைமுறையில் உள்ள அதாவது இரத்த அழுத்தையும், சர்க்கரையையும் கட்டுப்படுத்த அதிகமானவர்கள் பின்பற்றும் உணவுமுறை அசைவம் தவிர்த்து, சைவம். அதிலும் குறிப்பாக இயற்கையான சிறுதானிய உணவுமுறைகளே. ஆங்கில, இந்திய மருத்துவமுறை மருத்துவர்கள் பின்பற்றச் சொல்வதும் இம்முறையையே.

ஆதனால் நம் வாழ்வியல் உணவு முறையே பெரும் மாற்றத்துக்கு உள்ளாகி இருக்கிறது.. ஆனால் விளைவுகள் எதிர்பார்த்தபடி இல்லை. நாங்கள் இயற்கை உணவுமுறையில் தரும் டயட்டை தொடர்ச்சியாகப் பின்பற்ற முடிவதில்லை. விளைவு மீண்டும் அதிகமாகச் சாப்பிட்டு, சர்க்கரை, இரத்த அழுத்த்தைக் குறைக்க முடியாமல் சிரமப் படுகிறார்கள்.

சர்க்கரை வியாதி உள்ள என்னுடைய நண்பர்கள் சிலர், அவர்கள் வழக்கமாக எடுத்துக் கொள்ளும் அசைவ உணவை அப்படியே எடுத்துக் கொண்டு நலமாக இருப்பதைப் பார்த்த எனக்கு ஏற்பட்ட ஆச்சரியம், அதற்கான காரணிகளைத் தேட வைத்தது. தேடிய போது கிடைத்ததே பேலியோ டயட் உணவு முறை .

இதுவரை சர்க்கரை, இரத்த அழுத்த நோயாளிகள் எதையெல்லாம் உட்கொள்ளக் கூடாது என சொல்லி வந்தோமோ, அவை அனைத்தையும் உட்கொள்ளச் சொல்கிறது ‘பேலியோ டயட்’ முறை.. சமூகத்தில் சரியானது எனப் புரிந்துகொள்ளப்பட்டு, நடைமுறையில் இருக்கும் எண்ணற்ற கற்பிதங்களின் மேல் கேள்வி எழுப்பி, அதன் உண்மை முகத்தைச் சமூகத்துக்குக் காட்டுவதே ஒரு பெரியாரிஸ்டின் வேலையாக இருக்க முடியும். அதுவும் நாம் சார்ந்திருக்கிற துறை சார்ந்த - நாம் விரும்பும் உணவு முறையை ஏற்கச் சொல்லும் ஒரு டய்டை நாம் தேடிப் படிப்பதில் வியப்பில்லை. பேலியோ டயட் பற்றி நியாண்டர் செல்வன் அவர்களின் பதிவிலிருந்து...

## உண்மையை அறிய ஓர் பின் நோக்கிய பயணம்

இப்போது நமக்குத் தேவைப்படுவது ஒரு பின்நோக்கிய பயணம். ஆடை இன்றிச் சுற்றித் திரிந்த ஆதி மனிதனின் உணவைப் பற்றி ஆராயலாம். மனித இனத்தின் வரலாறு பரிணாம அடிப்படையில் 20 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் தொடங்கியது என்கிறார்கள் ஆராய்ச்சி யாளர்கள். ஆனால் மனிதன் விவசாயம் செய்யத் துவங்கியது கிமு 5000 ஆண்டுகளில் தான். அதற்கு முன் நிலத்தை உழுது விவசாயம் பார்ப்பது பாவமாகப் பார்க்கப்பட்டது. இயற்கை தருவதை அப்படியே உண்பது தான் இயல்பாக இருந்தது.

காடுகளில் விளையும் காய், கனிகளையும் தன்னைத் தாக்க வரும் மிருகங்களையும் உண்டு வந்த மனிதனின் அற்புதமான கண்டுபிடிப்புதான் நெருப்பு. சமைத்த இறைச்சியை உண்ட பின் தான் மனிதனின் பரிணாம வளர்ச்சி மிருகங்களில் இருந்து வேறுபட்டு, உயரிய நிலையை அடைந்தது. சமைத்த இறைச்சியில் அதிக அளவில் புரதம், வைட்டமின், மினரல் ஆகியவை இருப்பதால் மனித மூளையின் சிந்திக்கும் திறன் அதிகரித்தது. இதில் 100 சதவிகிதம் ஆதி மனிதனின் உணவாக மாமிச உணவே இருந்தது.

ஏதோ ஒரு உணவை மட்டுமே உண்டு மனிதனால் அதிக அளவில் ஆரோக்யத்துடனும் பலத்துடனும் வாழ முடியும் என்றால் அது மாமிச உணவே என்பது நமக்கு ஆதிமனிதனின் வாழ்க்கை முறையில் இருந்து விளங்குகிறது

என்கிறார் நியாண்டர் செல்வன்

## நம் இன்றைய நிலை

இன்று மனிதனிடம் ஏற்பட்டிருக்கும் பொதுப் புத்தியில் இருப்பது - கொழுப்பு கெட்டது. ஒரு வார்த்தைக்கு அர்த்தம் கண்டுபிடிப்பதன் மூலம் அவ்வார்த்தையின் மூலத்தைச் சிதைப்பது என்பது பார்ப்பனிய நடைமுறை. அதே பிற்போக்கான நடைமுறையில் சிக்கிய வார்த்தைதான் கொழுப்பு. தவறாக நடந்து கொள்பவர்களைப் பார்த்து நாம் திரும்பி கேட்கும் கேள்வி என்ன கொழுப்பா? ஆக கொழுப்பு என்பது தவறானது, அது உடலில் இருந்தால் உடலுக்குத் தீங்கு என்பது இங்கு உருவகப் படுத்தப்படுகிறது.

*மனித உடலில் உள்ள கொழுப்பு இரண்டு வகைப்படும் LDL- Low Density Lipid, HDL – High Density Lipid இதில் HDL – High Density Lipid உடலுக்கு மிகவும் அவசியமான தேவை. இக் கொழுப்பு குறைந்தால் மட்டுமே LDL- Low Density Lipid எனப்படும் உடலுக்கு தேவையற்ற கொழுப்பு உடலில் கூடும் அதுவே நோய்களுக்குக் காரணி.*

*நமக்கு இன்று பொதுவாக மருத்துவர்கள் கொடுக்கும் உணவு முறைகளில் - காய்கறிகளிலும், பழ வகைகளிலும், தானியங்களிலும், கிழங்கு வகை களிலும், அரிசியிலும், கோதுமையிலும் இருப்பது கார்போஹைட்ரேட். இதனுடன் நாம் சுவைக்காகச் சேர்க்கும் பொருட்களில் இருக்கும் கொழுப்பானது நம் உடலில் தங்கி விடுகிறது. ஏனெனில் ஏற்கனவே உணவில் உள்ள கார்போஹைட்ரேட் நம் உடலை இயக்குகிறது.*

*எனவே கொழுப்பு இல்லாமல் இருக்கும் உணவு முறைகளைத் தேடித்தேடி உண்பதால், உடலில் சுத்தமாக கொழுப்பே இல்லாமல் இருப்பதால், வேறு வகையான உடல் உபாதைகள் வருகின்றன எடுத்துக்காட்டாக ஒருவர் கொழுப்பு சேர்க்காத உணவுமுறையைத் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறார் என வைத்துக் கொள்வோம். அவரால் அதைத் தொடர முடியாமல் போய் அதிக அளவு உணவு சேர்த்துக் கொள்கிறார். இதனால் அவரது உடல் எடை கூடுகிறது. ஆக டயட் முறை தோல்வி அடைய சைவ உணவு முறைகளே காரணம்.*

*உணவு முறை மாற்றம் என்பது சைவத்திலிருந்து அசைவத்துக்கு மாறுவதே. தற்காலத்தில் அதை PALEO DIET என்கிறார்கள். பேலியோ என்பது குகை மனிதனைக் குறிக்கிறது. ஆக ஆதிமனிதனின் வேக வைத்த உணவுகளே உடலுக்கு நல்லது*

*அடுத்து ஆதிமனிதனின் சமையலறையை இல்லை இல்லை அவர்களுக்குத்தான் சமையலறையே இல்லையே ஆக அவர்களது உணவு முறையைப் பற்றி விரிவான ஆய்வும் மற்றுமோர் உணவு முறையான LCHF (Low Carbn High Fat) பற்றியும் விரிவான தகவல்களை ஆராய்வோம். நம்மிடையே ஏற்பட்டிருக்கும் உணவு மூட நம்பிக்கையையும், தீண்டப்படாததாக உள்ள கொழுப்பைப் பற்றிய உண்மைகளையும் உணர்வோம். உண்போம். வாழ்வோம் கொழுப்புடன்!*

*துணை புரிந்தவை:*


1.https://authoritynutrition.com/modern-nutrition-policy-lies-bad-science/

2.www.kellogg.com

3.Nutrition and Diet- B.H. BAKHRU

4.Food that Heals- B.H. BAKHRU

5.பேலியோ டயட்- நியாண்டர்செல்வன்


## விமர்சன மடல்

காட்டாறு 2016 ஏப்ரல் இதழில், தோழர் செந்தில்குமார் எழுதிய 'அடித்தட்டு மக்களை அழிக்கும் அண்ணமார் விழாக்கள்' கட்டுரையைப் படித்தேன். மதம் சார்ந்த எந்தப் பண்டிகைக்கும் கதைகள் மட்டுமே அடிப்படையாக இருக்கும் என்பதற்கு இந்தப் பண்டிகையும் விதிவிலக்கல்ல. அடிமைத்தனத்தில் என்ன பெருமை வேண்டிக் கிடக்கிறது? என்ற கேள்வி நியாயமானது.

இப்பண்டிகை ஏற்படுத்தும் பொருளாதாரச் சீரழிவு சாதாரணமானதல்ல. ஏற்கனவே மதுவின் பிடியில் சிக்கித் தவிக்கும் குடும்பம் இப்பண்டிகைக்காக வாங்கும் கடனின் மூலம் வருடம் முழுவதும் சிக்கிச் சின்ன பின்னமாகிறது. பெற்றோர் இப்பண்டிகைக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் படிக்கும் இளைய தலைமுறையைக் கடுமையாகப் பாதிக்கிறது. தோழர் செந்தில்குமார் சரியாகக் குறிப்பிட்டது போல முழு ஆண்டுத் தேர்வும் இப்பண்டிகையும் ஒரே நேரத்தில்தான் வரும். மாணவர்கள் இப்பண்டிகைக்காக பத்து நாட்கள் வரை பள்ளிக்கு வர மாட்டார்கள். அரசுப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு, பனிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள்கூட சரியாக தேர்விற்கு தயாராக மாட்டார்கள். அல்லது தேர்வைத் தியாகம் செய்து விடுவான். இது அந்த மாணவனின் எதிர்காலத்தையே கேள்விக்குறி ஆக்கிவிடும். கட்டுரையாளர் குறிப்பிட்டதைப்போல பண்பாட்டுப்புரட்சி, மதமாற்றம் இவற்றோடு கலப்புத் திருமணங்களும் சாதியற்றோருக்குத் தனிஇடஒதுக்கீடு என்ற உரிமை பெறுவது ஒடுக்கப்பட்ட சமூகங்கள் விடுதலையாக உதவும்.

இப்படிக்கு
**அ.கலைச்செல்வன்**

## மணமகள் தேவை

பொறியியல் பட்டம் பெற்று, மின்னணுப் பொருட்கள் வணிகத்தில் உள்ள தோழர் **இரா.கோபால் (எ) இராவண கோபால்** அவர்களுக்கு ஜாதிமறுப்புத் திருமணம், மறுமணம் இவற்றுக்குத் தயாராக உள்ள இணை தேவை. பெரியார் கொள்கையில் ஈடுபாடுடைய-வராய் இருந்தால் நல்லது. தோழர் கோபால் மணமுறிவு பெற்றவர். வயது 40. மாதம் 50 ஆயிரத்துக்கு மேல் வருமானம் ஈட்டுபவர். கோவை, திருச்சி இரண்டு நகரங்களிலும் பணியாற்றி வருகிறார். தோழர் கோபாலின் தந்தை ஆண்டிமடம் ஒன்றிய திராவிடர் கழகத் துணைத் தலைவராக உள்ளார்.

**தொடர்புக்கு:** 96000 02080, 94438 03392

வாலாசாவல்லவன்





# இந்திய -இந்து -சைவக் காவலர்: மறைமலை அடிகள்

தோழர் வாலாசா வல்லவன் அவர்கள் முகநூலில் தமிழர் தேசியப் பேரியக்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் பெ.மணியரசன் அவர்களுக்குத் தொடர்ச்சியாகப் பல கேள்விகளை எழுப்பி வருகிறார். ஆனால் தோழர் மணியரசன் தரப்பிலிருந்து இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை. இணையதள வாய்ப்பில்லாதவர்களுக்காக காட்டாறு ஏடு அக்கேள்விகளில் சிலவற்றைப் பதிவு செய்கிறது.

*...மறைமலையடிகளைக் கொச்சைப்படுத்த வேண்டும் என்பதற்காக அவர்களைப் பற்றி எழுதவில்லை. தமிழ்த் தேசியத்திற்கு அவர் எந்த அளவிற்குப் பயன்படுவார் என்பதே என் கேள்வி. (மறைமலை அடிகளின் இந்துத்துவக் கருத்தைப் பாருங்கள்.)*

*“நம் சமயங்கட்கும், நாட்டுக்கும் பொதுப் பெயராக இந்து மதம், இந்துஸ்தானம், இந்தியா முதலிய பெயர்கள் பன்னூறு ஆண்டுகளாக உலகில் வழங்கி வருகின்றன. அதனால், இப்பெயர்களை உண்மையில் சமய நம்பிக்கை, நாட்டுப்பற்று உள்ளவர்கள் மறுக்க மாட்டார்கள், இகழ மாட்டார்கள். ஆதலான், அடிகளும் இப்பொதுப் பெயர்களைப் பெருமையோடு குறிப்பிடுவார்கள். பொதுமை கருதித் தன்னைப் பெருமையுடன் இந்து, சைவன் என்று சொல்லிக் கொள்வார்கள்.*

*அன்றியும், அடிகள், சைவ சமயத்தைத் தமிழ்நாட்டுக்குள் மட்டும் முடக்கி விடவில்லை. காசுமீரம் முதல் குமரி வரையில்,சோமநாதபுரம் முதல் காளிகட்டம் வரை அதன் அகலம் அகன்று விளங்குவதைப் போற்றுபவர். பல்வேறு மொழி, பல்வேறு நடையுடை பாவனைகள் கொண்ட பாரத மக்களுக்குச் சிவமே, விஷ்ணுவே மெய்ப்பொருளாய்க் கடவுளாய் விளங்கும் காட்சி கண்டு உள்ளங் குளிரும் உயர்ந்தோராவர். சைவம் என்று கருதுகையில் அவர் தன்னைப் பாரதரில் ஒருவனாகக் கண்டு மகிழ்வார். இந்துக்களிடம் வேறுபட்ட பழக்க வழக்கங்களின் ஊடேயும் ஒற்றுமைப் பண்பாடு உலவும் அரிய கருத்துகள், செயல்கள் கண்டின்புறுவார் அடிகள்..”*

*“வடவரின் அரசியல் செருக்கிற்கு நாம் தமிழ் மக்கள் இடந்தரலாகாது. அவர் மொழியை இந்தி திணித்தற்கும் நாம் சிறிதும் இடம் தரலாகாது. ஆயினும், தமிழ் மக்களாகிய நாம் வட நாடு முழுவதும் யாத்திரை புரியவும், அவர்களால் போற்றப்படவும் விரும்பப்படவும் காரணமாய் இருப்பது நாம் இந்துக்களாய் இருப்பதனாலேயாம். ஆதலால், இந்த வாய்ப்புகளை நாம் பெற்று இன்புறவும், பாரதம் முழுவதும் பரவியுள்ள ஒரு பெருஞ்சமயத்தின் உறுப்பினர் என்று மாண்புறவும் நாம் இந்துக்கள் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம் என்பதும் அடிகள் கருத்தே .”*

*சான்று: மறை திருநாவுக்கரசு எழுதிய, ‘மறைமலையடிகள் வாழ்க்கை வரலாறு’ பக்கம் 546, 547,548,687*

*இந்திய தேசியத்தை எதிர்த்த பெரியார் உங்களுக்குப் பகைவர்! ஆனால் இந்திய தேசியத்தில் கரைந்து போன மறைமலையடிகள் உங்களுக்குத் தலைவர். எங்கே போகிறது உங்கள் தமிழ்த்தேசியம்?*

### மறைமலையடிகள் தனித்தமிழ்நாடு கேட்டாரா?

*மறைமலையடிகள்தான் முதன் முதலில் தனித்தமிழ் நாடு கேட்டார் அதற்கு பிறகு தான் பெரியார் தனித்தமிழ் நாடு கேட்டார் என்று பெரும்பாலான தமிழ் தேசியர்கள் கூறிவருகிறார்கள். அது உண்மையா?*

- இதன் தொடர்ச்சி 32 ஆம் பக்கம்

சி.இராவணன்

# நூல் அறிமுகம்

நூற்றாண்டு காணும் நீதிக்கட்சியும் 90ஆம் ஆண்டு காணும் சுயமரியாதை இயக்கமும் சாதித்தது என்ன? என்ற தலைப்பில் திராவிடர் கழகத் தலைவர் தோழர் வீரமணி அவர்கள் நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம் ஆகியவை இந்த மண்ணில் ஏற்படுத்திய மாற்றங்கள், அதற்கு முன்பு இந்த மக்களின் சமூக, அரசியல் நிலை ஆகியவற்றைத் தொகுத்து வழங்கியுள்ளார்.

சிறப்பான வடிவமைப்பும், திராவிடர் இயக்கத் தலைவர்களைக் கொண்ட அட்டைப் படமும் புத்தகத்திற்குக் கூடுதல் வலிமை சேர்க்கின்றது. 1916ல் துவங்கப்பட்ட நீதிக்கட்சி வெள்ளைக்காரர்களுக்கு ஆதரவான கட்சி என்று அன்றைய காங்கிரஸ், கம்யூனிஸ்ட் பார்ப்பனர்களால் விமர்சனம் செய்யப்பட்ட நிலையை மறுக்கும் விதமாக புள்ளி விவரங்களோடு தொகுக்கப்பட்டுள்ளது.


இந்த நூலில் படக்காட்சிகளுடன் விளக்கம் அளித்திருப்பது வாசகர்கள் சோர்வு இல்லாமல் வாசிக்க வாய்ப்பாக இருக்கின்றது. இந்நூல் 22 தலைப்புகளில் பக்கத்துக்கு பக்கம் வரலாற்றுச் செய்திகளுடன் சமூக மாற்றத்திற்குப் போராடும் இளைஞர்களுக்கு ஒரு கையேடாக விளங்குகிறது. இந்நூலில் 22 ம் பக்கத்தில்,

“உள்ளாட்சித்துறையாலோ, தனியார் நிறுவனங்களாலோ நடத்தப்பட்டு வந்த எந்தக் கல்விக் கூடம், ஆதிதிராவிட மாணவர்களைச் சேர்க்க மறுத்தாலும் அவற்றிற்கு மான்ய உதவி உடனே நிறுத்தப்படும் என்று கூறி மான்யம் பெறுவதற்கு இது ஒரு முன் நிபந்தனையாக ஆக்கி மற்ற சாதியினருடன் இப்பிள்ளைகளும் இணைந்து சமமாக அமர்ந்து படிக்க செய்தனர். அப்படி ஏற்பாடு செய்யப்பட்ட பள்ளிகளின் எண்ணிக்கை 9614 ஆகும்.”

என்று, தாழ்த்தப்பட்டோரின் கல்விக்கு நீதிக்கட்சி செய்தது பற்றி விரிவாக தொகுக்கப் பட்டுள்ளது.

இந்திய துணைக்கண்டத்தில் கிறிஸ்தவர்கள் வருகைக்குப் பின் தான் பொதுக்கல்வி நடைமுறைக்கு வந்தது. அதற்கு முன்பு வரை குருகுலக் கல்விமுறை தான். நீதிக்கட்சி ஆட்சியில் தாழ்த்தப்பட்டோர் கல்விக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. தாழ்த்தப்பட்ட மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள மறுக்கும் பள்ளிகளுக்கு மான்யம் ரத்து செய்தல் மட்டுமல்லாமல் ஆதிதிராவிட மாணவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி தேர்வு எழுத தேர்வுக் கட்டணம் ரத்து மேலும் கல்வி உதவித்தொகை, மதிய உணவுத் திட்டம் என பலவகையில் அரசு உதவி செய்தது.

அன்றைக்கு இந்திய அளவில் ஒப்பு நோக்கினால் நீதிக்கட்சி செய்த அளவிற்கு தாழ்த்தப்பட்ட மக்களின் கல்விக்கோ, மற்ற சமூக விடுதலை முயற்சிகளுக்கு வேறு எந்த அரசும் செய்யவில்லை. ஆனால் இன்றைக்கும் நீதிக்கட்சியை உயர் ஜாதிக்காரர்களின் கட்சி என்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரான கட்சி என்றும் சில ‘அறிவு ஜீவிகள்’ தங்கள் தலைமைகளுக்கு (பார்ப்பனர்) விசுவாசமாகக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பொய்க்கூற்றுக்கு இந்த நூலில் ஏராளமாக மறுப்புகள் உள்ளன. இந்த நூலின் 47, 48 ம் பக்கத்தில் உள்ள ஒரு செய்தியை பார்ப்போம்.




“தஞ்சாவூர் ரயில்வே ஸ்டேசனில் உள்ள இந்தியர் சாப்பாட்டு விடுதியை நாம் இவ்வாரம் பார்க்க நேர்ந்தது. அங்கு மாடியின் மேல் கட்டப்பட்டுள்ள இடத்தில் சமையல் செய்யும் பாகம் போக பாக்கியிடத்தின் நான்கில் மூன்று பாகத்தைத் தட்டி கட்டி மறைத்து பிராமணர்களுக்கென்று ஒதுக்கி வைத்துவிட்டு, நான்கில் ஒரு பாகத்தை ‘சூத்திரர், பஞ்சமர், முகமதியார், கிறிஸ்தவர், ஆங்கிலோ-இந்தியர்’ என்கின்ற பிராமணரல்லாத வருக்கென்று ஒதுக்கி வைத்து அதிலேயே எச்சிலை போடுவதற்கும், கை கழுவுவதற்கும், சாணிச்சட்டி, கூடை, முறம் வைப்பதற்கும், எச்சில் பாத்திரம் சமையல் பாத்திரம் கழுவுவதற்குமாக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.” - குடிஅரசு - 06.06.1926

ஒரு நூற்றாண்டுகளுக்கு முன்னால் நாம் எப்படி வாழ்ந்துள்ளோம். யாராவது அதைப்பற்றி நினைத்துப் பார்க்கின்றோமா? அன்று பார்ப்பனர்களைக் கண்டால் தோளில் உள்ள துண்டை இடுப்பில் கட்டி வணக்கம் சொல்வது உட்பட பல்வேறு தீண்டாமை களை அனுபவித்த சமூகங்கள், உணவகங்களில் கை கழுவும் இடத்தில் சாப்பிட்ட சமூகங்களின் இன்றைய நிலை என்ன? தாழ்த்தப்பட்ட மக்களை அடிமையாக நடத்துவது, தாங்கள் நடத்தும் உணவகங்களின் நிறுவனங்கில் தீண்டாமையை கடைபிடிப்பது என ஜாதி ஆதிக்கத்தோடு நடந்து கொள்கின்றனர்.

100 ஆண்டுகளுக்கு முன்பு வரை சமூக ஆதிக்கம் செய்த பார்ப்பனர்கள் தங்கள் கிராமங்களை விட்டு வெளியேறி டெல்லி போன்ற பெருநகரங்களில் முகாமிட்டு எந்த சமூக அரசியல் மாற்றமும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகங்களுக்கு வந்து விடாமல் தங்கள் மேலாதிக்கத்தை நிலை நிறுத்துகின்றனர். ஆனால் இதை உணராத பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் யார் தங்கள் விடுதலைக்கு போராடுகிறார்களோ அவர்களையே எதிரியாக பார்ப்பது, இணைந்து போராட வேண்டிய தாழ்த்தப்பட்ட மக்களை அடக்க நினைப்பது போன்ற அறியாமை நிலையில் இருக்கிறார்கள். இவர்கள் திருந்துவது எப்போது?

இந்த நூலின் 67ம் பக்கத்தில் உள்ள "காங்கிரஸ் கட்சியின் மாவட்டத்தலைவர்கள் பட்டியல்.

"சென்னை கே.பாஷ்யம், செங்கல்பட்டு டாக்டர்.சீனிவாச அய்யர், வடஆற்காடு கலியாணராம அய்யர், தென்ஆற்காடு சிதம்பர அய்யர், கோவை சுப்பிரி, தஞ்சை டாக்டர் இராஜன், மதுரை வைத்தியநாத அய்யர், திருநெல்வேலி குப்புசாமி அய்யர், இராமநாதபுரம் டாக்டர்.சுப்பிரமணிய அய்யர் சேலம் வாசுதேவ அய்யர்"

மேலே கண்ட பட்டியலைப் பார்த்தீர்களா? காங்கிரஸில் பார்ப்பன ஆதிக்கத்தை, இன்று நினைத்துப் பார்க்க முடியுமா? தமிழ்நாட்டில் எந்தக் கட்சியிலும் பார்ப்பனர் யாரும் மாவட்ட மாநில பொறுப்புகளுக்கு வரமுடியாத சூழல் உள்ளது. அதை மீறி வந்தாலும் திராவிட முகமுடியுடன் தான் வரமுடியும். அரசியலில் தமிழகத்தில் பார்ப்பன ஆதிக்கம் முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிட்டது. பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்த உருவாக்கப்பட்ட பா.ஜ.க விற்கக்கூட பார்ப்பனர் மாநிலத் தலைவராக வரமுடியாத சூழல் உள்ளது. இன்றைக்கு அனைத்து மாவட்டங்களிலும் பெரும்பான்மை பிற்படுத்தப் பட்ட சமூகத்தைச் சார்ந்தவரே பொறுப்பில் இருக்கின்றனர். ஆனால் தாழ்த்தப் பட்டவர்களுக்கு முக்கியத்துவம்?

இந்த நூலின் 71ம் பக்கத்தில் ஒரு படக்காட்சி அதில்,

"பொதுநிகழ்வுகளில் ஆண்கள் இருக்கை களிலும் பெண்கள் தரையிலும் அமர்ந்துள்ளனர். ஆண்களுக்குச் சமமாக பெண்கள் அமரக்கூடாதாம்" ஒரே நிகழ்வுக்கு வந்தவர்களில் இந்த மனித சமூகத்தின் சரிபாதியாக இருப்பவர்களைச் சமமாக அமர வைக்கக் கூட ஆண்களுக்கு மனமில்லை. காரணம் மனுதர்மம் அவர்கள் மண்டையில் ஏற்றியுள்ள ஆணாதிக்கச் சிந்தனை.

ஆனால் இன்றைக்குப் பெண்கள் இல்லாத துறையே இல்லை என்று சொல்லும் அளவிற்கு சமூகத்தில் கல்வி வளர்ச்சி பெற்று முன்னேறி யுள்ளனர். தமிழகத்தில் திராவிடர் இயக்கம் உழைத்த உழைப்பு இன்று விளைந்து நிற்கிறது. சமூகம், கல்வி, அரசியல், பொருளாதாரம் என அனைத்திலும் பெண்களின் பங்களிப்பு உள்ளது. சமமாக அமரக் கூட வாய்ப்பு மறுக்கப்பட்ட பெண்கள் இன்று நீதிபதியாக, கல்வியாளர்களாக, மருத்துவர்களாக, ஆட்சியாளர் களாக மாறியிருக்கிறாார்கள்

புத்தகம் முழுவதும் நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம் தோன்றி அதன் தலைவர்கள் குறிப்பாக தோழர் பெரியார் அவர்கள் உழைத்த உழைப்பின் பயன்கள் விரிவாகத் தொகுக்கப் பட்டுள்ளது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரான கட்சி, முதலாளி களுக்கு ஆதரவான கட்சி என பல விமர்சனங்களை இன்றைக்கும் எதிர்கொள்ளும் நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கத்தின் வாரிசுகளான நாம் நமது முன்னோர்களின் சாதனைகளை நினைத்துப் பெருமைப்பட வேண்டியது அவசியம்.

அதே நேரத்தில் நாம் இந்த வெற்றியில் மகிழ்ந்து அடுத்த கட்டத்தை நோக்கி நகராமல் நின்றுவிடக் கூடாது. தோழர் பெரியார் அவர்களின் ஒவ்வொரு செயலும் ஒரு வரலாறு. அவர் அறிவித்த போராட்டங்கள் அனைத்தும் வெற்றி பெற்றன. ஆனால் அவரின் வாரிசுகளான நாம் களத்தில் செய்து முடிக்க வேண்டிய பணிகள் ஏராளம். இன்னமும் 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் இரட்டை குவளைமுறை இருக்கிறது. ஆணவக் கொலைகள் நடைபெருகிறது. உலகிலேயே ஒரே ஜாதிக்குள் நடக்கும் திருமணங்களால் உடல் ஊனமுற்றவர்கள் அதிகமாக பிறக்கும் மாநிலமாக தமிழகம் உள்ளது. இதற்கு எதிராகப் பெரியார் தொண்டர்கள் போராட வேண்டும்.

இந்நூலின் மூலம் நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்க காலத்து சாதனைகளை அறியும் நாம், நமது காலத்தில் என்ன செய்தோம் என சுய பரிசோதனை செய்து தமிழகத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டும்.

வெளியீடு : திராவிடர் கழக (இயக்க) வெளியீடு, பெரியார் திடல், 84-1 (50) ஈ.வெ.கி சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை 7. விலை ரூ.70




அதி அசுரன்

# சுதேச வணிகமும், பரதேச வணிகமும்

“நான் இந்த மண்ணின் சட்டத்தையும் அரசியல் சட்டத்தையும் மதிக்கிறேன். இல்லையென்றால், ‘பாரத மாதா கீ ஜே’ சொல்ல மறுக்கும் இலட்சக்கணக் கானவர்களின் தலைகளை வெட்டி இருந்திருப்பேன்.”

“சிலர் தொப்பி போட்டு கொண்டு, என் கழுத்தை வெட்டினாலும் பாரத மாதா கீ ஜே சொல்ல மாட்டேன் என்கின்றனர். இந்த நாட்டில் சில சட்டங்கள் இருக்கின்றன. அவற்றை நாம் மதிக்கிறோம். இல்லை யென்றால், நம் நாட்டை அவமதிப்பவர்கள் ஒருவர் இல்லை, ஆயிரம் பேர் இருந்தாலும், இலட்சம் பேர் இருந்தாலும், அவர்களின் தலைகளை வெட்டும் அளவுக்கு நமக்கு பலம் உள்ளது.”

இந்தக் காட்டுமிராண்டித்தன உரையை நிகழ்த்திய பாபா ராம்தேவ். பி.ஜே.பி முழு பலத்துடன் ஆட்சிக்கு வந்த பிறகு, வடநாட்டு அன்னக்காவடிப் பார்ப்பனச் சாமியார்கள் தொடங்கி ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத்வரை இதுபோல வெறித்தனமாகப் பேசி வருவதை நாம் அடிக்கடி தின ஏடுகளில் படித்திருப்போம்.

இந்து அரசியல்வாதிகளின் மிரட்டல் பேச்சுக்களைவிட, இந்த ராம்தேவின் வெறிப்பேச்சு மிகவும் ஆபத்தானது. அதாவது பண்பாட்டுத் தளத்தில் ராம்தேவின் உயரத்தைப் புரிந்தவர்களுக்கு ராம்தேவின் கோரமுகம் முழுமையாகப் புரியும். இந்தப் பேச்சுக்காக அவர் மீது வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளது. ஆனால் அவர்மீது சிறு நடவடிக்கைகூட எடுக்க இயலாத நிலையில், தொட முடியாத இடத்தில் அவர் உள்ளார்.

பண்பாட்டுத்தளத்தில் தனக்கிருக்கும் வலிமையான அடிப்படையைக் கொண்டு, நூற்றாண்டு களைத் தொட்ட சில பன்னாட்டு வணிக நிறுவனங்களையே மிஞ்சி, வர்த்தகத் துறையில் சாதனை களைப் படைத்து வருகிறார். அதற்காக அவர் கையிலெடுத்த ஆயுதங்கள்தான் ‘சுதேசி’, ஆயுர்வேதம், இயற்கை.

### சுதேசியம் சூழ்ச்சியால் கற்பிக்கப்பட்டது

சுதேசி வர்த்தகம் பற்றிய தோழர் பெரியாரின் பார்வையைப் பார்ப்போம்.

“மனிதர்கள் உற்பத்தியான பழைய காலத்தில் - அவர்கள் மிருகப் பிராயமுடையவர்களாக இருந்த காலத்தில், ஒவ்வொருவரும் தத்தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தேடிக் கொண்டு தனித்தனியே வாழ்ந்து வந்தனர். அதன் பின் சிறிது அறிவு விளக்கமான பின்பு தனித்தனிக் குடும்பங்களாக இருந்து வாழ்க்கை நடத்த ஆரம்பித்தனர். அதன் பின் தனித்தனி சமூகங்களாகப் பெருகினர். இப்பொழுது எல்லா மக்களும் ஒரே சமூகமாக வாழ வகை தேடுகின்றனர்.

இதைப் போலவே தொழில்களும் கூட்டுறவு முறையில் வளர ஆரம்பித்தன. ஒருவனுக்கு வேண்டிய பண்டத்தை அவனே செய்து கொள்ளாமல், ஒவ்வொன்றை ஒவ்வொருவன் செய்யவும், ஒருவன் தான் செய்த பொருளை மற்றொருவனிடம் கொடுத்து தனக்கு வேண்டிய

பொருளை அவனிடமிருந்து பெற்றுக் கொள்ளவும் நேர்ந்தது.

இதுதான் பண்ட மாற்றுதல் என்னும் வியாபாரத்திற்குக் காரணமாகும். இந்த முறையில் தான் பொருளாதாரத் துறையும், தொழில் அபிவிருத்தியும் முன்னேற்றமடைய முடியும். மக்களுடைய தனித்தனி சமூக அமைப்பும் ஒழிந்து ஒரே சமூகமாக வழியும் உண்டாகும். இந்த முறைதான் தேசத்தின் முற்போக்குக்கு ஏற்ற வழியாகும்.

இதை விட்டு விட்டுத் திரு. காந்தியின் "தனக்குத் தானே உதவி செய்து கொள்ளுதல்" என்னும் தத்துவத்தை உடைய தேசியத்தைப் பின்பற்றும் தேசம், தொழில் முறையிலும், வியாபாரத் துறையிலும், பொருளாதாரப் பெருக்கத்திலும் வளர்ச்சியடைய முடியாமலும், மக்களுக்குள் சமத்துவமும் சகோதரத்துவமும் உண்டாக முடியாமலும், வருணாசிரம தரும வாழ்க்கையிலேயே இருந்து கொண்டு அதிவிரைவாகப் பழய மிருகப் பிராயத்திற்குச் செல்ல வேண்டியதுதான் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இதனால் தான் தேசியமும், சுயமரியாதையும் எந்தக் காலத்திலும் ஒன்று சேரமுடியாதென்றும் கூறி வருகின்றோம்.

தோழர் பெரியார் - குடி அரசு, 03.04.1932

## இராம்தேவின் பண்பாட்டு பலம்

யோகா என்ற மூடநம்பிக்கையான முறையை முதலில் ஒரு உடற்பயிற்சியாக கற்றுக்கொடுக்கத் தொடங்கிய ராம்தேவ், காலப்போக்கில் யோகாவாலேயே நீரிழிவு, இரத்த அழுத்தம், மனஅழுத்தம், உடல் பருமன் போன்ற சிக்கல்களையும் தீர்க்கலாம் என்று பரப்புரை செய்யத் தொடங்கினார். கேன்சர், எய்ட்ஸ், ஈரல், சிறுநீரகக் கோளாறுகள், புற்றுநோய் போன்ற எல்லா நோய்களையும் தனது யோகா முறையால் குணப்படுத்த முடியும் என எவ்விதக் கூச்சமும் இல்லாமல் பேசுகிறார். இலட்சக்கணக்கான மக்களும் அதை நம்பி அவரது யோகா மய்யங்களை நோக்கிச் செல்கின்றனர்.

ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள் வெளிப்படையாக இவரது ஆசிரமங்களுக்கு ஆதரவு அளிக்கின்றனர். ‘யோக் சந்தேஷ்’ என்ற இவரது மாத இதழ் இந்தியாவில் 11 மொழிகளில் வெளியாகிறது. ‘ஆஸ்தா,’ ‘ஆஸ்தா பஜன்’ என்று இரண்டு சேனல்களை நடத்தி வருகிறார். இந்த சேனல்கள் முழுநேரமும் இந்து வேதங்களிலுள்ள பண்பாடுகளைப் பரப்பும் பணியைச் செய்து வருகின்றன.

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் உட்பட உலகம் முழுவதிலும் ஆயிரக்கணக்கான யோகா பயிற்சி மய்யங்களை நடத்திவருகிறார். இந்த 2016 ம் ஆண்டில் இறுதிக்குள் ஹரியானாவில் மட்டும் 10,000 பயிற்சி மய்யங்களை உருவாக்கப் போவதாக அறிவித்துள்ளார். உலகெங்கிலும் பல இலட்சம் ஆதரவாளர்களைப் பெற்றுள்ளார்.

இவரது தனித்துவமான யோகாமுறை குறித்த மக்களின் மூடநம்பிக்கை, இந்து மதப்பண்பாட்டு பலம் இரண்டையும் அடிப்படையாக வைத்து தொழிற்துறையில் இறங்கிய ராம்தேவ், நெஸ்லே, கோல்கேட் - பாமாலிவ் போன்ற பெரும் பன்னாட்டு வணிக நிறுவனங்களையே ஒதுக்கி, ஓரம் கட்டியுள்ளார்.

**அயல்நாட்டு – பன்னாட்டு நிறுவனங்களின் இயந்திரங்களைப் பயன்படுத்தி, அயல்நாட்டு – பன்னாட்டு நிறுவனங்களின் உணவுப் பொருள் தயாரிப்புத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, அயல் நாட்டு மென்பொருட்களின் உதவியோடு, பன்னாட்டு சங்கிலித் தொடர் விற்பனை நிறுவனங்களின் கூட்டுறவோடு, தாமே பலநாடுகளில் சுரண்டல்களை நடத்திக் கொள்வதற்குப் பெயர்தான் ‘சுதேசியம்.’**

## இராம்தேவின் வணிக பலம்

பதஞ்சலி என்ற ராம்தேவின் வணிக நிறுவனம் 2014 - 2015 வருவாய் ஆண்டில் 300 மில்லியன் டாலர் வருவாயை ஈட்டியது. நடப்பு நிதியாண்டில் 750 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. 200 ஆண்டுகளாக பற்பசை வணிகத்தில் உலக அளவில் தனி இடத்தையும், 150 ஆண்டுகளாக இந்தியாவில் பற்பசை வணிகத்தில் பெரும் சக்தியாகவும் விளங்கும் அமெரிக்க நிறுவனம் கோல்கேட் பால்மாலிவ்.

இந்தியாவில் இந்நிறுவனத்தின் வணிகம் ஒவ்வோர் ஆண்டும் 10 சதவீதம் உயர்ந்து வந்துள்ளது. ஆனால் கடந்த நிதி ஆண்டில் பதஞ்சலி நிறுவனம் பற்பசை வணிகத்தில் இறங்கிய பிறகு வெறும் 1சதவீதம் மட்டுமே உயர்ந்துள்ளது. 9 சதவீத இழப்பைச் சந்தித்துள்ளது.

ஆண்டுக்கு 2000 கோடிக்கு மேலான வர்த்தகத்தைக் கையில் வைத்துள்ள இந்திய தேசிய வணிக நிறுவனம் டாபர் இந்தியா ப்ரைவேட் லிமிடெட். கோல்கேட்டுக்கு அடுத்த இடத்தில், 1970 லிருந்து பற்பசை வணிகத்தில் உள்ளது. இந்த நிறுவனங்கள் பதஞ்சலி நிறுவனத்தின் பற்பசை வரவால் மிகப்பெரும் இழப்பைச் சந்தித்தன என்று நியூயார்க் டைம்ஸ், எக்கனாமிக் டைம்ஸ் போன்ற ஏடுகள் தகவல் வெளியிட்டுள்ளன.

பற்பசை, சோப், ஷாம்பு, கூந்தல் எண்ணெய், பழச்சாறுகள், பிஸ்கட், நூடுல்ஸ் , அரிசி, கோதுமை, ரவை, மைதா, பருப்புவகைகள் என 800 வகையான பொருட்களைத் தயாரிக்க பதஞ்சலி சார்பில் 28 ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன. விநியோகத்திற்காக இந்தியாவில் மட்டும் 20,000 கிளைகள் உள்ளன.

## பன்னாட்டு நிறுவனத் தொடர்பு

சுதேசிப் பொருட்கள், சுதேசி வணிகம் என்ற அடிப்படையில் 'பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராக' என்ற முழக்கத்துடன் தொடங்கப்பட்ட பதஞ்சலி நிறுவனம், தற்போது Future Group என்ற பன்னாட்டு நிறுவனத்துடன் இணைந்துள்ளது.

Future Retail Ltd, Future Lifestyle Fashion Ltd., Future Consumer Enterprise Ltd., Future Innoversity Ltd., Future Supply Chains Ltd., Future Brands Ltd, Future Capital Holdings Ltd என பல்வேறு நிறுவனங்களை நடத்தி வரும் ஃப்யூட்சர் குழுமம் ஆண்டுக்கு சுமார் 1000 கோடி வருவாய் ஈட்டும் நிறுவனமாகும். மேற்கண்ட ஒவ்வொரு நிறுவனப் பெயருக்கும் கீழே மேலும் எண்ணற்ற வணிகங்களை மேற்கொண்டு வருகிறது ஃப்யூட்சர்.

**கூட்டுறவு முறையில், பொதுவுடைமை நோக்கில் மக்களுக்குத் தேவையான அனைத்து நுகர்பொருட்களும் கிடைப்பதற் கான வழிவகைகளைச் செய்ய வேண்டும். கூட்டுறவு இறைச்சி உற்பத்தி மய்யங்களைத் தோழர்கள் தொடங்க வேண்டும். கூட்டுறவு நுகர்பொருள் உற்பத்தி மய்யங்களைத் தொடங்க வேண்டும்.**

Generali Group என்ற இத்தாலி இன்ஸ்யூரன்ஸ் நிறுவனம், Staples Inc என்ற அமெரிக்க சங்கிலித் தொடர் நிறுவனம், Celio என்ற ஃப்ரான்ஸ் அழகுசாதனப் பொருட்கள் விற்பனை நிறுவனம், C & J Clark International Ltd என்ற இங்கிலாந்து நிறுவனம் என பல பன்னாட்டு நிறுவனங்களில் 50 சதமும், அதற்கு மேலும் பங்குகளை வாங்கி அந் நிறுவனங்களை நடத்தி வருகிறது ஃப்யூட்சர். இவைதான் பதஞ்சலி ராம்தேவின் 'சுதேசி' வேடத்தின் உண்மை முகம்.

## ஸ்ரீ ஸ்ரீ ஆயுர்வேதா: ஈஷா

பதஞ்சலி நிறுவனத்தின் வெற்றி, இந்தியாவில் ஏற்கனவே அரசியல், சமுதாய, இந்துப் பண்பாட்டு பலத்துடன் உலவும் பார்ப்பனப் பன்னாட்டுச் சாமியார் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரையும் வர்த்தகத்தில் இறங்க வைத்துள்ளது.

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரின் சகோதரி பானுமதி நரசிம்மன் அவர்களின் மகன் அரவிந்த் வர்ச்சாஸ்வியை உரிமையாளராகக் கொண்ட 'சுமேரு ஆயுர்வேதா' என்ற நிறுவனம் 'ஸ்ரீ ஸ்ரீ ஆயுர்வேதா ப்ராடக்டஸ்' என்ற பெயரில் இந்தப் பன்னாட்டு பக்தி வணிகத்தைத் தொடங்கியுள்ளது. ராம்தேவின் பதஞ்சலி நிறுவனத்தைப் போலவே நூற்றுக் கணக்கான நுகர்பொருட்களைத் தயாரித்து சந்தைப் படுத்தியுள்ளது.

இந்த 'சுமேரு'வும் 40 நாடுகளில் கிளை பரப்பியுள்ள Sumeru Software Solutions என்ற பன்னாட்டு மென்பொருள் நிறுவனத்தின் ஒரு அங்கமாகத்தான் உள்ளது. இந்த சுதேசிப் பொருட்களைத் தயாரிப்பதும் பன்னாட்டு நிறுவனம்தான். அவற்றை விநியோகிப்பதும் பன்னாட்டு நிறுவனம் தான். ஆம், பதஞ்சலி பொருட்களை விநியோகிக்கும் உரிமையைப் பெற்றுள்ள அதே ஃப்யூட்சர் குழுமம்தான் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரின் சுதேசித் தயாரிப்புக்களையும் உலகம் முழுவதும் விநியோகிக்கிறது.

ரவி சங்கர் மட்டுமல்ல; தமிழ்நாட்டில் கோவையைத் தலைமையிடமாகக் கொண்டு, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, கனடா, துபாய், டென்மார்க், தென் ஆப்ரிக்கா என உலகின் வளர்ந்த நாடுகள் உட்பட 150 கிளைகளைப் பரப்பி பன்னாட்டுச் சாமியாராகத் திகழும் ஈஷா சத்குருவும் பக்தி வணிகத்தில் இறங்கியுள்ளார். அவரும் நூற்றுக்கணக்கான நுகர்பொருட்களை இதே சுதேசி, ஆயுர்வேதம், இயற்கை எனும் ஆயுதங்களைக் கொண்டு, ஈஷா ப்ராடக்ட்ஸ் என்ற பெயரில் சந்தைப்படுத்தியுள்ளார்.

## வணிக மோசடிகள்

இந்த 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் லக்னோவில் உணவுப்பொருள் ஆய்வு அதிகாரிகள் நடத்திய ஆய்வில், பதஞ்சலி நிறுவனத்தின் தயாரிப்பு ஒன்றின் மோசடி அம்பலமாகியது. 2016 மார்ச் மாதத்தில் கடைகளில் நடத்தப்பட்ட ஆய்வில் 2016 அக்டோபரில் தயாரிக்கப்பட்டதாக அறிவிப்பு உள்ள பதஞ்சலித் தயாரிப்பு விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

Food Safety and Standards Authority of India ( FSSAI ) என்ற இந்திய உணவுப்பொருள் கட்டுப்பாட்டு நிறுவனத் தலைவர் ஆஷிஸ் பகுகுணா இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழுக்கு அளித்த பேட்டியில், "பதஞ்சலி நூடுல்ஸ் பாக்கெட்டுகளின் மேல் அச்சிடப்பட்ட FSSAI உரிம எண் போலியானது, எங்களிடம் அவர்கள் நூடுல்ஸ் தயாரிப்பிற்கான அனுமதியைப் பெறவில்லை என்று கூறியுள்ளார். இது குறித்து பதஞ்சலி நிறுவன இயக்குநரிடம் கேட்டபோது, "ஆயுர்வேதத் தயாரிப்புகளில் உள்ள சில விதிமுறை களின்படி அரசு அனுமதிபெறத் தேவையில்லை" என்று கூறியுள்ளார்.

இவ்வாறு இயற்கைப்பொருட்கள், ஆயுர்வேதத் தயாரிப்புகள் என்ற பெயரில் எந்த அனுமதியும் இல்லாமல், உணவுப்பொருள் தயாரிப்புக்கான எந்த விதிமுறைகளையும் கடைபிடிக்காமல் - மக்களின் நம்பிக்கை என்ற ஒன்றை மட்டும் அடிப்படையாக வைத்து பெரும் வணிகம் நடைபெறுகிறது. கடவுள் நம்பிக்கையைப் போன்று இந்த சுதேசிப் பொருட்களின் நம்பிக்கையும் நமக்குக் கேடாகவே வந்துள்ளன.

அயல்நாட்டு - பன்னாட்டு நிறுவனங்களின் இயந்திரங்களைப் பயன்படுத்தி, அயல்நாட்டு - பன்னாட்டு நிறுவனங்களின் உணவுப் பொருள் தயாரிப்புத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, அயல் நாட்டு மென்பொருட்களின் உதவியோடு, பன்னாட்டு சங்கிலித் தொடர் விற்பனை நிறுவனங் களின் கூட்டுறவோடு, தாமே பலநாடுகளில் சுரண்டல் களை நடத்திக் கொள்வதற்குப் பெயர்தான் 'சுதேசியம்.' அந்தச் சுதேசியத்திற்குத் துணையாக வருபவை ஆயுர்வேதமும், இந்துமதப் பண்பாடான யோகாவும் தான்.

**சுதேச வணிகம் X பரதேச வணிகம்**

இந்தியப் பகுதிகளில் வணிகச்சுரண்டலைத் தடையின்றிச் செய்ய வந்தவர்கள்தான் ஆங்கி-லேயர்கள். இதில் நமக்கு மாற்றுக் கருத்து இல்லை. வணிகத்திற்காக வந்தவர்கள், அதே வணிகத்திற்காக - சுரண்டலுக்காக அரசாட்சியையும் பிடித்தார்கள்.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் டூத் பேஸ்ட், டூத் ப்ரஷ், சேவிங் ப்ளேடு முதற்கொண்டு இரயில் போக்குவரத்து வரை பல்வேறு நுகர்பொருட்கள், சாதனங்கள் ஆங்கிலேயர்களால் நாம் பயன்படுத்தத் தொடங்கியவைதான். இவை எல்லாவற்றிலும் அந்நியநாட்டுப் பரதேச நிறுவனங்களின் இலாப வெறி அவசியம் இருக்கும். ஆனால் இவையெல்லாம் நம்மை உலக மக்களோடு மக்களாக - சரி சமமாக உணர வைத்தவை. இதில் மாற்றுக் கருத்தும் இருக்கலாம். நாம் விளக்க வருவது என்னவெனில்,

இப்படி வணிக நோக்கத்தோடு வந்தவர்கள்தான் நம்மைப் படிக்க வைத்தார்கள். 'தாமஸ் பெபிங்டன் மெக்காலே' என்ற ஆங்கிலேயே அதிகாரியின் காலத்தில் 1835 ல் தான் நமக்கு ஆங்கிலேயக்கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதுவரை இந்தியாவில் சமஸ்கிருத வேதங்களும், இராமாயண, மகாபாரத, புராண, இதிகாசங்களுமே கல்வியாக இருந்தன. அவற்றையும் பார்ப்பனர்கள் மட்டுமே கற்க முடிந்தது. அந்நிலையை மாற்றி, வரலாறு, அறிவியல், கணக்கு போன்ற பாடங்களை, பார்ப்பனர்கள் மட்டுமல்லாமல் நம்மவர்களும் படிப்பதற்கு வாய்ப்பை உருவாக்கியவர்கள் ஆங்கிலேயர்கள் தான்.

1835 வரை இந்தியாவில் கிரிமினல், சிவில் சட்டங்களாக இந்து மத மனுசாஸ்திரச் சட்டங்கள் தான் நடைமுறையில் இருந்தன. அதை மாற்றி மனு வுக்கு எதிராக கிரிமினல், சிவில் சட்டங்களைக் கொண்டு வந்தவர் இதே மெக்காலேதான்.

1828 லேயே ஆங்கிலேய ஆட்சியாளர்கள் தான் இந்தியாவில் இருந்த உடன்கட்டை ஏறுதல் என்ற வழக்கத்தைச் சட்டம் இயற்றித் தடுத்தனர்.1892 லிருந்து தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார, சமூக உயர்வுக்காக இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை வழங்கத் தொடங்கினார்.

1891 ல் குழந்தைத் திருமணத் தடுப்புச்சட்டம் கொண்டு வரப்பட்டது. 'ராவ் சாஹிப் ஹாபிலாஸ் சார்தா' என்ற ஆங்லேயரால் சட்ட முன்வரைவாக முன்வைக்கப்பட்ட இச்சட்டம், 1930 ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வந்தது.

கல்விக்கூடங்கள், மருத்துவமனைகள், மருத்துவக்கல்வி, தொழில்நுட்பக்கல்வி, அணைக் கட்டுக்கள், நீர்ப்பாசனத்திட்டங்கள், போக்குவரத்து வசதிகள் என அனைத்துமே வணிகம் செய்ய வந்தவர்களால் நமக்குக் கிடைத்தவைதான்.

பரதேச வணிகத்தால் நாம் அடைந்த முன்னேற்றங்கள் அனைத்தையும் இந்தச் சுதேச வணிகத்தால் இழக்கப் போகிறோம் என்பதை மட்டும் உறுதியாகக் கூறலாம். ஏனெனில் இந்தப் பன்னாட்டு பக்தி வணிக நிறுவனத் தலைவர்கள் அனைவருமே ஆர்.எஸ்.எஸ் ஸின் திட்டங்களைச் செயல்படுத்தும் விளம்பரத்தூதுவர்கள் தான் (*Brand ambassador*).

**பார்ப்பனப் பண்பாட்டுப் படையெடுப்பு**

> "...சமஸ்கிருதக் கல்வியைக் கட்டாயமாக்க வேண்டும். ஆயுர்வேதம் மட்டும் இந்தியாவின் மருத்துமாக அறிவிக்க வேண்டும்...
>
> ...பள்ளி, கல்லூரிகளில் பாலியல் கல்வியை நடத்தக்கூடாது அதற்குப் பதிலாக யோகாவைப் பாடமாக வைக்க வேண்டும். அப்போதுதான் பாலியல் வன்கொடுமைகள் தடுக்கப்படும்...
>
> ...இந்தியா முழுவதற்கும் இந்தி மட்டுமே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்.
>
> ...'பாரத மாதா கீ ஜே' சொல்ல மறுக்கும் இலட்சக்கணக்கானவர்களின் தலைகளை வெட்டி எறிந்திருப்பேன்...
>
> ...ஸ்ரீராம் என்பது எங்களுடைய முழக்கம், எல்லா ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும் அயோத்தியா என்பது ராமர் பிறந்த இடம்தான், முகம்மது நபி பிறந்த இடம் இல்லை..."

ராம்தேவின் மேற்கண்ட பேச்சுக்கள் அவரது இந்து, பார்ப்பனப் பண்பாட்டுப் படையெடுப்பை அறிவிக்கின்றன. உத்திரகாண்ட் காங்கிரஸ் ஆட்சிக் கவிழ்ப்பு, கருப்புப்பண எதிர்ப்பு நடவடிக்கைகள், ஊழல் எதிர்ப்பு உண்ணாவிரதங்கள் ஆகியவை ராம்தேவின் அரசியல் பலத்தை உணர்த்துகின்றன.

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரின் வாழும்கலை அமைப்பு, மார்ச் 11 முதல் மூன்று நாட்கள் யமுனை நதிக்கரையில் நடத்திய உலகக் கலாச்சாரத் திருவிழாவில் சுற்றுச் சூழல் விதிமுறைகள் மீறப்பட்டன. அதை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில் புதுடெல்லி பசுமைத் தீர்ப்பாயம் வாழும் கலை அமைப்பிற்கு 5 கோடி ரூபாய் அபராதம் விதித்தது. ஆனால், அப்படி இந்திய சட்டங்களை மீறி நடந்த விழாவுக்கு இந்திய ராணுவமே களப்பணியாற்றியது. இந்தியப் பிரதமர் மோடி விழாவில் பங்கேற்று உரையாற்றினார். இவையெல்லாம் இந்தக் கார்ப்பரேட் சாமியார்களின் அரசியல் பலத்தைக் காட்டுகின்றன.

**பரதேசப் பன்னாட்டு வணிகர்களால் உருவாக்கப்படும் பண்பாட்டுத் திணிப்பு என்பவை, பெரும்பாலும் இந்துப் பண்பாட்டுக்கு எதிராகவே இருப்பதால், தற்காலிகமாக ஒரு strategy யாக வணிகம் மட்டுமே நடத்தும் நிறுவனங்களின் பொருட்களையே பயன்படுத்தத் தொடங்க வேண்டும்.**

## இரண்டு வகையான எதிரிகள்

நமக்கு இரண்டு வகையான எதிரிகள். இரண்டுக்கும் பொதுவானது வணிகச் சுரண்டல். ஒன்று, இந்துப் பண்பாட்டைத் திணிக்கும் இந்து பக்தி வணிகர்கள். மற்றொன்று பன்னாட்டுப் பண்பாடுகளைத் திணிக்கும் பன்னாட்டு வணிகர்கள். இரண்டையும் ஒருசேர எதிர்த்துவிட இயலாது.

மேலும் பன்னாட்டு நிறுவனங்களால் அறிமுகப் படுத்தப்பட்ட பல பண்பாடுகள் பல நூற்றாண்டு களாக இந்து மதப் பண்பாட்டிற்கு எதிராகவே உள்ளன. காதலர் தினக் கொண்டாட்டங்கள் தான் தற்போது ஜாதி மறுப்புத் திருமணங்களை நடத்தி வருகின்றன. ஜாதி ஒழிப்புக்காக மூச்சு முட்டப் பேசுபவர்கள்கூடப் பெரும்பாலும் சொந்த ஜாதிக்குள் தான் திருமணம் செய்கின்றனர். இந்த ஜாதி ஒழிப்புப் பேச்சாளர்களைவிட, சராசரி, காதலர் தினக் கொண்டாட்ட இளைய சமுதாயம் நிறைய ஜாதி மறுப்புத் திருமணங்களை நடத்திக்கொண்டுள்ளது.

லிவிங் டு கெதர், கம்பேனியன்ஷிப், லெகின்ஸ், ஜீன்ஸ், டாப்ஸ், நிறுவனத்தின் உரிமையாளரைக் கூட பெயர் சொல்லி அழைப்பது போன்ற பண்பாடு களையும் - வெளிநாட்டுத் தனியார் நிறுவனங்களில் இடஒதுக்கீடு போன்றவற்றையும் - இந்து மதவாதிகளும், அனைத்து மதவாதிகளும், பூணூல் கம்யூனிஸ்ட்டுகளும் ஒரே நிலையில் எதிர்க்கிறார்கள்.

மேற்கத்தியப் பண்பாடுகள், மதத்திற்கு எதிரானவை என்று மதவாதிகள் எதிர்க்கிறார்கள். "முதலாளித்துவம் பெண்ணைக் கவர்ச்சியாகக் காட்டுகிறது" என்று பொதுவுடைமைக்காரர்கள் எதிர்க்கிறார்கள். மேற்கண்ட உடைப் பண்பாடுகள் கவர்ச்சியானவை என்று பொதுவுடைமையாளர் களும் முடிவு செய்துள்ளார்கள் என்பதைத்தான் புரிந்து கொள்ள முடிகிறது. மக்களுக்கு வசதியானவை என்ற கோணத்தில் பெரியாரியலாளர்களைத் தவிர வேறு எவரும் பார்ப்பதில்லை.

அதேபோல தரகு முதலாளித்துவம் என்று பொதுவுடைமையாளர்கள் பார்க்கிறார்கள். ஒரே பன்னாட்டு நிறுவனம் வெளிநாடுகளில் இடஒதுக்கீடு வழங்குதையும் - அதே நிறுவனம் இந்தியாவில் இடஒதுக்கீடு வழங்க முடியாததையும் பெரியார் தொண்டர்கள் தான் புரிந்து வைத்துள்ளார்கள். எனவேதான் தனியார்துறை இடஒதுக்கீட்டுக்காகக் குரல் கொடுக்கிறார்கள்.

எனவே, பரதேசப் பன்னாட்டு வணிகர்களால் உருவாக்கப்படும் பண்பாட்டுத் திணிப்பு என்பவை, பெரும்பாலும் இந்துப் பண்பாட்டுக்கு எதிராகவே இருப்பதால், தற்காலிகமாக ஒரு strategy யாக வணிகம் மட்டுமே நடத்தும் நிறுவனங்களின் பொருட்களையே பயன்படுத்தத் தொடங்க வேண்டும். எடுத்துக் காட்டாக, பதஞ்சலி நூடுல்ஸ்க்குப் பதிலாக, வழக்கமான நெஸ்லேயின் மேகி நூடுல்ஸ். இந்த நூடுல்ஸ்களும், அதுபோன்ற பல நுகர்பொருட்களும் உடலுக்குத் தீங்கானவை அல்லது உடலுக்கு உகந்தவை என்ற விவாதத்திற்குள் போகவில்லை. அது வேறு வகையான விவாதம். இந்தப் பொருட்களைப் பயன்படுத்துபவர்களுக்கு நாம் பரிந்துரைப்பது இந்த நிலைப்பாடு.

## பார்ப்பனர்களுக்கான பொற்காலம் வருகிறது?

மேற்கண்ட சாமியார்களின் வணிக வெற்றியானது, இன்னும் அவர்கள் அளவுக்கு வணிகத்தில் இறங்காத மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார்,அமிர்தானந்தமயி, கர்நாடக ஆன்மீக மடத் தலைவர்கள், காஞ்சிபுரம் கொலைக்குற்றச் சாமியார்கள், போன்றவர்களுக்கும்-சாய்மடங்கள், சைவ மடங்கள், கேரளாவின் சபரிமலை நிர்வாகம் போன்றவைகளுக்கும் ஆசையைக் காட்டியிருக்கும். அனைத்துச் சாமியார்களும் வணிகத்தில் இறங்கினால் இந்தியா இந்து ராஷ்ட்ரமாக அழியும் என்பது உறுதி.

தோழர் பெரியர், அம்பேத்கர், பூலே, சாகுமகராஜ் போன்ற தலைவர்களின் உழைப்பு முற்றிலும் அழியப்போகிறது. குப்தர்கள் நடத்திய பார்ப்பனர்களுக்கான பொற்கால ஆட்சிக்காலமாக நமது எதிர்காலம் அழியும் நேரம் நெருங்குகிறது. அதை எதிர்கொண்டு போராடவேண்டும்.

தெலைநோக்கு- தொடர்திட்டங்களாக, மக்களின் அன்றாட நடைமுறை வாழ்க்கையில், இந்து மதத்தின் செல்வாக்கு அழிக்கப்பட வேண்டும். இந்துப் பண்பாட்டு நடைமுறைகள் அழிக்கப்பட வேண்டும். அதற்கான பரப்புரைகள் முழுவீச்சில் தொடங்க வேண்டும். அதற்காக உழைப்பதாகச் சொல்லிக் கொள்ளும் அமைப்புகளும், அதன் தலைவர்களும் முதலில் தமது இயக்கத் தோழர்களின் வாழ்க்கையிலிருந்து இந்துப் பண்பாட்டைத் தூக்கி எறியும் வேலைத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

## கூட்டுறவு நுகர்பொருள் உற்பத்தி மய்யங்கள்

முதல்கட்டமாக, இதுபோன்ற பன்னாட்டுச் சாமியார் நிறுவனங்களின் நுகர்பொருட்களுக்கு எதிரான பரப்புரைகளைத் தொடங்க வேண்டும். ஒட்டுமொத்த இன அழிவுக்கு வழிவகுக்கும், இந்துச் சாமியார்களின் நுகர்பொருட்களுக்குப் பதிலாக - பொருளாதாரச் சுரண்டலை மட்டும், வணிகம் மட்டும் நடத்தும் நிறுவனங்களின் நுகர்பொருட்களையே பயன்படுத்த வேண்டும்.

அடுத்த கட்டமாக, கூட்டுறவு முறையில், பொதுவுடைமை நோக்கில் மக்களுக்குத் தேவையான

அனைத்து நுகர்பொருட்களும் கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும். இயற்கை விவசாயத்தில் ஆர்வமுள்ள பலர் இணைந்து, கூட்டுறவுக் காய்கறி உற்பத்தி மய்யங்களைத் தொடங்கிச் செயல்படுத்தி வருகின்றனர். அதுபோல கூட்டுறவு இறைச்சி உற்பத்தி மய்யங்களைத் தோழர்கள் தொடங்க வேண்டும். கூட்டுறவு நுகர்பொருள் உற்பத்தி மய்யங்களைத் தொடங்க வேண்டும்.

இந்துப் பண்பாட்டிற்கு எதிரான இயக்கங்கள், வழக்கம்போல பரப்புரைகள், ஆர்ப்பாட்டங்கள், அறிக்கைகள் போன்றவற்றை நடத்திக்கொண்டே, இதுபோன்ற கூட்டுறவு நிறுவனங்களை உருவாக்க இளைஞர்களுக்கு வழிகாட்ட வேண்டும். துணை நிற்க வேண்டும்.

யோகா என்ற ஆபத்தான பார்ப்பன ஆயுதத்தை நிராகரிக்க வேண்டும். அதற்குப் பதிலாக, தாய்ச்சி, கராத்தே, குங்ஃபூ, நடைப்பயிற்சி போன்றவைகளைப் பரிந்துரைக்க வேண்டும்.

ஆயுர்வேதம், இயற்கை உணவு, இயற்கை விவசாயம் அனைத்தையும் சந்தேகப்பட வேண்டும். அதைப் பரப்புவோரின் பின்னணிகளை ஆய்வு செய்ய வேண்டும். இயற்கை உணவு என்ற பெயரில் சைவத்தை மட்டுமே பரப்புவோரிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். 'சைவ இயற்கை'யின் ஆபத்து குறித்து அறியாதவர்களிடம் ஆடு, மாடு, கோழி, பன்றி களையும் இணைத்து இயற்கையை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தைப் புரியவைக்க வேண்டும்.

நாட்டுமாடு, நாட்டுப்பால், நாட்டுக் கோழி, நாட்டுக் கம்பு, நாட்டுச் சோளம், பாரம்பரிய விதை, சிறுதானிய உணவு, ஜல்லிக்கட்டு, வேட்டி, சேலை, பாவாடை, தாவணி என்று பேசுவோரின் பின்னணிகள் ஆராயப்பட வேண்டும். அவர்களது அரசியல், சமுதாயச் செயல்பாடுகளைக் கவனிக்க வேண்டும். அவர்களின் நிலைப்பாடுகள் மீது பாரபட்சமற்ற, சார்பற்ற ஆய்வுக் கண்ணோட்டம் வேண்டும்.

இறுதியாக, ஒன்றை நினைவு படுத்த வேண்டியுள்ளது. 1933 ல் ஈரோட்டில் நடைபெற்ற ஈரோடு சுதேச வர்த்தகர் சங்க ஆண்டுவிழாவிலேயே பெரியார் கூறகிறார்.

> "சுதேசியம் என்பது ஒரு அருத்தமற்றதும், சுயநலம் நிரப்பிய சூட்சியால் கற்பிக்கப் பட்டதுமான வார்த்தை என்பது எனது அபிப்பிராயம்....
>
> ...பரதேசம் ஒன்று இருக்கின்றது என்று தெரியாத காலத்திலும் பரதேச விஷயங்கள் நமக்கு எட்டுவதற்கு மார்க்கமில்லாதிருந்த காலத்திலும் எல்லாம் சுதேசமாகத் தான் இருந்து இருக்கும். அப்படி இருந்த இந்த நாடு இன்று ஏன் பரதேசியத்தால் கவரப்பட்டுக் கிடக்கிறது? சுதேசியம் என்கின்ற அபிமானத்தை மாத்திரம் கட்டி அழுதோமே அல்லாமல் பரதேசியம் வந்து புகாமல் இருக்கத் தகுந்த மாதிரி நடந்து கொள்ள நமக்கு யோக்கியதையில்லாமல் போய்விட்டது. நமது சுதேசியம் நமது முற்போக்கையும் அறிவு விருத்தியையும், புதுமையையும் தடைப்படுத்தி, விஷயங் களுக்குப் புதிய குணவிசேஷங்களை உண்டாக்க மார்க்கமில்லாமல் போய் விட்டது...
>
> ...உண்மையான சுதேசியத்தை விரும்பி அது இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படத்தக்க வழியில் சுதேசியமாக்கவேண்டும் என்று இருந்தோமே யானால் கடைசியாக இன்றைய வியாபார முறையை அழித்து முன்காலத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் பண்டமாற்ற முறையைப் புதுப் பிக்க வேண்டும். அல்லது லாபத்தைக் குறைத்து நிர்ணயிக்க வேண்டும். அப்போது தான் வியாபாரம் ஒரு யோக்கியமான சமாதானமான தொழிலாகும்...
>
> ...அதில்லாமல் சுதேசியம் பேசுவதும், வியாபார விருத்தி முன்னேற்றம் பேசுவதும் ஏழைகளை, பாடுபடுகின்றவர்களை இன்னம் அதிகமாக எப்படி வஞ்சிப்பது என்பதேயாகும் என்பதோடு இப்போதைய வியாபார முறைக்கு வேறு சரியான வெள்ளையான பெயர் கொடுக்க வேண்டுமானால் பகல் கொள்ளை என்ற வார்த்தை தான் உபயோகிக்க வேண்டும்.
>
> *- தோழர் பெரியார், குடி அரசு, 28.04.1933*

**பரதேச வணிகத்தால் நாம் அடைந்த முன்னேற்றங்கள் அனைத்தையும் இந்தச் சுதேச வணிகத்தால் இழக்கப் போகிறோம் என்பதை மட்டும் உறுதியாகக் கூறலாம். ஏனெனில் இந்தப் பன்னாட்டு பக்தி வணிக நிறுவனத் தலைவர்கள் அனைவருமே ஆர்.எஸ்.எஸ்ஸின் திட்டங்களைச் செயல் படுத்தும் விளம்பரத்தூதுவர்கள் ( Brand ambassador ).தான்.**

**சுதேசத் தயாரிப்புகளைப் புறக்கணிப்போம்!**
**பரதேசத் தயாரிப்புக்களைப் பயன்படுத்துவோம்!**

**சான்றுகள்:**


1.தமிழ் இந்து - 04.04.16 2.Times Of India - 21.04.15
3.Economic Times - 22.04.14, 04.04.13
4.Business Standard - 25.09.13, 02.04.16
5.DNA India - 12.03.16 6. Indian Express - 21.09.15
7.http://www.news18.com/news/india/ramdev-booked-over-bharat-mata-ki-jai-slogan-remark-1229427.html
8.http://www.nytimes.com/2016/04/02/world/asia/a-yoga-master-the-king-of-baba-cool-stretches-out-an-empire.html?_r=0
9.http://www.bbc.com/tamil/india/2014/04/140428_ramdevcase
10.http://periyarwritings.org

23 ஆம் பக்க தொடர்ச்சி

பெரியார் 1930களிலேயே இந்தியா ஒரு நேசனா? என்ற கேள்வியை எழுப்பினர். 01.06.1930 குடி அரசு ஏட்டில் இச்செய்தி பதிவாகியுள்ளது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது நடைபெற்ற தமிழர் எழுச்சிப் பயணத்தின் இறுதி நாளில் 11.09.1938 கடற்கரைக் கூட்டத்தில் தலைவராக இருந்த மறைமலையடிகள் முதலில் பேசினார், அடுத்து நாவலர் சோமசுந்தர பாரதியார் பேசினார், அடுத்து இறுதியில் பெரியார் பேசினார். அன்று மூவரும் தனித்தமிழ் நாடு முழக்கமிட்டனர். பெரியார் இறுதியில் பேசினார் என்பதற்காக அவர்களைப் பார்த்து காப்பி அடித்தார் என்று கூறுவதா?

இந்த நடைப்பயணத்தை ஏற்படுத்தியவர்கள் முழுமையாகச் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் ஒரு சிலர் கலந்து கொண்டனர். இந்த ஊர்வலம் தொடங்கப்படுவதற்கு முன்பே ஆகஸ்டு மாதம் திருச்சியில் நீதிக்கட்சி தலைவர்களில் ஒருவரான தி.பொ.வேதாசலம் தலைமையில் 'தமிழ்த் தேசவிடுதலைச் சங்கம்' தொடங்கப்பட்டது.

இந்த ஊர்வலத்தின் முழக்கமும் ஒன்றரை லட்சம் மக்கள் கூட்டமும் இத்தலைவர்களை அப்படி முழங்கச் செய்தது. ஆனால் பெரியார் அப்படியல்ல அதற்கு முன்பும் பின்பும் தொடர்ச்சியாக முாக்க மிட்டார். மறைமலையடிகள் நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தியதில்லை.

மறைமலையடிகள் தம் இறுதி காலம் வரையில் - தாம் எழுதிய நூல்கள் அனைத்திலும் நம் இந்திய நாடு, நம் இந்திய மக்கள், நம் இந்து மக்கள், என்றே எழுதியுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேரவையில் 16.09.1943 இல் பேருரை ஆற்றியபோது கூட்டத்தில் அடிகளை ஒர் அன்பர் எழுத்தின் வழியாக திராவிடநாடு பற்றித் தங்கள் கருத்து யாது? என ஒரு கேள்வி கேட்டார். அதற்கு அடிகள் விடை அளிக்கையில், இந்தியா முழுவதுமே திராவிடநாடு தான் என்று கூறினார்...இந்திய ஒருமைப்பாட்டை அவர் தம் பேச்சிலோ - எழுத்திலோ என்றும் எங்கும் எதிர்த்ததில்லை.

சும்மா ஒரு நாள் பேசியவரை தலைவர் என்கிறார். தனித்தமிழ்நாடு தான் தன்னுடைய இலட்சியம் என்று இறுதி வரை உறுதியாக இருந்த பெரியாரைத் தமிழ் இனத்தின் பகைவர் என்று பெ.மணியரசன் கூறுகிறார். இது என்ன நியாயம்?

### தனித்தமிழ் இயக்கம் தொடங்கினாரா?

மறைமலையடிகள் 1916 இல் தனித்தமிழ் இயக்கத்தை ஒரு அமைப்பாகத் தொடங்கவில்லை என்பது தெரியுமா? மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கம் வெற்றியடைய பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் தான் காரணம் என்பது தெரியுமா? பார்ப்பனரல்லாதார் இயக்கம் தொடங்கப்பட்ட பிறகு, படித்த தமிழரிடையே ஏற்பட்ட பொதுவான மனமாற்றம் தான் இதற்குக் காரணம் எனலாம்.

சும்மா ஒரு நாள் பேசியவரை தலைவர் என்கிறார். தனித்தமிழ்நாடுதான் தன்னுடைய இலட்சியம் என்று இறுதி வரை உறுதியாக இருந்த பெரியாரைத் தமிழ் இனத்தின் பகைவர் என்று பெ.மணியரசன் கூறுகிறார். இது என்ன நியாயம்?

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்த உமாமகேஸ்வரன் நீதிக்கட்சியின் தஞ்சை மாவட்டச் செயலாளர் என்பது தெரியுமா? நீதிக்கட்சி 1917 யிலேயே இந்தியையும், சமஸ்கிருதத்தையும் எதிர்த்தது என்பது தெரியுமா?

சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1925 வரை சமஸ்கிருதத்தை ஒரு பாடமாக எடுத்து படிக்காமல் தமிழ் வித்துவான் அதாவது புலவர் படிப்பு படிக்க முடியாது என்று இருந்ததை ஒழித்துக் கட்டித் தமிழ்மொழிக்கு விடுதலை வாங்கிக் கொடுத்து நீதிக்கட்சி ஆட்சி என்பது தெரியுமா?

அவ்வளவு ஏன் மருத்துவம் படிக்க சமஸ்கிருதம் தெரிந்து இருக்க வேண்டும் என்று இருந்ததை ஒழித்துக்கட்டி தமிழர்கள் மருத்துவர் ஆக வழி செய்தவர் நீதிக்கட்சின் முதலமைச்சர் பனகல் அரசர் என்பது தெரியுமா?

மறைமலையடிகள் 1929 வரை மும்மொழிக் கல்வித்திட்டத்தை ஆதரித்தார் என்பது தெரியுமா? சுயமரியாதை மரியாதை இயக்கம் செங்கல்பட்டில் முதல் சுயமரியாதை மாநாட்டில் சமஸ்கிருதத்தை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றியது. அதன் பிறகுதான் மறைமலையடிகள் இருமொழிக் கொள்கைக்கு மாறினார் என்பது தெரியுமா?.

மறைமலையடிகள் இந்தியாவின் பொது மொழியாக ஆங்கிலம் தான் இருக்க வேண்டும் என்று கூறி உள்ளார் என்பது தெரியுமா? மறைமலையடிகள் தன்னுடைய நாட்குறிப்பைக் கூட ஆங்கில மொழியிலேயே எழுதி உள்ளார் என்பது தெரியுமா?

மறைமலையடிகள் தன்னுடைய பெயரை கூட இறுதி வரை மாற்றிக்கொள்ளவில்லை. தாம் பதிப்பித்த அனைத்து நூல்களிலும் வேதாசலம் என்றே ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டு வந்தது தெரியுமா?

சான்று: நம்பி ஆருரன் எழுதிய, 'தமிழ் மறுமலர்ச்சியும் திராவிடத்தேசியமும்'

பெரியாரைத் தமிழ் இனத்தின் பகைவர் என்று கூறும் பெ.மணியரசன் மறைமலையடிகளைப் பற்றி என்றாவது ஆய்வு செய்து எழுதியது உண்டா? மறைமலையடிகளைத் தலைவராகக் கொண்ட உங்கள் தமிழ்த் தேசியம் எங்கே போகிறது?

முன் அட்டை உள்பக்க தொடர்ச்சி

ஆக, இதற்கு முடிவ கட்டுவது யார்? கமலஹாசன் போன்றவர்கள்தான் முடிவெடுக்க வேண்டும். இதில் பெரிய கொடுமை என்ன வென்றால் இந்தப் பெயரை கமலிடம் பரிந்துரைத்தவர் இளைய ராஜாவாம். தி தமிழ் இந்துவில் இந்தச் செய்தி வந்துள்ளது. அது உண்மை என்றால் இளைய ராஜாவும் கடும் கண்டனத்துக்கு உரியவராவார்.

### ஜாதித்தொழிலை வலியுறுத்தும் கமல்

இந்த சபாஷ் நாயுடு சர்ச்சை தொடங்குவதற்கு முன்பே குலத்தொழிலை - ஜாதிமுறையை வலியுறுத்தும் விளம்பரப் படம் ஒன்றிலும் கமல் நடித்துள்ளார். போத்தீஸ் ஜவுளி நிறுவனத்தின் சாமுத்ரிகா சுபமுகூர்த்தப் பட்டு ஆடைக்காக வெளியிடப்பட்ட இந்த விளம்பரத்தைத் திரைப்பட இயக்குநர் கே.எஸ்.மணிகண்டன் இயக்கியுள்ளார். Phoenixfilms In என்ற விளம்பர நிறுவனம் இதைத் தயாரித்துள்ளது. அந்த விளம்பர வரிகளைப் பாருங்கள்.

“போத்தீஸ் சாமுத்ரிகா பட்டுப்பத்தி உங்களுக்குச் சொல்றதுக்கு முன்னாடி, அது என்னன்னு நான் தெரிஞ்சக்கனும் இல்லீங்களா?... அட்டா இதுக்குள்ள எத்தன விசயம் இருக்கு? எவ்வளவு சரித்திரம் இருக்கு? ஐந்திழைப் பட்டு, அசல் வெள்ளி ஜரிகை, காஞ்சிபுரம் பட்டு... முக்கியமா... பரம்பரை நெசவாளர்கள் நெய்த பட்டு. சர்வ லட்சணமும் கொண்ட பட்டுன்னா... அது, போத்தீஸ் சாமுத்ரிகா பட்டுதான். கல்யாணம் ஆகிற ஒவ்வொரு பொண்ணுக்கும் இதைவிடச் சிறந்த முகூர்த்தப்பட்டு கிடைக்கவே கிடைக்காது.”




“பரம்பரை நெசவாளர்கள் நெய்த பட்டாம்...” ஏற்கனவே பாரம்பரியம், பண்பாடு என்ற வார்த்தைகளில் மயங்கி, தமிழன் மீண்டும் இந்துப் பண்பாட்டையும், ஜாதி முறைகளையும் தீவிரமாகக் கடைபிடிக்கத் தொடங்கிவிட்டான். மேலும் அதை தீவிரமாக்கும் முயற்சியாக இது போன்ற விளம்பரங்கள் வருகின்றன.

**இன்று பரம்பரை நெசவாளர்கள் நெய்த பட்டு என்று ட்ரெண்ட் உருவாக்குவார்கள். அடுத்து பரம்பரையாகச் செருப்புத் தைப்பவர்கள் தயாரித்த செருப்பு, பரம்பரை சலவைத் தொழிலாளர்கள் செய்த சலவை, பரம்பரை அர்ச்சகர்கள் அர்ச்சனை செய்யும் இடம் என்றெல்லாம் ட்ரெண்ட் உருவாகலாம்.**

அது என்ன பரம்பரை நெசவாளர்கள்? நெசவு நெய்யும் தொழிலை பரம்பரை பரம்பரையாகச் செய்துவரும் ஒரு குறிப்பிட்ட ஜாதி மக்கள் என்பதைத் தானே சொல்ல வருகிறீர்கள்? ஒரு தொழிலில் ஒரு குறிப்பிட்ட ஜாதி மட்டுமே இருக்குமானால், அது எந்தத் தொழிலாக இருந்தாலும், அந்தத் தொழிலை அழிக்க வேண்டும் அல்லது அந்தத் தொழிலில் அனைத்து ஜாதியினரும் ஈடுபடும் உரிமையை நிலைநாட்ட வேண்டும்.

மலமள்ளுதல், துப்புரவுப் பணிகள் போன்ற பல்வேறு அடிப்படைப் பணிகளிலும் மலம் கழிக்கும் அனைத்து ஜாதியினரையும், கழிவுகளை உருவாக்கும் அனைத்து ஜாதியினரையும் ஈடுபடுத்த வேண்டும். அந்த நிலை உருவாக கலை, இலக்கியங்கள் பயன்படவேண்டும். ஆனால் அதற்கு நேர் எதிராக, ஒவ்வொருவரும் அவரவர் ஜாதியைத்தான் செய்ய வேண்டும் என்பதை அனைவரது எண்ணத்திலும் திணிக்கும் வேலையைத் தான் இந்த போத்தீஸ் பட்டு விளம்பரம் செய்கிறது.

இன்று பரம்பரை நெசவாளர்கள் நெய்த பட்டு என்று ட்ரெண்ட் உருவாக்குவார்கள். அடுத்து பரம்பரையாகச் செருப்புத் தைப்பவர்கள் தயாரித்த செருப்பு, பரம்பரை சலவைத் தொழிலாளர்கள் செய்த சலவை, பரம்பரை அர்ச்சகர்கள் அர்ச்சனை செய்யும் இடம் என்றெல்லாம் ட்ரெண்ட் உருவாகலாம்.

மனுசாஸ்திரத்தை எதிர்த்துப் பாட்டெழுதுவது பெரிதல்ல. தமது வாழ்வில், தமது செயலில் மனுசாஸ்திரத்துக்கு எதிரான பழக்க வழக்கங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். காசு கிடைக்கிறதே என்பதற்காக குலத்தொழிலை அங்கீகரித்துப் பேசுவதும், பிறகு போராளி வேடம் போடுவதற்காக மனுசாஸ்திரத்தை எதிர்த்துப் பேசுவதும் நேர்மையற்ற காரியங்கள்.

கமலஹாசன், போத்தீஸ் நிறுவனம், இயக்குநர் கே.எஸ் .மணிகண்டன், Phoenixfilms விளம்பர நிறுவனக்குழு ஆகிய அனைவரும் இதற்கு முயற்சி எடுத்து அந்த விளம்பரத்தை நீக்க வேண்டும்.

– ஆதாரம்: தி தமிழ் இந்து 29.04.16

# புதிய குரல் எட்டாவது சந்திப்பு

அன்பிற்கினிய தோழர்களே! வணக்கம்!!

புதிய குரல் எட்டாவது சந்திப்பு வருகின்ற மே மாதம் 27, 28, 29ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. புதியகுரல் சந்திப்பில் கலந்துகொள்ளும் தோழர்கள் முன்பணம் ஒரு நபருக்கு ரூபாய் 500/- செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**நிகழ்வு இடம்:** பல்மேரா சென்டர்,
காளீஸ்வரி தியேட்டர் அருகில்,
கோட்டவிளை(கேரளா), களியக்காவிளை,
குமரி மாவட்டம்.

**தொடர்வண்டி நிறுத்தம்:** குழித்துறை.
இங்கிருந்து கூட்டம் நடைபெறும் இடம் செல்ல 8 கி.மீ. குழித்துறையிலிருந்து களியக்காவிளைக்கு பேருந்து வசதி உள்ளது.

**பேருந்து நிறுத்தம்:** களியக்காவிளை.
இங்கிருந்து கூட்டம் நடைபெறும் இடம் 1.5 கி.மீ. ஆட்டோ கட்டணம் ரூ.40/- நாகர்கோவிலில் இருந்து வருவதாக இருந்தால், திருவனந்தபுரம் செல்லும் பேருந்தில் ஏறி களியக்காவிளையில் இறங்க வேண்டும். இங்கிருந்து கூட்டம் நடைபெறும் இடம் 1.5 கி.மீ வரை இருக்கும். ஆட்டோ கட்டணம் ரூ.40/-

**முன்பணம் செலுத்த:**

P.Muruganandam, SB A/C NO. 452592795,
INDIAN BANK, Neruji Nagar Branch, Dindigul.
IFSC CODE: IDIB000D038.

பணம் செலுத்தும் தோழர்கள், செலுத்திய விவரங்களை கீழ்க்கண்ட செல் எண்ணுக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுடன்,
விஜி 94862 27822, 94897 03989.




# காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

**அட்டை பல வண்ணத்தில்:**

| | |
|---|---|
| பின்பக்க அட்டை : | 5000.00 |
| முன் அட்டை உள்பக்கம் : | 3000.00 |
| பின் அட்டை உள்பக்கம் : | 3000.00 |
| அட்டை உள்பக்கம் 1/2 பக்கம் : | 1500.00 |

கருப்பு வெள்ளை: (ஏட்டின் உள்பக்கம்)

| | |
|---|---|
| 1 பக்கம் : | 1500.00 |
| 1/2 பக்கம் : | 750.00 |

**விளம்பர தொடர்புக்கு:**
பல்லடம் சி.விஜயன் 99427 30983
ஜீவாநகர் குமார் 99944 77013

**விளம்பரம் மற்றும் ஆண்டுச்சந்தா**

ஆண்டுச்சந்தா : **250.00**
தொடர்புக்கு:
திருப்பூர்வேணி
77084 58086



Owner and Publisher by : C.Vijayaragavan 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001.TN
Consulting Editor: C.Ragavan Kaattaaru2014@gmail.com